HELLO MOBILE WORLD
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

அறைவு 03 இயம் 22 December 20-26, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20 விலை : 30.00

English Classes
School Subject
Grade 01 to A/L
புதிய வகுப்புக்கள் 2015 ஜனவரி ஆரம்பம்
Conducted by Experience Teachers from British Council
35/4 DockYard Road Trincomalee 0779018047

# உரிமைகள் இல்லையேல் சகவாழ்வு இல்லை!!!



மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் மீளிணக்கமும் ஒருமைப்- பாடும் எப்போதுமே சாத்தியப்படாது என திருகோணமலையில் நடைபெற்ற மனித உரிமைத் தின விழாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலைக் கிளையினால் உலக மனித உரிமைத் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட விழாவில் ஒட்டுமொத்த மக்களின் குரலாக, இலங்கை அரசை நோக்கி மக்கள் விடுத்த செய்தியாக - மனித உரிமைகளை மீளவலியுறுத்தினால் மட்டுமே மீளிணக்கமும் சகவாழ்வும் சாத்தியமாகும்- என்ற இறுதிச் செய்தியை வளவாளர்களில் ஒருவராகக் கலந்துகொண்டிருந்த மலைமுரசின் ஆசிரியர் இ.ஸ்ரீஞானேஸ்வரன் மக்களின் சார்பில் விடுத்தார்.

- மனித உரிமைகள் 365 நாட்களும் - என்ற தொனிப்பொருளில் சர்வதேச ரீதியில் அனுட்டிக்கப்பட்ட மனித உரிமை தினத்தை முன்னிட்டு திருகோணமலைப் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் "மீளிணக்கமும் சகவாழ்வும்" எனும் தொனிப்பொருளில் சுழலும் கருத்துக்களமொன்றை நடத்தியது.

திருகோணமலை அலுவலகத்தின் இணைப்பாளர் செல்வி உ.குகதாசன் 17

## கிழக்கு வம்சாவழி மாணவன் இலண்டனில் அகாலச் சாவு



உதைபந்தாட்டப் பயிற்சியின் போது இலங்கையின் கிழக்கை வம்சாவழியாகக் கொண்ட மாணவனொருவன் அகாலச் சாவடைந்துள்ளார்.

இலண்டன் ஹரோ மாநகரத்தில் உள்ள வைட்மோர் உயர்நிலைப் பாடசாலையில் கல்வி கற்று வந்த ஜெயக்குமார் சுஜிந்த் என்ற 14 வயது மாணவனுக்கே இக்கதி நேர்ந்துள்ளது. பந்து 17

## "பேபி 81" உறுதிமொழிகள் காற்றில்



டிசம்பர் 2004, 26ம் திகதி இலங்கையில் கிழக்கையும் சுனாமி தாக்கி ஏற்படுத்திய அனர்தத்தின் பின்னரும் அனர்தம் நிங்காத வாழ்வை அடுத்த சில மாதங்கள் எதிர்கொண்ட சர்வதேசத்திலும் புகழ் வாய்ந்த குழந்தையான அபிலாஸ் தனது குறி பொறியியலாளர் ஆவதே

## கும்புறுபிட்டியில் இரண்டாவது உப்பளம்

### மக்கள் எதிர்ப்பு – மா. உ. ஜெனார்த்தனன் களத்தில்

- பிரதீசன் -



மக்களின் எதிர்ப்பின் மத்தியில் இடம் பெறும் எந்தவொரு நடவடிக்கையினையும் நாம் ஆதரிக்கமாட்டோம் என கிழக்குமாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கும்புறுப்பிட்டி சின்னக்கரச்சி பகுதியில் அமையவிருக்கும் தனியார் உப்பளக் கம்பனிக்கான அனுமதி மீண்டும் அளிக்கப்பட்டமை தொடர்பில் ஏற்பட்ட விவாதத்தின் போதே அவர் இவ் எதிர்ப்பினை தெரிவித்தார்.

கும்புறுப்பிட்டி சின்னக்கரச்சி பகுதியில் மில் சோல்ட்ரன் என்ற தனியார் கம்பெனிக்கு உப்பளம் அமைக்க 17

AFTER O/L....
English for You
E4U
VEAL BUSINESS COLLEGE
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738

Sugirtha Stationers
காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அமைதியால் உருவாகியுள்ள அல்லல்!!!

இலங்கையின் சனாதிபதித் தேர்தலின் அறிவிப்பை அடுத்து கட்சிகள் தத்தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தத் தொடங்கின. அந் நிலைப்பாடுகளில் முரண்பாட்டைக் கொண்ட குறித்த கட்சிகளின் உறுப்பினர்களில் பலர் சனாநாயக பண்பாட்டைக் கருத்திற்கொண்டு அங்கிருந்து இங்கும். இங்கிருந்து அங்கும் தாவத் தொடங்கிவிட்டனர்.

எல்லாவற்றிற்கும் விலையுண்டு என்பதே பொருளாதார அச்சிற் சுழலும் உலகத்திற்கு உண்டு என்பதைத் தாவல்கள் தெளிவாக வெளிக்காட்டியுள்ள நிலைக்கு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பலியாகிப் போயுள்ளது.

த.தே.கூ வின் உயர் மட்ட அங்கத்தவர்கள் தமது கொள்கைகளிற் பற்றுறுதியைக் கொண்டவர்களாக இருக்க ஆரம்ப மட்ட உறுப்பினர்கள் தாவல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் வடக்குக்கிழக்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஏனைய கட்சிகளான ஈ.பி.டி.பி. ரி.எம்.வி.பி ஆகிய கட்சிகளில் இருந்து இத்தாவல்கள் தற்போதுவரை வெளிப்படவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் ஆட்சியில் இருப்பவர்களின் அழுங்குப் பிடியைத் தவிர்த்து இக் கட்சிகளின் உறுபினர்கள் தாவமுடியாத நிலை காணப்படுவதும் ஓர் காரணம் ஆகும்.

இதே வேளை பிரதான தமிழ் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது வரை உத்தியோகபூர்வமாக தமது ஆதரவு யாருக்கு எனத் தெரிவிக்காது மௌனம் சாதித்து வருவதானது உள்ளக நிலையியும் அல்லல்களை உருவாக்கி வருகின்றது.

அரச சார்பற்ற அல்லது அரசுக்கு ஆதரவு தெரிவிக்காத தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தத்தமது நிலைப்பாடுகளை தமிழ் மக்களிடம் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவ் வெளிப்பாடுகளில் முக்கிமானதொன்றாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் நிலைப்பாடு ஆகும். அவர் தமிழ் மக்கள் இத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றார். அடுத்து கூட்டமைப்பின் தோழமைக் கட்சியும் உள்ளிருந்து முரண்பட்டுக் கொண்டிருக்கும் கட்சியுமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தமிழர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என மதில் மேல் பூனையானதொரு அறிக்கையை விடுத்துள்ளார்.

இவற்றிற்கும் மேலதிகமாக பேராயர் மல்கம் ரஞ்சித்தும் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றோர் செய்தியை வெளிப்படுத்தியதன் மூலம் தமிழ் மக்களின் காத்திருப்பின் மீதோர் கடும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இன்நிலையில் தமிழ் மக்களின் ஒரு பகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவிற்காக காத்திருக்க முற்பட்டுள்ள வேளையில் மற்றொரு பகுதியினர் தமதறிவைக் கொண்டு சில முடிவுகளை முன்னுணரத் தலைப்பட்டு விட்டனர்.

அதரவு தொடர்பாக அமைதியாய் இருக்க முற்பட்டுள்ள, அல்லது காலம் தாழ்த்தியே முடிவினை வெளிப்படுத்தவுள்ள த.தே.கூ வின் நிலையானது தமிழக் கட்சிகளிடையேயான ஒற்றுமையின்மையை வெளிப்படுத்தப் போவதாகவே தெரிகின்றது.

குறித்த ஒரு வேட்பாளருக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தும் முடிவினைத் த.தே.கூ மெற்கொள்ளுமாயின் ஏற்கனவே தேர்தல் தொடர்பாகக் கஜேந்திரகுமாரும். ஆனந்தசங்கரியும் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் முரண்படத் தொடங்கிவிடும். அதனால் தமிழக் கட்சிகள் போரின் பின் ஐந்து வருடங்கள் கழிந்துள்ள நிலையில் கூட நடைபெறுகின்ற சனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற வியடத்தில் கூட ஒற்றுமைப்பட விரும்பாமலிருப்பதை வெளிப்படுத்திவிடும்.

அதேவேளை சுயஅறிவின் விசாரணைகளில் யாரை ஆதரிப்பது அல்லது வாக்களிக்காமல் விட்டுவிடுவது என்ற முடிவினை எடுத்துள்ள தமிழ் மக்களிற்கும் த.தே.கூ வின் முடிவு சில வேளைகளில் முரண்பாட்டை உருவாக்கிவிடும் போலுள்ளது.

இந்நிலையில் த.தே.கூ அமைதியாய் இருப்பதால் உருவாகியுள்ள அல்லலொன்றால் ஒட்டுமொத்தத் தமிழினமுமே தளம்பல் நிலையடைந்துள்ளதைக் காண முடிகின்றது.

இத்தளம்பல் தேர்தல்களின் மீது தமிழர்களுக்கு உள்ள உரிமையைக் கேள்விக்குட்படுத்தி விடுவதால் எதிர்காலத்தில் வாக்களிக்கும் வீதம் குறைவடைந்துவிடும் ஆபத்தொன்றும் உடனுறைகின்றது என்பது உண்மையே!

அமைதியைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள அரச தரப்பும் முனைந்து வரும் வேளையில் மேலும் அமைதி தமிழர்களிற்கு நல்லதைச் செய்யப் போவதில்லை என்றே தெரிகின்றது.

-மாயன்-



## டெங்கு நோய் அபாய அறிவித்தல்

டெங்கு நுளம்பு எச்ரிக்கை அறிவித்தல் ஒன்று வியாழக்கிழமை மாலையளவில் சுகாதார அமைச்சினால் திருகோணமலை பட்டினமும் சூழலும் பகுதியில் ஒலிபரப்பப்பட்டது.

இவ் அறிவித்தலில் திருகோணமலை நகரப்பகுதியில் அதிகளவான டெங்கு நுளம்புகள் பரவும் அபாயகரமான பகுதிகள் காணப்படுவதாகவும், சுகாதார அமைச்சினால் வீடுகளுக்கு திடீர் பரிசோதனை நிகழ்த்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

மேலும் உயிர்க்கொல்லி டெங்கு நுளம்பு பரவுவதற்கான அறிகுறிகள் காணப்படும் இடங்களை உடனடியாக துப்புரவு செய்யும் படியும் டெங்கு நோயிலிருந்து உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்க உதவும் படியும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

அத்துடன் நீர்தேங்கி நிற்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிரான அதிகப்படியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிக்கப்பட்டுள்ளது.

## வாழ்வாதார உதவிகளை அன்வர் வழங்கினார்



கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் வருடாந்த மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிடைத்த நிதியில் குச்சவெளி பிரதேசத்திலுள்ள சில பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித் தொகையாக ரூபா 10,000





வீதம் 08 குடும்பங்களுக்கும், கூரைத்தகடுகள் சுமார் 26 குடும்பங்களுக்கும், கபீர் பள்ளிவாயலுக்கான நீர் இறைக்கும் இயந்திரமும் குறித்த நிர்வாகிகளிடம் வழங்கி வைக்கப்பட்டது

## அடிக்கல் நாட்டு வைபவம் ..



தற்போது கிழக்கு மாகாண சபையின் கூட்டங்கள் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலக கட்டடத்தில் நடைபெற்று



வருகின்றது. 2016ஆம் ஆண்டு தொடக்கம் புதிய கட்டடத்தில் மாகாண சபை அமர்வுகள் நடைபெறும் வண்ணம் கன்னியா வரோதய நகரில் உள்ள பிரதம செயலாளர் வளாகத்தில் அமைக்கப்படவுள்ள கிழக்கு மாகாண சபைக்கான சபா மண்டபம் மற்றும் பேரவைச் செயலகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு வியாழக்கிழமை (18.12.2014) காலை நடைபெற்றது. இக்கட்டங்கள் 200 மில்லியன் ரூபாய் செலவில்



அமைக்கப்படவுள்ளன. கிழக்கு மாகாண முதல் அமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மற்றும் தவிசாளர் ஆரியவதி கலபதி ஆகியோர் கட்டத்திற்கான முதற் கற்களை இட்டனர்.

## சனீஸ்வரப் பெயர்ச்சியை அடுத்து சனீஸ்வரன் கோயிலுக்கு மக்கள் படையெடுப்பு



## மலைமுரசின் "உதவும் ஊற்றுக்கள்" அமைப்பினால் உணவு உதவிகள் கையளிக்கப்பட்டன

அல்லலுறும் மக்களுக்கு தேவையான உடனடி உதவிகளை வழங்கவென மதத்தலைவர்கள் சிலரின் வழிகாட்டுதல்களுடன் மலைமுரசு பத்திரகையால் உருவாக்கப்பட்டுள்ள பொதுநிதியான "உதவும் ஊற்றுக்கள்" நிதியில் இருந்து பட்டித்திடல் முகாமில் கோழைக்கொலை (தற்கொலை) செய்துகொண்ட ஒருவரின் குடும்பத்தினருக்கு இரு வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் கையளிக்கப்பட்ட இந்த உணவுப் பொருட்களுக்கான நிதியினை இலண்டனில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது பணியாற்றி வரும் திருகோணமலையைச் சேர்ந்த சில இளைஞர், யுவதிகள் மலைமுரசிற்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

முதற்கட்ட நிவாரணமாக அரிசி, [illegible] உணவுப் பொருட்களும்,



சில அத்தியாவசியப் பொருட்களும் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்களால் உரிய குடும்பத்தினருக்குக் கையளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்


## “நீங்கள் வாக்களித்தவர்கள் படுத்துத் தூங்குகிறார்கள்” வி.முரளிதரன்

ஜனாதிபதி மகிந்த ஆட்சியிலிருக்கும் வரை ஒரு அந்நியனும் நம் நாட்டிற்குள் நுழைய முடியாது. அதனால்தான் நாம் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றோம். அனைத்து இன மக்களும் அன்னியோன்யமாக வாழ்ந்து வருகின்றோம் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

புதன்கிழமை பட்டிப்பளை நீர் விநியோக வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துவைத்த பின்னர் பட்டிப்பளை பிரதேசசபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இம்முறை நடக்கவிருக்கும் தேர்தலில் மகிந்த ராஜபக்ச அவர்களே வெற்றி பெறுவார். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில் அவர் நாட்டிற்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளார். கிராமங்களை நகரங்களாக்குவதற்காகவே அவர் அதிக வேலைத்திட்டங்களை செய்திருக்கின்றார். மகிந்த ராஜபக்ச அவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னர் தான் நாம் கொங்கிறீட் வீதிகளை கண்டோம். சுதந்திரமாக வாழத் தொடங்கினோம். அதை ஏன் நாம் குழப்ப வேண்டும்.



இந்தப் பிரச்சனைகளுக்குப் பின்னால் சர்வதேச சூழ்ச்சிகள் இருக்கின்றன. இலங்கை அபிவிருத்தி கண்டு வளர்ந்து வருவதை ஏனைய நாடுகள் விரும்பாது. குறிப்பாக மேற்கத்தேய நாடுகளுக்கு இங்கு பிரச்சனைகள் இருக்கவேண்டும் என்றும் யுத்தம் நடக்க வேண்டும் என்றும் அதன் மூலம் தாம் பிழைப்பு நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்றது.

ஜனாதிபதி மகிந்த ஆட்சியிலிருக்கும் வரை ஒரு அந்நியனும் நம் நாட்டிற்குள் நுழைய முடியாது. அதனால்தான் நாம் நிம்மதியாக வாழ்ந்துவருகின்றோம். அனைத்து இன மக்களும் அன்னியோன்யமாக வாழ்ந்துவருகின்றோம். தங்களுடைய அபிவிருத்திப் பணிகளை நியாயமான முறையில் கதைத்து செய்ய முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் வெறுமனே சண்டைகளை பிடித்துக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கின்ற உலகத்தவர்கள் தமிழர்களைப் பற்றியும் தமிழர்களின் அரசியலைப் பற்றியும் அவர்களின் வாக்குப் பிரயோகங்களைப்பற்றியும் என்ன நினைப்பார்கள். அவர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அல்ல தமிழ்த் தேசியக் கூத்தாடிகள். யாழில் நடைபெற்ற அபிவிருத்தி கூட்டத்தின்போது நாகரீகமான வார்த்தைகளை பிரயோகிக்கத் தெரியாத இவர்களா தமிழர்களைப் பற்றி சிந்திக்கப்போகின்றார்கள். முதலமைச்சர் பொறுமையாக இருக்கும்படி கூறியபின்னரும் அவர்களை அதை கவனத்தில் கொள்ளவில்லை.

நாம் முதலில் எங்களுடைய மக்களுக்கு இருக்கின்ற அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அதைச் செய்யாமல் பாராளுமன்றத்தில். போயிருந்து கொண்டு தேவையில்லாமல் நாட்களை செலவழிப்பதில் என்ன பயன் இருக்கின்றது? ஆனால் நாங்கள் எமது மக்களுக்குள்ள தேவைகளை பூர்த்திசெய்து கொடுப்பதற்காகவே பாராளுமன்றத்திற்கு சென்றோம். ஜனாதிபதியுடன் இணைந்து அதை செய்துவருகின்றோம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் பண்டாரநாயக்கா முதல் பல ஜனாதிபதிகள் ஆட்சியிலிருந்திருக்கின்றார்கள். அதில் நம்முடைய தமிழ்மக்களுக்காக அதிகளவான அபிவிருத்திப் பணிகளை செய்தது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒருவரே ஆவார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் வீதிகள், குடிநீர், மின்சாரம் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்றுத் தந்திருக்கின்றோம். நீங்கள் வாக்களித்தவர்கள் வீடுகளில் படுத்துறங்குகின்றார்கள். நாங்கள் தொடர்ந்தும் உங்களுக்கு சேவைகளை செய்துவருகின்றோம். நீங்கள் அனைவரும் சேர்ந்து அவர்களை வாழவைக்கின்றீர்கள். அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள் எனவும் மேலும் அவரது உரையில் தெரிவித்தார்.

## தீர்வையற்ற மோ.சை கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்ட திவிநெகும உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரையிலும் தீர்வை அற்ற மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லை என்றும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் காத்தான்குடி பிரதேசத்தில் கடமை புரியும் திவிநெகும முகாமையாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வை காத்தான்குடியிலுள்ள அவரது அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (16.12.2014) மாலை சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

## குடிநீர் விநியோகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடி நீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் பகுதியாக கருதப்படும் பட்டிப்பளை பிரதேசத்துக்கான குடிநீர் விநியோக நடவடிக்கைகளுக்கான வேலைத் திட்டங்கள் புதன்கிழமை அன்று ஆரம்பித்துவைக்கப்பட்டன.



மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நீர்வழங்கல் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிடம் விடுத்தவேண்டுகோளின் அடிப்படையில் இந்த நீர்விநியோக நடவடிக்கைகளுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

## வசதிகள் வேண்டி ஆர்ப்பாட்டத்தில் மக்கள்

தங்களுக்கான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை என்று கூறி பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட புளுக்குனாவைப் பகுதியில் வசிக்கும் பெரும்பான்மையின மக்கள் மட்டக்களப்பு நகரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரத்துக்காக மட்டக்களப்புக்கு வருகை தரவிருக்கும் நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## முழுமையான வாக்குப்பதிவு மா.வை



வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் இம்முறை முழுமையான வாக்குப்பதிவை மேற்கொள்வதற்குரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

## பறங்கிய சமூகத்தினருக்கு உபகரண கையளிப்பு

இராணுவத்தின் ஏற்பாட்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் உள்ள பறங்கிய சமூகத்தின் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு தாண்டவன்வெளி பேர்டினன் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பாதுகாப்பு கட்டளை தலைமை அதிகாரி மேஜர் எஸ்.எ.எ.எல்.பெரேரா, 23வது பாதுகாப்பு பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஹெட்டிஹாராச்சி, 231வது பாதுகாப்பு பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் எச் .பி .பி .பெர்னாண்டோ, 12 வது பாதுகாப்பு பிரிவு கஜபா ரெஜமெந்து இரண்டாவது கட்டளை அதிகாரி மேஜர் எச் .பி எ.சேனாரத்ன மற்றும் அருட்பணி நோட்டன் ஜோன்சன், பறங்கியர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## வடிகால் இன்மையால் மக்கள் பாதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் மழையின் காரணமாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல கிராம பிரதான மற்றும் உள் வீதிகளில் வெள்ளநீர் வடிந்து செல்ல முடியாத நிலையில் தேங்கி நிற்பதனால் இவ்வீதிகளை அன்றாடம் பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ் வீதிகள் முறையாக நிர்மானிக்கப் படாமையாலும் அதேபோன்று முறையான வடிகாலமைப்புகள் இல்லாமையாலும் வீதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதாக இப்பகுதி மக்களை தெரிவிக்கின்றனர் .

## குடிசை தீக்கிரை

ஏறாவூர், ரூபி கிராமத்தில் புதன்கிழமை (17.12.2014) அதிகாலை குடிசையொன்று இனந்தெரியாதோரினால் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பன்புல் பாய் பின்னுவதற்குரிய பருத்திமணை, தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் உள்ளிட்ட 75,000 ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளதாக இக்குடிசையின் உரிமையாளர் முஹம்மத் ஹஸன் பாத்தும்மா (வயது 53) பொலிஸாரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். கணவனை இழந்த தானும் தனது தாயும் உறங்கிக்கொண்டிருந்தபோது தீப்பந்தங்களுடன் வந்த சிலர், தனது குடிசைக்கு தீ வைத்துவிட்டு ஓடிச்சென்றதை தான் கண்டதாகவும் அவர் தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

## பல்கலையில் சீ.சி.ரி.வி

நிர்வாக வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகவும் களவுகளை தடுப்பதற்காகவும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாக கட்டமைப்புக்கள் அமைந்துள்ள இடங்களில் சீ.சி.ரி.வி கமெரா பொருத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார். மேலும் மாணவர்களின் உரிமைகளை பகிர்ந்துகொள்ளும் இடங்களில் இந்தக் கமெரா இல்லையெனவும் அவர் கூறினார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் சீ.சி.ரி.வி கமெரா பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பில் வியாழக்கிழமையன்று கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# பிரதம நீதியரசர் அரசியலில் நுழையலாமா?... - ஷிராணி



நீங்கள் அரசியலில் நுழைவீர்களா என கேட்கப்பட்ட வினாவொன்றுக்கு விடையளித்த ஷிராணி பண்டார-நாயக்க பிரதம நீதியரசராக உள்ள நான் எவ்வாறு அரசியலுக்குள் நுழையமுடியும் என மறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் 43வது பிரதம நீதியரசராகக் கடமையாற்றிப் பதவி நீக்கப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்க தான் இப்போதும் பிரதம நீதியரசராகவே இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ம் திகதி அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதிமன்றத்துக்குச் சமூகமளித்த பின் வெளிவரும் போதே இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

எனது 32வருட சட்ட வாழ்க்கையில் எனக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை. அதனாலேயே நான் நீதிபதியாகவும் பிரதம நீதியரசராகவும் 16 வருடங்கள் பதவி வகித்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

"முஸ்லிம் சிங்கள கலவரம் - 1915"

# பொதுபலசேனா முஸ்லிம் காங்கிரஸ் மீது சட்ட நடவடிக்கைக்குத் தயார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் தனது கூற்றை மீளப் பெற்றுக் கொள்ளாது விட்டால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுபலசேனா அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால ஆட்சிக்கு வருவாராயின் 1915ல் நிகழ்ந்த முஸ்லிம் சிங்கள் கலவரம் மீண்டும் வெடிக்கும் எனப் பொது பலசேனா கூறியுள்ளது எனக் கடந்த வாரத்தில் ஸ்ரீ.மு.காவின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்திருந்தார்.

தமது அரசியல் நன்மை-களுக்காகவே இவ்வாறான பிறழ்கூற்றுக்களை மு.கா மேற்கொள்வதாகத் தெரிவித்து-ள்ள பொ.ப.சே இக்கூற்றை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்து-ள்ளது.

# விசேட தேவை உடையோர் துணையுடன் வாக்களிக்க முடியும்



விசேட தேவை உடையோர் மற்றுமொருவரின் உதவியுடன் வாக்களிக்க முடியு மெனவும் அவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதாகவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2011 இன் 28 ஆம் இலக்க தேர்தல்கள் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச்சட்டவாக்கத்தின் 38(2) ஆம் பிரிவுக்கமையவே ஏதேனும் ஒரு வகையில் உடல் வலிமையிழப்பொன்றிற்கு இலக்கானோர் தமக்கு தேவையான உதவியாளரை கூட்டிச் சென்று வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியும். இந்நிலையில் அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. இதற்கான விண்ணப்ப- ங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி- களிடம் கையளிக்கப்பட வேண்டும் என தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிட்டு உள்ளது.



இவ்வாறு அழைத்துச் செல்லப்படுபவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் அரசியல் கட்சி பிரதிநிதியாக இருக்கக்கூடாது எனவும் தேர்தல்கள் செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வாக்காளர்கள் தமது உடல் நிலை தொடர்பான வைத்திய அதிகாரியின் சான்றிதழையும் அனுப்பிவைக்க வேண்டியது கட்டாயமாகும்.

# சீருடை மாணவர்கள் சில்மிசத்தில்!

வீட்டில் தனிமையிலிருந்த 35 வயது நிரம்பிய குடும்பப் பெண் மீது பாலியல் சேட்டை புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் இருவருக்கு கண்டி நீதிவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

அத்துடன் மேற்படி விசாரணைகளை பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம் அன்றைய தினம் சந்தேக நபர்களான பாடசாலை மாணவர்கள் இருவரும் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் பணித்துள்ளது.

கண்டி பூவேலிக்கடை பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் பகல் வேளையில் வீட்டில் தனிமையிலிருந்த 35 வயது குடும்பப் பெண் மீது அத்து மீறி வீட்டினுள் பிரவேசித்த பாடசாலைச் சீருடை அணிந்த 17, 18 வயது மாணவர்கள் இருவர் அப் பெண் மீது பலவந்தமாக பாலியல் சேஷ்டை புரிய முற்பட்டுள்ளனர்.

# வீடு திரும்பிய கொள்ளைச் சந்தேகநபருக்கு 5000ல் காசுமாலை




கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்டதைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்த மேல்-மாகாண சபை ஐ.தே.க. உறுப்-பினரும், நீர்கொழு-ம்பு அமைப்பாள-ருமான ரொய்ஸ் பெர்னாண்டோ, கடந்த 18ம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதையடுத்து அவரது ஆதரவாளர்கள் 5000 ரூபா நோட்டில் மாலை அணிவித்து அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

நீர்கொழும்பில் நகை மாளிகையொன்றில் இடம்பெற்ற 02 கோடி ரூபா பெறுமதியான கொள்ளைச் சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்-பட்டிருந்தார்

# தலைவெட்டப்பட்டா கொல்லப்பட்டார்?

வடமராட்சி முள்ளிப்பகுதியில் மனித எலும்புக்கூடும் மண்டையோடும் வெவ்வேறாக இருக்க கண்டிபிடிக்கப்பட்டன.

முள்ளிச்சந்தியில் இருந்து யார்க்கரைக்கு செல்லும் விதியில் சிறிது தொலைத்தூரத்தில் இராணுவத்தினர் தமது முகாம்களை அலங்கரிப்பதற்காக கடந்த வியாழக்கிழமை புற்பூண்டுகளை வெட்டியபோது தனித்தனியாக இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்டவர் தலை வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டாரா அல்லது கொலை செய்யப்பட்ட பின்னர் தலைவேறாக்கப்பட்டதா? என்பது பற்றிய தகவல்கள் மருத்துவ விசாரணைகளின் பின்னரே தெரியவரும் எனத் தெரிகின்றது.

# சந்திரிகாவின் ஆட்சியிலேயே பெருமளவு படையினர் பலி!



ஒட்டுமொத்த போரிலும் கொல்லப்பட்ட 23 ஆயிரம் படையினரின் பாதிப் பேர், முன்னாள் அதிபர் சந்திரிகாவின் காலத்தில் தான், உயிரிழந்தனர் என்று, சிறிசம்புத்தலோக விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் இத்தட்டேமலியே இந்திரசார தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான பேராசிரியர் இத்தட்டேமலியே இந்திரசார தேரர், நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அங்கு அவர், தாமே போரின் 75 வீதத்தை முடித்து வைத்ததாக முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க உரிமை கோரியது குறித்து கருத்து வெளியிடுகையில்,

"போரில் 23ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர். இவர்களில் பாதிக்கும் மேலானவர்கள், சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலத்திலேயே உயிரிழந்தனர்.

அவரது ஆட்சிக்காலத்தில் தான் முக்கியமான பொருளாதார இலக்குகளான, மத்திய வங்கி, கொலன்னாவ எண்ணெய்க் குதம், கட்டுநாயக்க விமான நிலையம் என்பன தாக்கப்பட்டன.

போர் வடக்கு, கிழக்கை மையப்படுத்தியதாக இருந்தாலும், கொழும்பிலுள்ள மக்கள் அதனால் பெரிதும் பாதிப்புகளை சந்தித்தனர்.

ரெலிகொம், மத்திய பேருந்து நிலையம், மத்திய வங்கி, மருதானை, கலதாரி குண்டுவெடிப்புகளின் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிட்டது.

சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவே இதற்கெல்லாம் முடிவு கட்டினார்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொன்சேகாவின் மருமகன் பிணையில்

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் மருமகன் நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து அவரை, கொழும்பு மேல் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

இராணுவ ஆயதக் கொள்வனவு தொடர்பாக இவர் தேடப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்னவை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜரங்கனி பெரேரா நாலு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் இரண்டு சரீர பிணைகளிலும் விடுதலை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# உலகச் செய்திகள்

## பல திருமணம் - முஸ்லிம் சட்டப்படி சரியாயினும் ஆங்கிலச் சட்டப்படி தவறு

ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்வது முஸ்லிம்களின் சட்டப்படி சரியாயினும் ஆங்கிலச்சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாதது என இங்கிலாந்து நீதிபதியொருவர் தீர்ப்பளித்துள்ளார்.

தனது இரண்டாவது மனைவி பாலியலுறவைத் தவிர்ப்பதால் அவருடன் பாலியல் உறவைப் பேண அனுமதிக்குமாறு பங்களாதேஸைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்த வழக்கிலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

39 வயதான் அவ்விரண்டாவது மனைவியின் மனநிலையானது நான்கு வயதிற்கும் ஏழு வயதிற்கும் இடைப்பட்டதாக இருப்பதால் அப் பெண்ணுக்கு பாலியலுறவை கணவனுக்கு வழங்குவது சம்பந்தமாக எவ்வித அறிவும் இருக்காது எனத் தெரிவித்துள்ள நீதிபதி அப்பெண்ணைப் பொதுப்பாதுகாப்பிடத்தில் பராமரிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

## சுவிஸ் மத்திய வங்கியில் பெண்

சுவிஸின் மத்திய வங்கி இயக்குனர்களில் ஒருவராக முதல் முறையாக பெண் ஒருவர் இணைந்துள்ளார்.

சுவிஸ் மத்திய வங்கி ஆரம்பித்த காலத்தில் இருந்து இதுவரை, இயக்குனர்கள் பதவி வகித்தவர்களில் எந்த பெண்ணும் இடம்பெறவில்லை. தற்போது, ஜெனிவாவை சேர்ந்த மேச்சலர் (47) என்ற பெண்மணி பதவி ஏற்றுள்ளார்.

கனடாவில் படித்த இவர், அமெரிக்காவின் IMF (International Monetary Fund)-ல் இயக்குனராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மும்பைத் தாக்குதல் சூத்திரதாரிக்குப் பிணை



மும்பை தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட லஸ்கர் இ தொய்பா அமைப்பின் தளபதிகளில் ஒருவரான ஜாகிர் உர் ரஹ்மான் லாக்விக்கு பிணை வழங்கி பாகிஸ்தானின் தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த 2010-ம் ஆண்டு, மும்பையில் கடல் வழியாக நுழைந்த 10 பயங்கரவாதிகள் பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உள்பட 162 பேர் பலியாகினர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஜாகிர் உர் ரஹ்மான் லாக்வி ராவல்பிண்டி சிறையில் அடைக்கப்பட்டார்.

மும்பை தாக்குதல் தொடர்பாக அப்துல் வாஜித், மஸார் இக்பால், அமின் சாதிக், ஜமீல் ரியாஸ், ஜமீல் அஹமது, யூனிஸ் அஞ்சுமான் ஆகிய 7 பேர் மீது தீவிரவாத தடுப்பு நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது.

லாக்வி சார்பில் பிணை மனு தாக்கல் செய்யப் பட்டது. அவருக்கு பிணை வழங்க பாகிஸ்தானிய புலனாய்வு நிறுவனம் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இருப்பினும், பிணை வழங்கப்பட்டுள்ளது.

மும்பை தாக்குதல் வழக்கை பாகிஸ்தான் துரிதப்படுத்த வேண்டும் என இந்தியா பலமுறை வலியுறுத்திவரும் நிலையில், முக்கிய குற்றவாளியாக கருதப்படுபவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது..

## தூங்கியதால் உயிர் தப்பிய பள்ளி மாணவன்



பாகிஸ்தானிய இராணுவப் பள்ளியில் புகுந்த பயங்கரவாதிகள் அறுவரின் துப்பாக்கிச் சூட்டில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகினர்.

இத்துப்பாக்கிச் சூட்டில் 132 மாணவக் குழந்தைகள் உட்படி 145 பேர் பலியாகினர். இக்கொலைத் தாக்குதலில் ஒரு வகுப்பிலிருந்த 9ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பலியாகினர். அன்று பள்ளிக்குச் செல்லாத மாணவன் ஒருவன் மட்டும் அவ்வகுப்பில் உயிர் தப்பியுள்ளார். பதினைந்து வயதான தாவூத் இப்ராஹிம் என்ற 15வயதான மாணவன் அதற்கு முந்தைய தினம் திருமண வீடொன்றில் குதூகலித்துவிட்டு வீட்டுக்கு பின்னிரவிலேயே திரும்பியுள்ளார். அடுத்த நாள் பள்ளிக்குச் செல்லும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு படுக்கைக்குச் சென்ற அவர் மறுநாள் காலை தாமதமாக எழும்பியதால் உயிர் பிழைத்துள்ளார்.

## அமெரிக்க கியூபக் கூட்டு - "அனுமதி அமெரிக்க காங்கிரசிடம்"

உலகின் மிகவும் கடுமையான விரோதிகளாக இருந்த இரு நாடுகள் அரை நூற்றாண்டுகளுக்கு பின்னர் தமக்கிடையே உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள முயல்வதாக தெரிகிறது.

உறவுகளை சுமூகமாக்கும் நோக்கிலான பேச்சுக்களை அமெரிக்காவும், அதன் அண்டை நாடானா கியூபாவும் ஆரம்பிக்கவுள்ளன.

தமது பழைய கொல்கையான ""தனிமைப்படுத்தல் கொள்கை"" தோல்வியுற்றுவிட்டதாக அமெரிக்க அதிபர் ஒபாமா கூறியுள்ளார்.



ஒபாமாவும் ராவுல் காஸ்ரோவும்

கம்யூனிஸத் தீவான கியூபா மீது விதிக்கப்பட்டுள்ள நீண்ட கால பொருளாதாரத் தடையை நீக்க அவர் விரும்புகிறார்.

ஆனால், குடியரசுக் கட்சியால் கட்டுப்படுத்தப்படும் அமெரிக்க காங்கிரஸ் நாடாளுமன்றம் இதற்கு அங்கீகாரம் வழங்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கியூபாவைப் பொறுத்தவரை நீண்ட காலமாக அதன் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடை அந்த நாட்டை மிகவும் மோசமாகப் பாதித்திருக்கின்றது என்பது உண்மை.

எனினும் தற்போதுவரை அந்த நாடு அடிபணியாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது

## லோக்சபாவின் "லொள்ளு"



இந்திய மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு, தனக்கு இன்னும் லவ் லெட்டர் வருகிறது என்று கூறி கொமடி செய்துள்ளார்.

ராஜ்யசபாவில் பாஜக உறுப்பினர் மனோஜ் திவாரி பேசுகையில், டெல்லியில் முறைப்படுத்தப்படாத குடியிருப்புகளை அங்கீகரிக்கும் சட்ட மசோதாவை தாக்கல் செய்ததற்காக பாராட்டிப் பேசினார். அப்போது ஐ லவ்யூ வெங்கையாஜி என்று கூறினார்.

இதையடுத்து எழுந்த வெங்கையா நாயுடு, மனோஜ் திவாரி எனக்கு ஐ லவ்யூ கூட சொன்னார். அதில் எனக்குப் பிரச்சினை இல்லை. அதை எனது மனைவி தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார். காரணம், எனக்கு இப்போதும் கூட லவ் லெட்டர்கள் வந்துகொண்டுதான் உள்ளன என்றார் அமைச்சர்.

## "ஹெட்போனுடன் புத்தர்" பர்மாவில் நால்வர் கைது

பர்மாவில் புத்த மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் மூன்று பேர் மீது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்படுகின்றது.

நியுசிலாந்து பிரஜையான மதுக்கடை மேலாளர் ஒருவரும் பர்மிய பிரஜைகள் இருவரும் இந்த வழக்கை எதிர்கொண்டுள்ளனர்.

மது களியாட்ட நிகழ்வொன்றை ஃபேஸ்புக் வலைத்தளத்தில் விளம்பரப் படுத்தும்போது, நைட்கிளப் வெளிச்சத்தின் மத்தியில் புத்தர் ஹெட்ஃபோன் அணிந்திருப்பதை போன்ற படம் ஒன்று வெளியாகியிருந்தது.

இந்தப் படத்தை வெளியிட்டதன் மூலம் புத்த மதத்துக்கு அவதூறு விளைவித்துள்ளதாகக் கூறி, பிரதிவாதிகள் மூவரும் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டனர்.





பிணை மறுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டால் 4 ஆண்டுகால சிறைத் தண்டனையை எதிர்நோக்க நேரிடும்.

## அனைவரையும் கொன்று விட்டோம் அடுத்து என்ன செய்வது????

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் பாடசாலைக்குள் நுழைந்து தாக்குதல் தொடுத்த தீவிரவாதிகளின் கடைசித் தொடர்பாடலை த இன்டிபெண்டன்ட் இணைய பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அரங்கிலிருந்த அனைவரையும் கொன்று விட்டோம் ... அடுத்து என்ன செய்வது என அவர்கள் தம்மை வழிநடத்தியவரிடம் கேட்டுள்ளனர்.

இத்தாக்குதலை வழிநடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் தலிபான் தீவிரவாதிகளின் தலைவர்களுள் ஒருவனான உமர் அதிஸி என்பவனுக்கே இத்தொடர்பாடல் துப்பாக்கிதாரியான அபுஸார் இறுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய பத்திரிகைகள் தகவலிட்டுள்ளன.

இராணும் வரும்வரை காத்திருங்கள்... அவர்களில் கொல்லக் கூடியவரைக் கொல்லுங்கள்... பின்னர் உங்களை வெடித்துக்கொள்ளுங்கள்.. என பின்னூட்டல் கிடைத்துள்ளது.

அன்றைய தினம் பாடசாலையில் நடைபெற்ற விழாவொன்றுக்காக மாணவர்களில் பலர் அரங்கினுள் கூடியிருந்துள்ளனர். அதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டுள்ள பயங்கரவாதிகள் அவ்வரங்கில் மட்டும் 100 பேரைக் கொன்று குவித்துள்ளனர்.



பாகிஸ்தானின் தற்போதைய தலிபான் தளபதி ஹக்கிமுல்லா மசூத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்தவார தொடர்ச்சி

யாரோ சேர்ந்து அருகிலேயே வருவது போல் தோன்றியது. மனம் பட பட என்றடித்து பயத்தைத் தூண்டியது. தன்னை ஒருவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டு மெல்ல கண்களை திருப்பிப் பார்த்தாள். தன் கார் யன்னல் கண்ணாடியில் நீரால் வரையப்பட்ட ஓர் பெண் உருவம் இருந்தது. உடனடியாக உள்ளே இருந்த ஒரு துணியை எடுத்து துடைத்தாள். அது உடன் மறைந்து விட்டது.

வெளியில் சோ வென மழை கொட்டிக் கொண்டிருந்தது. மீண்டும் சற்று நேரத்தின் பின்னர் மீண்டும் அதே போல் இரத்தக் கறைகளுடனான ஓர் அருவருப்பான முகம் கண்ணாடியில் பதிந்தது. செயவதறியாமல் தன்யா பதறிப்போய் அக்ஸலேட்டரை தன்னால் முடிந்தளவு அமத்தினால், என்ன பயன் மீற்றர் 100 ஐக் காட்டியது ஆனால் காரோ 20 வேகத்தில் சென்று கொண்டிருந்தது. தன்யாவுக்கு அழவும் முடியாமல் காரை விட்டு இறங்கவும் முடியாமல் தனக்கு ஞாபகத்திற்கு வந்த அனைத்து தெய்வங்களையும் கும்பிட்டுக் கொண்டு சென்று கொண்டிருந்தாள். காரினுள் ஏசி வேலை செய்தாலும் தன்யா வியர்வையில் குளித்திருந்தாள்.

கை கால் அனைத்தும் நடுங்கத் தொடங்கியது. இம்முறை யன்னல் கண்ணாடியை பார்க்கக் கூட பயமாயிருந்தது அவளுக்கு. திடீரென சற்றுத் தூரத்தில் ஒரு வெள்ளை நிறத்திலான வாகனம் தன்னை நோக்கி வருவதை உணர்ந்தாள். அவளின் கை வேலை செய்ய மறுத்தது. மூளை இட்ட கட்டளையினால் கார் பயங்கரமாக வெட்டி திரும்பியது.

இதற்கு மேலும் அவளால் கட்டுப்படுத்த முடியாது எனத் தெரிந்தது. கத்தி அழவேணும் போல் இருந்தது.

சாதாரணமாக துணிகர செயல்களைச் செய்யும் தன்யா ஏன் இவ்வாறு பயந்து நடுங்குகிறாள் என தன்யாவின் மனசாட்சி வேற தொல்லை செய்யத் தொடங்கியது. இன்றுடன் தன் கதை முடிந்தது என்றே எண்ணினாள் தன்யா.

சற்று நிதானித்தவள் போல் பெருமூச்சொன்றை எடுத்துக் கொண்டு தன்னைச் சுற்றி நோட்டமிட்டாள். எதுவித வித்தியாசத்தையும் அவளால் உணர முஎயாதிருந்தது. எனக்கு என்ன நடந்தது என்று எண்ணியவாறு தன் மேலுள்ள கண்ணாடியை பார்த்தாள்.

அவ்வளவு தான் அதில் தெரிந்த உருவம் மீண்டும் அவளை திகிலடையச் செய்தது. அவ்வுருவம் தன் அருகே வந்து ஓங்கி ஓர் அறை விட்டது. ............

தன்யா, தன்யா .. முகத்தில் தண்ணீர தெளிக்கபட்டதை அடுத்து திடுக்கிட்டு விழித்தாள். விழித்தவள் தன் கன்னத்தை தடவிய படி சுற்றிலும் தேடினாள். அவள் கண்ணுக்கு எதுவுமே தெரியில்லை. வெறுமையாக இருந்தது. அவள் இன்னும் சுய நினைவுக்கு வரவில்லை என்பதை உணர்ந்து முகத்தில் தண்ணீர தெளிப்பதற்குள் மீண்டும் மயங்கிப் போனாள் தன்யா.

பின் சுற்றி நின்றவர்கள் அவளை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எதையும் அறியாத தன்யா மெல்லத் தன் கண்களை திறந்து பார்த்தாள். தன் நண்பி, அவரது கணவர் அவர்களுடன் தன்யாவின் கச உத்தியோகத்தர் இருவர் நின்றிருந்தனர். தனக்கு என்னென்ன நடந்தது. எவற்றையெல்லாம் பார்த்தாள் என அனைவரிடமும் கூற முறபட்ட தன்யாவை ஆரத்தழுவி ஒன்றும் நடக்கவில்லை. நீ சற்று அமைதியாக இருடி என்றாள் நண்பி.

அது சரி என்னை எப்படி நீங்கள் கண்டுபிடித்தீர்கள்? எவ்வாறு உங்களுக்கு எனக்கு நேர்ந்தது தெரிய வந்தது? என்று தொடராக கேட்டாள் தன்யா.

கேட்ட அடுத்த கணம் அனைவரும் அவளைப் பார்த்து சிரித்தனர். குழம்பிப் போன தன்யா கண்ணால் தன் நண்பியிடம் சைகை காட்டி கேட்டாள் ஏன்? என்ன ஆயிற்று என்று.

அதன் பின்னர் தான் அவள் தன் காரினுள் ஏறி இருந்ததும் தான் எவ்வழியைத் தேர்ந்தெடுப்பது என்ற யோசனையிலும், தனியே அந்த நடுஇராத்திரியில் முதல் தடவை பயணிப்பது குறித்த பயத்திலும் காரினுள் இருந்த படியே கனவு கண்டுள்ளாள் என்பதை தன்யா புரிந்து கொண்டாள். வெக்கத்தில் என்ன செய்தென்று தெரியாமல், அப்பாடி எனக்கு எதுவுமே நடக்கவில்லை என்ற நிம்மதியிலும் தன் நண்பியை கட்டிப்பிடித்த வாறே நிம்மதியாக உறங்கிப்போனாள்.

முற்றும் ... ...




# தலை எழுத்துக்கள்

சிறுகதை

அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் பளிங்குக்குளியலறையில் நீர்க்குழாயில் இருந்து நீர் சொட்டிக்கொண்டிருந்தது. அந்த குளிர்ந்த நீரில் டேவிட் தனது முகத்தைக் கழுவிக்கொண்டிருந்தான். அவனுக்குள் இருந்த சோம் பேறித்தன்மையும் நித்திரை மயக்கமும் எங்கோ ஓடி மறைந்து விட்டன. ஆனாலும் அவனுடய உடல் ஒருவித சோர்வை உணர்ந்து கொண்டிருந்தது. பளிங்குபோல் தெளிவாய் இருந்த கண்ணாடியில் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய கண்கள் நன்றாவே சிவந்து இருந்தது.

“சே... நைட் அடிச்ச சரக்கு போத இன்னும் கண்ணுல தெரியுது...”

இப்போது அவனுடய நினைவுகள் இரவு அவன் சென்றிருந்த இரவுக்களியாட்ட விடுதிப்பக்கம் நகர்ந்தது...

அந்த விடுதி மது, மாது, சூது என்று களைகட் டியிருந்தது. பெரும் புள்ளிகளால் நிறைந்திருந்த அந்த விடுதியில் பாட்டுக்கும் கூத்துக்கம் இடையே ஆண் பெண் என்ற அங்கவேறு பாடுகள் மட்டும் தெளிவாய்த் தெரிந்தது. நேற்று அவனுடைய பிறந்தநாள். அங்கு அவன் அவனுடய நண்பர்களுக்காக விருந் து ஒழுங்கு செய்திருந்தான். நிச்சயமாக அந்த இரவு இந்த வருடத்தில் ஒரு பூரிப்பை அவனுக்குள் ஏற்படுத்தியிருந்தது. அது அவனுடய பிறந்தநாள் என்பதைத்தாண்டி அவனுக்குள் புதுவித அனுபவமாய் இருந்தது. எத்தனையோ களியாட்டங்கள், மது, மாது என் று பார்த்துவிட்டான் ஆனால் நேற்றய இரவின் நினைவுகள் அவனுடய உள்ளத்து உணர்வுகளை பொங்கவைத்தது. இத்தனைக்கும் காரணம் அந்தப்பெண்...

போதை மயக்கத்தின் உச்சத்தில் அவனுக்கு அவளிடம் தேவைப்பட்டது பெயர் அல்ல... “சீ வாஸ் வெறி பியூட்டிபுள் என்ட் வெறி எக்சைட்டிங்... சம்திங் டிபரன்ட்...”

அவன் உள்ளத்தால் அவளைப் புகழ்ந்து கொண்டவாறு எண்ணங்களை நீரினால் கழுவிக்கொண்டிருந்தான். அவனுடைய மூக்கு நுனியில் இருந்து நீர்த்துளிகள் சொட்டிக் கொண்டிருந்தது. திடீரென்று அறையின் அழைப்பு மணி ஒலித்து அவனுடைய கவனத்தை திருப்பியது.

“யெஸ் வெயிட்... இப்போ வாறன்...”

தொங்க போட்டிருந்த வெண்நிறத் துவாயை எடுத்து முகத்தை ஒத்தியவாறு முன் கதவருகே சென்று கதவைத்திறந்தான். அங்கு யாரும் இருக்கவில்லை. தலையை வெளியே எட்டி நடைகூடத்தின் இரண்டு பக்கங்களையும் பார்த்தான். அங்கு யாரும் வந்ததற்கான ஆதாரங்கள் இருக்கவில்லை.

“என்னாச்சு?... யாரா இருக்கும் ஒருவேளை பிரம்மயா இருக்குமோ? சே சே.. நோ சான்ஸ் ஐயம் சுவர் வித் தட் கோலிங் பெல்.” கதவை மூடிவிட்டு மீண்டும் குளியலறைக்குள் சென்று குளிப்பதற்காய் ஆயத்தமானான். மீண்டும் அதே அழைப்பு மணி... அவனுக்குள் எழுந்த சந்தேகம் அவனது காதுகளை ஒரு முறை உற்றுகேட்க வைத்தது. “யெஸ் கோலிங்பெல்” உறுதிப்படுத்திக் கொண்டான். விரைவாக சென்று கதவைத்திறந்தான். அங்கு யாரும் இல்லை. நடைகூடத்துக்கு நகர்ந்து சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் வந்ததற்கான ஆதாரம் இல்லை.

“பக்கத்து ரூம் அல்லது முன் ரூம் யாராவது பண்ணியிருப்பாங்களோ?... வட் த ஹெல் இஸ் கொயிங் ஹியர்?...” கோபத்துடன் கதவைச்சாத்தினான். அப்போது கால்களில் ஏதோ ஒரு காகித அட்டை மிதிபட்டது.

“ஏதோ கிரீடிங் கார்ட் போல இருக்கு” அருகில் அழகிய ரோஜா மலர் அழகாக சிரித்துக்கொண்டிருந்தது. அதில் படிந்திருந்த நீர்த்துளிகள் மேலும் அழகூட்டின. கைகளில் வாழ்த்து அட்டையையும் ரோஜா மலரையும் எடுத்துக்கொண்டான். அந்த வாழ்த்து அட்டையில் “HAPPY BIRTH DAY TO YOU MY DEAR” என்று எழுதப்பட்டிருந்தது. அவனுக்குள் ஒரு சந்தோசம் மெதுவாக முளைத்தது.

“யாரா இருக்கும் ப்ரியா?... அவள் நேரடியாவே விஸ் பண்ணிட்டாளே... ஸ்ருதி?... நோ நோ ச்சான்சே இல்ல... வேற யாரா இருக்கும்” அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அருகில் இருந்த மேசை மீது வைத்து விட்டு குளிப்பதற்காய் சென்றுவிட்டான். “யார் கார் ட் அனுப்பியிருப்பா?... கோலிங் பெல் கேட்டுச்சி ஆனா யாருமில்லையே?..” எல்லாமே கேள்விக்குறியாய் அவனை நனைத்தது.

சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த கடிகாரம் தனது முட்களை எட்டு மணியை நோக்கி நகர்த்தி விட்டு ஒலிக்கதொடங்கியது. கட்டிலில் மேல் போர்வைக்கு இடுக்கில் இருந்து தொலைபேசியும் சிணுங்கத் தொடங்கியது. தொலைபேசியை கையில் எடுத்தான். ரம்யா என்ற பெயரில் இருந்து அழைப்பு...

“யெஸ் சொல்லு ரம்யா?”

“சேர் டைம் எயிட் பாஸாயிட்டு, ஒபிஸுக்கு லேட்டாயிட்டு அந்த கொன்ரக்ட் பார்ட் டி நைனுக்கு வந்துடுவாங்க சேர், யு மஸ்ட் பி ஹியர்”

“இட்ஸ் ஒகே ரம்யா, ஐயம் ஒன் த வே”

“தங்ஸ் சேர்”

தொலைபேசியை வைத்துவிட்டு அவசர அவசரமாக ஆயத்தமானான். ஒரே வேகத்தில் கார் பிரமாண்டமான ஒரு கட்டிடத்தின் முன்னால் சென்று நிறுத்தப்பட்டது.

“ராஜிவ் கொன்ஸ்ரக்ஸன் பிரைவட் லிமிடட்” இது டேவிடின் அப்பா ராஜிவ் ரங்கநாதன் முப்பது வருடமாக நிருவகித்து வந்த சொந்தக்கம்பனி. நாடு பூராகவும் கிளைபரப்பி வருடத்தில் லாபம் மட்டும் கோடிக்கணக்கில் புரளுகின்ற ஒரு பாரிய கம்பனியாக இருந்தது. ராஜிவ் ரங்கநாதன் இறந்த பின்னர் டேவிட் நிருவாக இயக்குனராக பொறுப்பேற்று ஒரு வருடமாகிறது. இப்போது டேவிட்டுக்கு இருபத்தேழு வயதுதான் ஆகிறது. இந்த வயதில் அவனால் சுமக்கக்கூடிய சுமையல்ல இந்தக்கம்பனி, ஆனாலும் இது அவனுக்கு கிடைத்த பாக்கியம். பார்ட்டிகள், பெண்தோழிகள், ஹோட்டல், இரவுவிடுதி என்ற அவனுடைய நேர அட்டவணையில் கம்பனிக்கென்று ஒரு இடம் பெரும் கடினமாகத்தான் இருந்தது. விரைவாக காரில் இருந்து இறங்கி கம்பனிக்குள் நுழைந்தான். பலத்த வரவேற்பு. அவனுடைய அலுவலக அறைக்குள் நுழைந்து அவனுக்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

“எக்ஸ் கியூஸ் மி சேர்” அவனுடைய உதவியாளர் ரம்யாவின் குரல்...

“யெஸ் கம்இன்”

“சேர் நேற்று உங்கட பேர்த் டேதானே... மை விஸ்ஸஸ்...”

“தங்ஸ் ரம்யா”

“சொறி சேர் இன்றைக்கு வாறதா இருந்த அந்த கொன்ஸ்ரக்ஸன் பார்டி அவங்க புரஜக்ட்ட வேற கம்பனிக்கு மாத்திட்டாங்களாம்... இப்பதான் ஈ-மெயில் வந்திருக்கு”

“வ[illegible] தெரியுமா” ஏமாற்றம் கலந்த [illegible] கேட்டான்.

“தெரியல சேர்”

இதன் மூலம் பாரிய இலாபத்தை எதிர்பார்த்திருந்தான். பெரியதொரு ஏமாற்றம் இதனை சற்றும் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுடைய உள்ளத்தில் கவலையின் மெல்லிய சாயல் ஆட்கொண்டது.

“ரம்யா, ஐ நீட் டு கெட் சம் ரெஸ்ட், இன்னிக்கு லீவ் எடுக்கிறன்... பார்த்துக்க” விரைவாக கம்பனியை விட்டு வெளியேறி காரில் ஏறிக்கொண்டு ஹோட்டலை நோக்கி பறந்தான். தலைவலி அதிகமாகிக கொண்டேயிருந்தது.


டேவிட் தனது அறைக்கு வந்து கட்டிலில் விழுந்தான். அவனுக்கு காலை நினைவுகளில் மேசையில் இருந்த வாழ்த்து அட்டையை நோக்கினான். அவனுக்கு ஓர் பேரதிர்ச்சி காத்திருந்தது. இரத்தத்துளிகள் வாழ்த்து அட்டையின் மீது தெளிக்கப்பட்டவாறு சுருண்டு கிடந்தது. அருகில் இருந்த ரோஜா மலர் காய்ந்து சருகுகள் சிதறி மேசை மீது பரவிக்காணப்பட்டது. பயத்தினால் பெருமூச்சுகள் அவனை ஆட்கொண்டன. அந்த அறைக்குள் இருந்து மூக்கைப் பிடுங்கும் அளவு ஒருவித துர்வாடை பரவ ஆரம்பித்தது...

காலையில் ஒலித்த அழைப்பு மணிகளின் ஞாபகங்கள் வேறு அவனுடய பயத்தை பல மடங்காக்கியது. அவனுடைய அறைக்குள் யாரும் வருவதற்கான எந்தவித வழியும் இருக்கவில்லை. வீசிக்கொண்டிருந்த துர் வாடையில் அவனுடைய மூச்சுத்திணறியது. பல முறை இடைவிடாத தும்மல் ஒவ்வொரு தும்மலுக்கும் வாயில் இருந்து இரத்தம் அறை முழுவதும் சிதறித் தெறித்தது. அவனுக்கு பயத்தைத்தவிர வேறு ஒன்றுமே புரியவில்லை...

பயத்தின் அகோரத்தினால் நடுங்கிய கைகளோடு எழுந்து வாழ்த்து அட்டையை நோக்கி மெதுவாக கால்களை நகர்த்தினான். அவனுக்குப்பின்னால் பயங்கர கருண்ட முரட்டு உருவம் விகாரமடைந்த அதன் கைகளை அவனுடய கழுத்தை நோக்கி நீட்டியவாறு கம்பீர நடையுடன் அவனை நெருங்கியது. டேவிட்டின் கழுத்து இப்பொழுது அந்த உருவத்தின் முரட்டுக்கைகளுக்கு இடையே நசுங்கியது. அவன் கதிகலங்கினான்... கதறினான்... கண்கள் புடைத்தது... தொண்டை அடைத்து இருமலை ஏற்படுத்தியது. இருமலின்போது வாய்க்குள் இருந்து இரத்தம் கக்கியது. அந்த உருவம் அவனைத்தாறுமாறாக தாக்கியது. வலிதாங்க முடியவில்லை. சிறிது நேரப்போராட்டத்திற்குப்பின் கட்டிலில் மயங்கி விழுந்தான்... திடீரென்று அவனுடைய கண்கள் மீண்டும் திறந்தது. திடுக்கிட்டவாறு எழும்பினான். அவனது தோற்றம் இது அவன்தான் என்பதை மறந்திருந்தது. பரிதாபகரமான தோற்றத்தில் டேவிட் கட்டிலில் அநாதரவாக படுத்துக்கிடந்தான்.

அவனால் யூகிக்க முடியாதளவு அவனுடைய நிலைமை காணப்பட்டது. மீண்டும் அதே கறுப்பு உருவம்... ஒரு மூலையில் அவனை முறைத்துப் பார்த்தவாறு சிவந்த கண்களுடன் உறுமிக்கொண்டிருந்தது. மூச்சின்வேகம் அவனையே மீறியது...

அவனுடைய வலுவிழந்த இதயம் வலித்தது... உடல் நடுங்கியது... மூச்சு நின்றுவிட்டது... அப்படியே கட்டிலில் அவனுடைய உயிர் கண்களைத் திறந்தவாறே மூர்ச்சையானது... அந்த விகாரமான கருண்ட உருவம் அதனது கைகளை மேலுயர்த்தி டேவிட்டின் கண்களை மெதுவாக மூடிவிட்டு அவ் விடத்தைவிட்டு நகர்ந்தது... டேவிட்டின் தலைக்கு அருகில் இருந்த சுவரில் வழிந்தோடும் இரத்தத்தால் “HIV” என்று கிறுக்கப்பட்டிருந்தது... இவைதான் இறைவன் எமன் மூலமாக அவனுக்காக எழுதிய தலையெழுத்துக்களாக இருக்குமோ....???



- கீதா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## செத்துப்போனேன் நான்

ஒப்பனைக்கான அழுகுரல்.
விற்பனைக்காக அல்லாமல்
கிடத்தப்பட்ட உடலம்.
விதியின் குறுக்கே
வீழ்த்தப்பட்ட வாழ்வுக்காய்
வீதியின் குறுக்கே
விளம்பர அஞ்சலிகள்.

ஆங்காங்கே அலசும்
மனிதக் குவியல்கள்.
உடற் காவியத்தின்
இறுதிப் பக்கத்தை
அனுமதியின்றி
இரசித்துப் படிக்கும்
முதற் பக்கங்கள்.

ஓரமாய் எட்டுக்கால் தேர்
வெறுமையைக்
காவிச் செல்வதற்காய்.
அரப்பு , மஞ்சல், குளிப்பாட்டல்
ஆடை புனைதல் அதன்பின்
அலங்காரத் தேரில்
அது (சவம்)
இறுதிப் பவனிக்காய்
கிடத்தப்படுகிறது.

பொரி வறுத்து, பதிகம் பாடி
புறப்படுமுன்...
"பார்ப்பவர்கள் பாருங்கோ"
மீண்டும் ஒப்பனைக்கான
அழுகுரல் ஒப்பாரிகள்.

ஓரோடிவரும் ஒரு பிஞ்சு,
உயிரின் பிரதிமை.
வேதனை, கவலை, துன்பம் எதுவும்
தீண்டாத பருவம்.
கையில் கசங்கியதாய்
காகிதத்துண்டு...
த(எ)னக்குமட்டும் வெளிச்சமாய்.

தந்தையின் பாதத்தில்
மலர்களுடன் ஒரு மலராய்
சமர்ப்பணமான
பிஞ்சுக் கடிதம்.

(அம்மா.... எப்படிம்மா இருக்கே?
எப்போம்மா வருவே?
அப்பா வரார்.
பாத்துக்கோ.
பதில் போடு.
காத்திருப்பேன்.
இப்படிக்கு
மகன்)

தேர் உயர
எட்டுக்கால் நகர
கடவலில் அந்த
எடுத்தெறிதலுக்கான
3 எத்தனிப்பு
அந்தோ மீளாப் பயணத்தில்
கடிதம் சுமந்த
அவனது தந்தை.

கட்டில்,,,,,
தூக்கி நடக்கும் கால்களுக்குள்
இன்னும் இரண்டு புதிய கால்கள்
இடுகாடு நோக்கி ஒத்திகை
பார்க்கிறது.

திசைபார்த்துச் செதுக்கிய
ஆறடி மண்குழி,
ஆவென வாய் பிழந்து
அண்ணாந்து கிறக்கிறது.
அருகே
ஓராண்டாய் காத்துக்கிடக்கும்
அவள் (தாய்) உறங்கும்
மணற்றிட்டு.

பிஞ்சுக் கரங்கள் இரண்டில்
முதற் பிடிமண் அள்ளுவித்து
விரல் பிரித்து தூவினேன் (நான்)
அண்ணாந்து பிஞ்சு கேட்டது
"மாமா... என் கடிதத்தை அப்பா...
அம்மாவிடம் கொடுப்பாரா..?"

அவனை இறுக்கியபடி
சற்றுப் பின் நகர்ந்தேன்.

"மாமா... அப்பா எங்கெ போறார்..?
அப்பா...உன் அம்மாவிடம்
போறார்.."

செத்துப்போனேன் நான்.

— — மதுரன் — —
கட்டைப்பறிச்சான்

## பிரிதல்



கண்ணுக்குள் ஏதோவொரு
வர்ண இறகொன்று
வானில் மிதந்தபடி
காற்றில் பயணித்தபடி .....

கால்களுக் கருகினில்
தொட்டும் தொடாமலும் ..

இறகினுள்ள நிறங்கள்
கைதேர்ந்த ஓவியனின்
அதிசயதக்க மூளையினால்

மனதில் படிந்த உணர்வானது
இறகினை விழுங்கி ஏப்பமிட்டு ..
அற்புதம் அதிசயம் ஆகா!

தடவுதலின் குதூகலிப்பில்
இறகினை பிரிந்த அந்த
பறவையினை அறியாத படி .

திருமலை சுந்தா

## அன்புள்ள தாயே



என்னை பத்து மாதங்கள்
கருவறையில் சுமந்து
பல கஷ்டங்கள் வேதனைகள்
தாங்கி எனை
மடியில் எடுத்தாய் ஆவலாய்
நான் பசியில் இருந்தபோது
பதறியடித்து பசியை தீர்த்த
உனக்காக தருவதற்கு
இல்லை என்னிடம் எதுவும்
என் அன்பைத் தவிர

தாயே என்னைச் சுற்றி
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உனைப்போல் ஓர் தாய் கிடைக்குமா?
என் அருமை அன்னையே!
சொல்லித்தந்த அனைத்தையும்
உனக்காக நிறைவேற்றுவேன்

தருணி
வரோதயநகர், திருமலை.

## இயங்குவானே!

அருள் தமிழ்ப் புலன்மட்டோ,
ஆங்கிலப் புலவனுந்தான்!
இருள்தனை விலக்கும் வானத்
தெழுகதிர் - ஒளியின் பாய்ச்சல்!
பொருள்தரு சிறுவர் நூல்கள்
போதிய தாகத்தந்தோன்!
தருவதற்கின்னும் ஆய்வான்,
தந்துகொண்டே யிருப்பான்!

கேணியின் பித்தன் - நட்பாய்க்
கிடந்தவன் ஆலையூரன்!
பாணிகொள் சுளையான் - இன்றும்
பார்புகழ் விருது கொள்வான்!
ஆணிமுத்தனைய நெஞ்சன்
அனை விலான் - சங்கம் போட்டுப்
பேணியே தமிழைக் காக்கும்
பேறு கொண்டியங்குவானே!

தாமரைத் தீவான்
ஊச்சந்தீவு, கிண்ணியா.

## விளக்கெண்ணை திருடிய விட்டில்கள்

லலிதரனின் பக்கங்கள்

அந்தியின் கருவில்
இரவு உதைத்து கொண்டிருந்த
பொழுதொன்றில் விட்டில்கள்
திருடிக்கொண்டன விளகெண்ணையை
தற்கொடை பலிகளை தவிர்க்க.....

நரிகளின் நிறமூர்த்தங்கள்
விட்டில்களின் பரிணாமத்தில்
கலந்த தந்திர பகடை பொழுதுகள்
அவை.....

இருளே கடவுளையும் பின்
உலகத்தையும் படைத்ததை
கூறிகொண்டது விட்டில்களின்
கோட்டான் சாத்திரங்கள்.....

விளக்கெண்ணை பதுக்கல்
பொருளாய் போன பொழுதொன்றில்
சிறுவனின் கையிலிருந்து
உடைந்த எண்ணை போத்தலின்
துளிகள் காத்து கிடந்தன முன்ஜென்ம
பழிதீர்த்தல் ஒன்றுக்காய்....

இப்போது விட்டில் மனிதனாய்
பரிணாமம் கொண்டிருந்தது...
வீழும் குணம் மாற்றி கொள்ளாத
விட்டில்களின் புதுவடிவம்
எண்ணையில் வழுக்கி
காலை உடைத்து ஆசுபத்திரி
கட்டில் ஒன்றில் பந்தன
குவியல்களுள் பாம்பாய்
சுருண்டு படுத்திருந்தது.....

பழிகொள்ளும் நாகத்தை
குருவாய் கொண்ட புராதன
எண்ணை ஜென்ம சங்கல்பம்
முடித்து ஆவியாய் போனது.....

இன்னமும் எனது வாய் புலம்பி
கொள்கிறது 'புல்லாகி புழுவாகி'
சிவபுராணத்து உபாசனைகளை.....
இன்னமும் எனது வாய் புலம்பி
கொள்கிறது 'புல்லாகி புழுவாகி'
சிவபுராணத்து உபாசனைகளை.....

# இது குளக்கோட்டன் சமூகம்

வரலாற்றுப் பக்கம்



கடந்தவார தொடர்ச்சி.. ...

பெரும்பாலும் வரலாற்றுத் தேடல்களுக்காக கிராமங்கள் தோறும் கலாநிதி சரவணபவனுடன் செல்லும் இவர் அங்கு தகவல் சேகரிப்பதிலும், பின்னர் அவை நூலுருவாகும் பொழுது கணனித் தட்டச்சுச் செய்வதிலும் உதவி அவரது சாதனைகளுக்குத் துணைபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் அனைவரும் புராதான ஆலயச்சிதைவுகளும், தூர்ந்துபோன கேணியும் இருந்த இடத்தினிலிருந்து சேனவழிக்குளக் கரையினை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம். அந்தப்பயண நேரத்தில் பொற்கேணிப் பகுதியில் சிலர் புதையல் எடுக்க முற்பட்டதையும், அதன்போது அவர்கள் கிராமதேவதை பூசைக்காக நாகபாம்பு ஒன்றினைப் பலியிட்டதையும் நண்பன் விஜேந்திரன் விபரமாகக் கூறிக்கொண்டு வந்தார். நடுநிசி நேரத்தில் அவர்களது சாந்தி பூசைகள் முடிவுறும் நேரத்தில் பெரிய ஒளிப்பிழம்பொன்று பொற்கேணிப்பகுதியில் தோன்றவே புதையல் தோண்டும் பணியைப் பாதியில் விட்டுவிட்டு அனைவரும் ஓடிவிட்டதாக விஜேந்திரன் கூறிவந்தபோது சதுப்பு நிலங்களில் தோன்றும் 'மெதேன்' வாயு (கொள்ளிவாயு) பற்றிய எண்ணங்கள் என் மனத்தில் தோன்றி மறைந்தன.

"ஒரு காலத்தில உங்கட ஊரில நரபலி நடந்தது தெரியுமா?" எனக் கேட்டார் கலாநிதி சரவணபவன் அவர்கள். விஜேந்திரன் சொல்லி வந்த நாகபாம்பு பலியிடலின் தொடர்ச்சியான உரையாடலாக இது இடம் பெற்றது. இன்றைய நாட்களில் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலய 18ஆந் திருவிழாவின் போது வைராவியாருக்கு அலகு பாய்ச்சும் நிகழ்வு நடைபெறுகிறது. ஆனால் பண்டைய நாட்களில் பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை வைராவியார் தொழும்பு முறையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றின் இளம்பெண் ஒருவரை திருவிழா இறுதிநாளன்று பலியிடும் வழக்கம் இருந்தது. எனினும் இந்த [illegible] பின்னர் திருகோணமலை பூபால வன்னியனார் [illegible] 'வைராவியாருக்கு அலகு பாய்ச்சும்' நிகழ்வாக மாற்றியமைக்கப்பட்டதாக மரபுவழிக் கதைகள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது எனக் கூறினார் அவர்.

திருகோணமலை பூபால வன்னியனார் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்தபோது பூரண மரியாதையுடன் வரவேற்கப்பட்ட நிகழ்வு ஆலய உட்புறச் சுவரில் சித்திரமாக வரையப்பட்டிருந்தது. எனினும் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக நடந்த ஆலயத் திருத்த வேலைகளின் போது நம்மவர்கள் தூர நோக்குடன் சிந்திக்காது செயற்பட்டமையால் அவ்வரிய பொக்கிசங்களை நாம் இன்று இழந்துவிட்டோம்.

இது தொடர்பாக பல கட்டுரைகளை எழுதியிருந்த அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களை மனதில் நிறுத்தியே கலாநிதி சரவணபவன் அக் கேள்வியினைக் கேட்பது புரிந்தது. எனது அறிமுகம் அப்பாவை (வே.தங்கராசா) கலாநிதி சரவணபவன் அவர்களுடைய நண்பர் பட்டியலில் ஒருவராகச் சேர்த்தது. அவர் மூலமாக அப்பப்பாவின் எழுத்துக்களைப் படித்து, அவருக்கு அபிமானியாகிப் போன அவர் ஒவ்வொரு முறையும் என்னைக் காணும்போது சொல்வார் "ஜீவா உங்கள் அப்பப்பா எழுதிப் பதிவு செய்ததில் 10 வீதம் கூட நீங்களும், உங்கள் தகப்பனாரும் இன்னும் செய்யவில்லை" என்று.

அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் மேல் அவர் கொண்டிருந்த அபிமானம் அவரது மூன்றாவது நூலான 'இது குளக்கோட்டன் சமூகம்' என்ற நூலில் 63வது பக்கம் முதல் 83வது பக்கம்வரை இடம்பெறும் 'பலி' தொடர்பான கட்டுரையில் 68ஆம் பக்கத்தில் 'தம்பலகாமம் நரபலி' என்ற தலைப்பின் கீழ் மிக விரிவாக கோணேசர் கல்வெட்டுப் பாடல்களின் ஆதாரத்துடன் மிகச் சிறப்பாக விளக்கியிருக்கிறார்.

'பலி' என்ற இந்தப்பகுதி பலியிடலின் தோற்றவரலாறு, மடை, மிருகபலி, தற்கொலைப்படை, நவகண்டம் (போருக்கு முன்னர் வீரர்களை காளி சிலைக்குப் பலியிடல்) போன்றவற்றை விரிவாக ஆராய்கிறது. இதில் நாட்டார் வழிபாட்டில் பேணப்பட்ட வட்டார மரபுவழிச் சடங்குகள் பற்றிய நடைமுறைகள் விளக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுரையின் இறுதியில் பலியிடும் சிறுதெய்வ வழிபாட்டினை எதிர்த்த புத்த, சமண மத தத்துவங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

தொடரும்......

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி வேட்பாளரைக் குறைத்து மதிப்பிடலாமா ?

-வெட்டியான்

இலங்கையின் சனாதிபதித் தேர்தலில் மோதிக்கொண்டிருக்கும் இருவருள் ஒருவரான தற்போதைய சனாதிபதி தேர்தல் போட்டியில் குறைத்து மதிப்பிடக் கூடியவரா? என்ற சந்தேகம் பலரிடம் எழுந்துள்ளது.

சனாதிபதியின் கூடாரத்தில் இருந்து திடீரென மைத்திரிபால புறப்பட்டு எதிரணியின் பொது வேட்பாளரானவுடனேயே பொதுவானதொரு எண்ணம் இலங்கையரிடையே பரவியிருந்தது. அந்த எண்ணத்தின் எச்சம் மைத்திரிபால ஒரு சவால்மிக்க போட்டியாளர் என்றும் அதன்பால் சனாதிபதி ஓரம் கட்டப்படுவார் என்பதாகவும் இருந்தது.

எனினும் பொது வேட்பாளர் ஒன்றும் நூறு வீத நியாயமானவர் என்றோ, முற்றுமுழுதான மக்கள் நலன் கொண்ட அரசியல்வாதியென்றோ கருத முடியாத அளவிற்கு அவருடைய கடந்த கால அரசியல் வாழ்வு தெளிவான பதிவெதனையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டிய அதேவேளையில் அவரால் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் போட்டியைச் சனாதிபதி எதிர்கொள்ளத்-தக்கவரா என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

தனது மூன்றாவது சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற முதலாவது இலங்கையின் சனாதிபதி என்ற பெருமையைத் தக்கவைத்துள்ள மகிந்த ராஜபக்ச தனது மூன்றாவது சனாதிபதிப் பதவிக்கான அரசியல் அத்திவாரத்தை எப்போது இடத் தொடங்கினார் என்பதனைப் புரிந்துகொள்ள முயன்றால் அவரொன்றும் சாமானியர் அல்ல என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆயுதப் போரில் அசைக்க முடியாதவர்களாக இருந்த விடுதலைப் புலிகளின் ஆயதப் போர்ப்பலத்தை சர்வதேசத்தின் உதவியுடன் அழித்தொழிப்பதற்கு நல்லதொரு தலைமைத்துவம் இலங்கைக்குக் கட்டாயம் தேவையாக இருந்த போது அதனை வழங்கியவர் தற்போதைய சனாதிபதியே!

அவ்வாறான உறுதியான மனவலுக்கொண்ட ஒருவரின் நீண்டநாளையத் திட்டமிடலை ஒரு மாத காலத்தினுள் இல்லாதொழிப்பது என்பது ஒரு பகீரதப் பிரயத்தனம் தான்..... ஆம்... மூன்றாவது பதவிக்காலத்திற்கான திட்டமிடலானது உண்மையில் இரண்டாவது தடவை அவர் சனாதிபதியாகப் பதவியேற்ற 2009ம் ஆண்டிலேயே கருக் கொண்டுவிட்டது.

அக்காலப்பகுதியில் அதனைத் திட்டமிட வைத்தவர் அன்றைய பொது வேட்பாளரான இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே!

ஒரு மிகப் பெரும் யுத்த வெற்றியினை ஈட்டிக்கொடுத்த முப்படைத்தலைவரும் பாதுகாப்பு அமைச்சருமான அன்றைய சனாதிபதியுடன், அவ்யுத்த வெற்றிக்குப் பெரும்- பங்காற்றியதுடன் களத்தில் இராணுவத்தை தலைமை தாங்கி நெறிப்படுத்திய தளபதி சனாதிபதித் தேர்தலில் எதிரெதிர்களம் புகுந்த நிலையில், சனாதிபதி வெற்றியீட்டியிருப்பினும் அவ்வெற்றியின் வீதம் குறைவானதாகவே இருந்தது. ஏனெனில் திடீரெனக் அரசியல் களம் இறங்கிய ஒரு கத்துக்குட்டியினை எதிர்த்து பல்லாண்டுகால அரசியல் பரம்பரையைக் கொண்ட ஒருவருக்கெதிராக பெறப்படவேண்டிய வெற்றி வீதம் அந்நிலையில் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

அதையடுத்தே மூன்றாவது வெற்றியினைக் குறிவைத்து சனாதிபதி அன்றைய தினத்திலேயே தனது பயணத்தை ஆரம்பித்து விட்டார்.

அதன் முதற் கட்ட நகர்வாக எதிர்கட்சிகளின் பலம் சிறிது சிறிதாக உறிஞ்சப்பட்டது. 2010ம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் எதிர்கட்சிகள் பல நாருக்காக உடைத்- தழிக்கப்பட்டன. தலைமைத்துவச் சிக்கலை எதிர்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியில் அதிருப்தியுற்றவர்களையும், அன்றைய நிலையில் பலம் மிக்க மூன்றாவது கட்சியாகத் திகழ்ந்த மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து 2008ம் ஆண்டில் பிரிந்து இயங்கிய தேசிய சுதந்திர முன்னணி யிலிருந்தும் பலரை உள்வாங்கிக் கொண்டது அரசு. அத்துடன் அக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தெரிவான பியசேனாவும் ஆளுங்கட்சிக்குப் பாய்ந்தார்.

இதனையடுத்து சனாதிபதி அன்று, 2010ல், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை பாராளுமன்றத்தில் தனதாக்கிக் கொண்டார்.

அன்றைய தினம் அவரது மூன்றாவது சனாதிபதிப் பயணத்தில் முதற் கால் இடப்பட்டது.

அதனையடுத்து சனாதிபதியின் மூன்றாவது கால ஆட்சிக்குத் தடையாக இருந்தது இலங்கையின் அரசியல் அமைப்பு.

எந்தவொரு சனாதிபதியும் மூன்றாவது தடவையாகச் சனாதிபதியாக வருவதைத் தடைசெய்திருந்த அரசியல் அமைப்பை மாற்ற வேண்டிய தேவை இருந்தது. அவ்வாறு மாற்ற என்ன தேவை என்பதையும் அதே அரசியல் அமைப்பே சொல்லியிருந்தது. அத்தேவையென்னவெனில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்ய முடியும் என்பதாகும்.

ஏற்கனவே பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டிருந்த சனாதிபதிக்கு அரசியல் அமைப்பை மாற்ற எவ்வித கடினமும் இருக்கவில்லை. அதனையடுத்து 18வது திருத்தச்சட்ட அரசியல் யாப்பு களமிறக்கப்பட்டது. அக்களம் வெற்றிகரமாக அமையவே இரண்டாவது காலை சனாதிபதி தனது மூன்றாவது பணிக்காலத்திற்காக ஆழ ஊன்றிக் கொண்டார்.

18வது திருத்தத்தில் இரண்டு தடவைக்கு மேல் யாரும் சனாதிபதியாக இருக்கலாம் என்பதை மட்டுமல்லாது நீதித்துறையின் பிரதானியையும் தேர்தல்துறையின் பிரதானியையும் நியமிக்கும் அதிகாரங்களையும் சனாதிபதி தனதாக்கிக் கொண்டார்.

இவை அவரது பயணத்தில் மூன்றாவது காலாக அமைய அனைத்துத் தடைகளையும் உடைத்-தெறிந்து தனது அடுத்தகட்ட நகர்வுக்காக அவர் தனக்குரித்தானவர்களையும், நம்பிக்கை-யாளர்களையும், நண்பர்களையும் ஏனைய தேவையானவர்களின் நெருங்கியவர்களையும் அரச சேவைகளின் உயர் பீடங்களில் அமர்த்தி தனது நகர்வை உறுதியாக்கிக் கொண்டார்.

இந்த இறுதி நகர்வே சனாதிபதியின் நடவடிக்கைகளை மிகவும் விமர்சனத்திற்-குள்ளாக்கியது. அரச பதவிகளில் அமர்ந்தவர்கள் கடும் இலஞ்சம் பெறுவதாகவும், சட்ட திட்டங்களை மீறுவதாகவும், நிதி மோசடிகளில் கைதேர்ந்தவர்களாக இருப்பதாகவும் சுதந்திர ஊடகங்கள் ஆதாரங்களை வெளியிடத் தொடங்கின. அதனைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்ட எதிர்கட்சியினரும், அரச எதிர்ப்பாளர்களும் தமது பங்கிற்கு அரச எதிர்ப்புணர்வை மிக வேகமாகப் பரவச் செய்தனர்.

எதிர்ப்புயர்வினை நீளச் செய்தால் அதனை நிவர்த்திக்க முடியாது போகும் என்பதால் சனாதிபதி எடுத்த அடுத்த நகர்வே இரண்டு வருடங்களுக்கு முன் தள்ளப்பட்ட சனாதிபதித் தேர்தல்.

அரசியலமைப்புச் சட்டப்படி நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் எந் நேரத்திலும் சனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் உரிமை சனாதிபதிக்கிருந்தது. அதனைப் பயன்படுத்திய சனாதிபதி சரியாக தனது பதவியின் நான்கு வருட காலம் நிறைவுற்றவுடனேயே சனாதிபதித் தேர்தலை அறிவித்தார். அவ்வாறு அறிவிப்பதற்கு அவருக்கிருந்த அழுத்தம் மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுகளாக இருந்தாலும் அவருடைய பிரத்தியேக சாத்திரக்காரரின் எதிர்வுகூறலும், பிரத்தியேகப் புலனாய்வுச் சேவையின் அனுமானமும் அவரை விருப்பத்துடனேயே இவ்வறிவிப்பை வெளியிட வைத்தது.



அந்நேரத்தில் முன்னை சனாதிபதியான சந்திரிக்கா பண்டார-நாயக்க அரசிற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தாலும் பொது வேட்பாளராக நிற்கக் கூடிய பொருத்தமானவர் எவரும் பொது எதிரணியில் காணப்படாததால் சனாதிபதி தனது போட்டியாளர் தொடர்பாக பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

**தேர்தல் ஆய்வு**

எதுவரையெனில் அலரிமாளிகையில் அப்பம் உண்ண அழைக்கப்பட்ட ஆளுங்கட்சியின் முக்கியத்தர்கள் கலைந்த செல்லும் வரையே!

திடீரென எதிரணியின் பொது வேட்பாளராக மைத்திரிபால அறிவிக்கப்பட்ட பின்னரே தனது போட்டியாளருக்கும் முக்கியத்துவமொன்றிருப்பதை சனாதிபதி உணர்ந்துகொண்டார். அதனையடுத்து கட்சித் தாவல்கள் நடைபெறுவதைத் தற்காலிகமாகப் பின்தள்ள சனாதிபதி முதன் முதலில் கையில் எடுத்த ஆயுதம் "கோப்" கோப்புக்கள்.

"கோப்" என்றால் அமைச்சர்களும் அரச திணைக்களங்களும் மேற்கொண்டுள்ள ஊழல் நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கையிடும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவாகும். அக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளைக் கையில் எடுப்பேன் என சனாதிபதி அறிவித்தவுடன் முக்கியஸத்தர்களின் தாவல்கள் தற்காலிகமாகப் பின்தள்ளப்பட்டுள்ளன.

எனினும் அந்த அஸத்திரத்தையும் மடக்கு எதிரணிப் பொது வேட்பாளர் தான் ஆளம்கட்சியின் ஆட்சியில் இருந்தபோது தனக்கு வழங்கப்பட்ட பல மில்லியன் ரூபா எரிபொருட் செலவு கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்களைப் பாவிக்காமலிருப்பதை மக்களுக்கு ஆதாரத்துடன் தெரியப்படுத்தினார். அதனுடன் நின்று விடாமல் எதிரணி ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களை வெளிப்படுத்த முயற்சித்தார். அவற்றுள் மிக முக்கியமானது சனாதிபதியின் புதல்வர்களுக்காக வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள ஐக்கிய இராச்சியக் குதிரை மற்றும் சில உலங்கு வானூர்த்திகள்.!

இத்தகவல் வெளியிடப்பட்டவுடன் நடைபெற்ற மக்கள் பேரணியில் சனாதிபதி இரண்டு அறிவிப்புக்களை மேற்கொண்டார். அவற்றுள் ஒன்று கண்ணாடி வீட்டில் இருந்து கல்லெறிய முயற்சிக்காதீர்கள் என்பதாகவும் மற்றையது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிரணி இரகசிய ஒப்பந்த-மொன்றை மேற்கொண்டுள்ளது என்பவையுமே அவையாகும். எதிரணிக்குத் தயாராக அவரிடமும் விடயங்கள் இருப்பதே அவருக்குப் பலம் தான்.

மைத்திரிபாலவின் பாய்வு ஒரு திடீர் அதிர்ச்சியென்றாலும் கூட இற்றைவரை மிகச் சரியாகத் திட்டமிட்டுக் காய்நகர்த்தும் சனாதிபதியின் நகர்வுகளைக் குறைத்து மதிப்பிட முடியாது என்பதே உண்மை!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

M O B I L E

## ஸ்மார்ட் ப்ரேஸ்லெட்



சிக்ரெட்(cicret) என்னும் பாரீஸ் நிறுவனம் சமீபத்தில் தன்னுடைய பிரேஸ்லெட்டை அறிமுகப்படுத்தியது. இந்தப் பிரேஸ்லெட் அணிந்து கொள்வதன் மூலம் கையும் டச் ஸ்க்ரீனாக மாற்றலாம். இந்தப் பிரேஸ்லெட்டை மொபைல் அல்லது டேப்லெட்டுடன் இணைப்பதன் மூலம் கையிலுள்ள இந்தப் பிரேஸ்லெட் மொபைல் மற்றும் டேப்லெட்டின் திரையை உங்கள் கையில் ப்ரொஜெக்ட் செய்து காண்பிக்கிறது. இதன் மூலமாக மெயில் செக் பண்ணலாம், இவ்வாறான அனைத்தும் செய்யலாம்.

## அப்பிள் - பே போல்

அப்பிள் நிறுவனம் ஒன்லைன் மூலம் தனது தயாரிப்புக்களை விற்பனை செய்துவருகின்றமை யாவரும் அறிந்ததே. இச்சேவை மூலம் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வரும் காலங்களில் PayPal கணக்கினையும் பயன்படுத்த முடியும் என அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

## YOTA PHONE



யோட்டா ஸ்மார்ட் போன் (Yotaphone) தான் இப்படி இரட்டைத் திரையுடன் கவனத்தை ஈர்த்து வருகிறது. இதன் முன்பக்கம் வழக்கமான டிஸ்பிளேவைக் கொண்டிருக்கும். பின்பக்கத்தைத் திருப்பினால் அங்கும் ஒரு திரை இருக்கும். இந்த டிஸ்பிளே இ-இங்க் நுட்பத்தில் செயல்படக்கூடியது. மின்நூல்களை வாசிக்க இது மிகவும் ஏற்றது, நோட்டிபிகேஷன் பெறலாம். மின்னஞ்சல் மற்றும் மெசேஜ்களுக்குப் பதிலளிக்கப் பயன்படுத்தலாம்.

முன் பக்கத்தில் உள்ளவற்றைப் பின் பக்கத்துக்குக் கொண்டுசெல்லும் வசதியும் இருக்கிறது. முன்பக்கத் திரையில் கமெராவை கிளிக் செய்தால் பின்பக்கத் திரையில் ஸ்மைல் ப்ளீஸ் என்று வருவது சுவாரஸ்யம்.

INFOMATION TECHNOLOGY

## Soundcloud அதி விசேட பிளேயர்

ஒன்லைனில் ஒலிக் கோப்புக்களை தரவேற்றம் செய்து பகிர உதவும் வலைத்தளமான SoundCloud டெக்ஸ்டாப் கணினிகளில் பயன்படுத்தக்கூடிய பிளேயர் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. இந்த மென்பொருளின் உதவியுடன் SoundCloud வலைத்தளத்திற்கு விஜயம் செய்யாமலேயே பாடல்களை கேட்ட முடியும். மேலும் SoundCloud கணக்கினுள் உள்நுழைந்த பின்னர் பாடல்களை தரவேற்றம் செய்தல், லைக் செய்தல், பாடல்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் பார்வையிடுதல் போன்ற வசதிகளை இம்மென்பொருள் தருகின்றது.

## உருப்பெருக்கி பார்க்கலாம்



பத்திரிக்கைகள் போன்றவற்றில் காணப்படும் எழுத்துக்களை உருப்பெருக்கி iPhone உதவியுடன் வாசிப்பதற்கு Magnifier Flash எனும் மென்பொருள் உதவுகின்றது.

இம்மென்பொருளானது ஸ்மார்ட் கைப்பேசியின் கமெராவை உருப்பெருக்க வில்லை போன்று மாற்றுகின்றது. இதன் உருப்பெருக்கமானது x6 டிஜிட்டல் ஸூமினைக் (Digtal Zoom) கொண்டது. இவ்வாறு உருபெருக்கம் செய்யப்பட்ட எழுத்துக்களை படம் பிடிக்கவோ அல்லது ஈ-மெயில் செய்யவோ முடியுமாக இருத்தல் இம்மென்பொருளின் ஏனைய சிறப்பம்சங்களாகும்.


## கூகுள் மெப்

சாதாரண பயணிகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் வழிகாட்டியாக திகழும் இச் கூகுள் மெப் சேவையில் தற்போது Highway Lange Guidance எனும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள நெடுஞ்சாலைகளை இலகுவாக இனங்காண முடியும். இது முதன் முதலாக Germany, France, Italy, Spain, the UK மற்றும் Ireland ஆகிய நாடுகள் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

O T H E R

## கணனியில் இ.தளம்

கணனியில் இயங்குதளம் ஒன்றினை நிறுவிய பின்னர் அது முறையாகச் செயற்படுவதற்கு கிராபிக்ஸ், ஓடியோ, நெட்வேர்க் போன்ற ட்ரைவர் மென்பொருட்கள் நிறுவவேண்டியது அவசியமாகும். இம்மென்பொருட்களை நிறுவுவதற்கு கணனியின் மொடல் தெரிந்திருக்க வேண்டும்.




இவ்வாறு கணனியின் மொடல் தெரியாத சந்தர்ப்பங்களில் AMD வகை ட்ரைவர்களை நிறுவுவதற்கு AMD Driver Autodetect எனும் மென்பொருள் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

## புதிய டேப்லட்



Vido எனும் நிறுவனம் விண்டோஸ் 8.1 இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்ட W8C Freedom Light எனும் டேப்லட்டினை அறிமுகம் செய்துள்ளது. 97 டொலர்கள் மட்டுமே பெறுமதியான இந்த டேப்லட்டில் 8 அங்குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய IPS தொடுதிரை Intel Atom Z3735F Quad-Core Bay Trail Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளன.

இவை தவிர 4200mAh மின்கலம் தலா 2 மெகாபிக்சல்களை உடைய பிரதான மற்றும் வீடியோ அழைப்பினை மேற்கொள்வதற்கான கமெராக்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன.

## செவ்வாயில் உயிரினம்

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட ரோவர் விண்கலமானது செவ்வாயில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியங்களை கண்டறிவதற்கான நோக்கத்தில் அனுப்பப்பட்டுள்ள நிலையில், சில தினங்களுக்கு முன்னர் அங்கு உயிரினங்கள் உண்டு என்பதற்கான ஆதாரங்களை அனுப்பியுள்ளது. அதாவது ரோவர் விண்கலம் விசேட சாதனத்தின் மூலம் செவ்வாயில் மீத்தேன் வாயு இருக்கும் இடம் ஒன்றினை கண்டுபிடித்துள்ளது.

இதன் அடிப்படையில் அங்குள்ள மீத்தேன் வாயு தொடர்பான ஆராய்ச்சியினை தொடர்ந்து மேற்கொள்வதற்காக 2020ம் ஆண்டளவில் மற்றுமொரு திட்டத்தை நாசா நடைமுறைப்படுத்தவுள்ளது.

## தொடுகை

கணினி பாவனையாளர்கள் இலகுவாகவும், விரைவாகவும் பயன்படுத்தக்கூடிய வகையில் தொடுகை (Touch) தொழில்நுட்பத்தினைக் கொண்ட கீபோர்ட் உருவாக்கப்பட்டுள்ளது. கீபோர்ட் வடிவமைப்பில் புதிய தலைமுறைத் தொழில்நுட்பமாகக் கருதப்படும் இக்கீபோர்ட்டில் 101 சாவிகள் காணப்படுகின்றன. அனைத்துவிதமான இயங்குதளங்களைக் கொண்ட கணினிகளுடன் இதனை பயன்படுத்த முடியும்.




# குறுக்கெழுத்து புதிர் 040

முடிவுத் திகதி : 25.12.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 18 | ■ | 2 | 12 | 19 |
| 3 | | | | | ■ | | ■ | |
| | | | | 4 | | | | ன் |
| | ■ | ■ | ■ | 5 | | 13 | | |
| ■ | 6 | | | | ■ | | ■ | ■ |
| 7 | | | | | ■ | 8 | 14 | |
| 9 வா | | | | 15 | | | | ■ |
| 10 | | | | | ■ | 11 | | 16 |
| | ■ | 17 | | | ■ | ■ | | சு |

## இடமிருந்து வலமாக

1. பல வர்ணச் சிறகுடைய சிறு பறவை
2. கிளியில் சொண்டு
3. இனப்படுகொலை நடந்த ஆபிரிக்க நாடொன்று
4. இதனால் நாளாந்தம் மனிதர்கள் சாகின்றனர்
5. நாயகன் படத்தில் கமலின் நண்பர்
6. மீனவர் குலத்தைக் குறிக்கும் சங்ககாலச் சொல் - வலமிருந்து இடமாக
7. விழுதுகளை வீழ்த்தும்
8. இலங்கையின் நகரமொன்று
9. விமானத்தின் தமிழ்ப் பெயர்
15. இயற்கை மின்சாரம் பெறப் பய்னபடும் பொறி
10. அறுக்கப்பயன்படும்
11. முத்துக்களை சுளையாகக் கொண்ட பழம் -குழம்பியுள்ளது
17. குழந்தைப் பசு

## மேலிருந்து கீழாக

1. ஆண்டைக் குறிக்கும் சொல்
2. 'தல' நடிகர்
7. பூவொன்று
13. வாய்கட்டிப் பூசை செய்பவர்
14. யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று - குழம்பியுள்ளது
15. சுவாசிப்பது
16. குற்றம் - ஒத்தசொல்
18. நாடுகளை வெற்றிகொள்ள அரசர்கள் மேற்கொள்வது.
19. லவனின் சகோதரன்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு.*
*இல - 159ஏ.*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 039 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ட் | 12 ச | ய | 13 பா | த் | தி | ர | ம் |
| ■ | 2 அ | ந் | த | ம் | ■ | ச | ■ | ■ |
| 3 அ | தி | தி | ■ | 4 பு | ர | வ | ல | ர் |
| ம் | 21 ற் | 5 ர | வ | 14 அ | ம் | 6 ச | க் | 19 தி |
| 20 பு | றா | 7 கி | ரு | ஸ் | ண | ன் | ■ | சை |
| 18 லி | கா | ர | ண | தி | ■ | ■ | 15 கா | ■ |
| ■ | 16 டி | 22 க | ன் | ர | ■ | ■ | ன | 17 து |
| 8 க | ண் | ண | ம் | ம் | ■ | 9 அ | க | ம் |
| 10 கா | த | ம் | ■ | ■ | ■ | 11 த | ம் | பி |

*பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:*

*செல்விசதீபா*
*மத்தியவீதி, திருகோணமலை.*

*செல்வி. ஜெ. பிரசாளினி*
*பெருந்தெரு, திருகோணமலை.*

*செல்வன். அ. பிரதீசன்*
*அலஸ்தோட்டம், திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## கிறிஸ்மஸ் போனஸ் அஜித் ரசிகர்களுக்கு



அஜீத் நடித்த என்னை அறிந்தால் படம் இந்த பொங்கலுக்கு வருமா? வராதா? என்று கவலையில் இருந்த ரசிகர்களுக்கு கிறிஸ்துமஸ் கிப்ட் கிடைத்துள்ளது. இப்படத்தின் டீஸர் மற்றும் ஒரு பாடல் வெளியான நிலையில் தற்போது இப்படத்தின் டிரைலர் கிறிஸ்துமஸ் அன்று வெளியாகவுள்ளதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

## குஷ்புவின் ஆம்பள சர்ச்சையில்



குஷ்புவின் கணவர் சுந்தர் சி இயக்கி வரும் "ஆம்பள" படத்தை தமிழர்கள் வாழும் எந்த நாட்டிலும் ரிலீஸ் செய்ய விடக்கூடாது என்றும் அதையும் மீறி ரிலீஸ் செய்தால் தியேட்டர்கள் முன் போராட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். குஷ்புவின் தேவையில்லாத சர்ச்சை பேச்சால் சுந்தர் சி மற்றும் விஷாலுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் தயாரிப்பாளர் என்ற முறையில் விஷால் அதிர்ச்சி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து சுந்தர் சி தனது மனைவி குஷ்புவிடம் வருத்தம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டபோது, குஷ்பு அதை மறுத்துவிட்டாராம்.

## "ஐ" ட்ரெய்லர் அதிகரிக்கும் எதிர்பார்ப்பு



"ஷங்கர்" இயக்கத்தில் சியான் விக்ரம் நடிப்பில் பொங்கலுக்கு வெளியாகவுள்ள "ஐ" படம், ரசிகர்களிடையே பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு மாதத்திற்கு முன் வெளியான படத்தின் டீஸர் [illegible] தாண்டவுள்ள, நிலையில் இப்போது படத்தின் ட்ரெய்லர் வெளியிடப்பட்டுள்ளது.

## அஜித்துக்கு தடை சல்மான் கானே



சிபிராஜ் நடிப்பில் சமீபத்தில் வெளியான "நாய்கள் ஜாக்கிரதை" படம் வர்த்தக ரீதியில் பெரிய வெற்றிபெற்றது. இப்படத்தில் நடித்திருந்த நாயும் அனைவரின் பாராட்டையும் பெற்றது. வேறு படங்களில் நடிக்க பல வாய்ப்புகள் வந்தபோதும், அதையெல்லாம் மறுத்துவிட்டு இப்போது, "நாய்கள் ஜாக்கிரதை" படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்கும் பணியில் இறங்கியுள்ளாராம்.

## பிரபல இயக்குனர் சிகிச்சையில்

பிரபல திரைப்பட இயக்குனர் கே. பாலசந்தர், கடந்த சில நாட்களுக்கு முன்பு காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார், அந்த சிகிச்சைகளின் போது தான் அவருக்கு சிறுநீரக கோளாறு தீவிரமடைந்திருந்தமை தெரியவந்துள்ளது. உடனே தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர் அவரது உடல்நிலை சற்று தேறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## அம்மாவுக்கே 5 கோடியா!!



சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய பெயரிடப்படாத திரைப்படத்தில் ஹன்சிகா மற்றும் சுருதி ஹாசன் ஆகியோர் இருவேடத்தில் நடிக்கும் விஜய்க்கு ஜோடியாக நடிக்கவுள்ளனர். இவர்களோடு சுதீப் ஸ்ரீதேவி ஆகியோரும் இன்னும் புகழ்பூக்க நடிக்கிறார்கள். இந்த திரைப்படத்தில் அம்மாவாக நடிக்க ஸ்ரீதேவிக்கு வழங்கப்படும் சம்பளம் 5 கோடி என்று சொல்லப்படுகிறது.

## சினிமாவில் இருந்து விலகும் சமந்தா

சமந்தா, தமிழில் விக்ரமுடன் நடிக்கும், தெலுங்கில் அல்லு அர்ஜுனுடன் நடிக்கும் படம் என இந்த இரு படங்களையும் முடித்துக் கொடுத்துவிட்டு சினிமாவில் இருந்து ஒதுங்கப்போவதாக அவரது நெருங்கிய வட்டாரங்கள் கதையை கசிய விட்டுள்ளன.

**என்னைக் கண்டுபிடிங்க பார்ப்போம்**



சென்ற வாரம்



## சிம்புவா - அலறும் தயாரிப்பாளர்கள்

இது நம்ம ஆளு அடுத்த மாதம் ரிலீஸ் என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள் படக்குழுவினர். ஒரு பக்கம் நயன்தாரா புது படங்களின் படப்பிடிப்பில் பிஸியாகவும் மறுபக்கம் இயக்குநர் பாண்டிராஜோ சூர்யா தயாரிக்கும் குழந்தைகள் படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் பார்த்து இப்படம் ட்ராப்பாகிவிட்டது, என்று படத்துறையில் அடிபட தொடங்கிவிட்டது.

## திரை விமர்சனம்

### இயக்குனர் ஸ்டாலின் ராமலிங்கத்தின் "காடு" விதார்த், சம்ஸ்கிருதி நடிக்கும்



காடுகளில் இருந்து சிறுசிறு மரங்களை வெட்டி பிழைப்பு நடத்தி வரும் நாயகன் விதார்த்தின் நண்பன் முத்துக்குமார் வன அதிகாரியாக வேண்டும் என்ற ஒரே லட்சியத்துடன் இருக்கின்றார். இந்நிலையில் சந்தன மரத்தரகர் ஒருவர் சந்தன மரத்தை வெட்டி கொடுத்தால் நிறைய பணம் தருவதாக ஆசை காட்டுகிறார். இந்நிலையில் காட்டில் இருந்த விலையுயர்ந்த சந்தன மரங்களை முத்துக்குமார் கடத்தி வரும்போது வன அதிகாரிகளால் மாட்டிக்கொள்கிறார். தன் மீது வழக்கு எதுவும் போடவேண்டாம் என்றும், அப்படி வழக்கு போட்டால் தன்னுடைய லட்சிய வேலையான வன அதிகாரி வேலை தனக்கு கிடைக்காமல் போய்விடும் என்று முத்துகுமார் வன அதிகாரியிடம் கெஞ்சுகிறார். அவரும் மனமிறங்கி முத்துக்குமாருக்கு பதிலாக வேறொருவரை பிடித்துக்கொடுத்தால் அவரை விட்டுவிடுவதாக கூறுகிறார்.

இதனால் தன்னுடைய நண்பன் விதார்த்திடம் முத்துக்குமார் உதவி கேட்கிறார். நண்பனுக்காக பழியை ஏற்று சிறைக்கு செல்கிறார் விதார்த். இதன்மூலம் சந்தன மரக்கடத்தல்காரனை பிடிக்க உதவியாக கூறி நற்பெயரை பெற்று முத்துக்குமார் வன அதிகாரி வேலையை பெற்றுக்கொள்கிறார். அதன்பின்னர் சமூக விரோதிகளோடு சேர்ந்து சந்தன மரங்களை வெட்டி நிறைய பணம் சம்பாதிப்பது விதார்த்துக்கு தெரிய வர சமுத்திரக்கனியுடன் சேர்ந்து முத்துக்குமாருக்கு பாடம் புகட்ட முடிவு செய்கிறார் விதார்த். சிறையில் இருந்து வெளியே வந்து முத்துக்குமாரை விதார்த் பழிவாங்கினாரா? என்பதுதான் கதை.



நீண்ட நாட்களுக்கு பின்னர் விதார்த்துக்கு நல்ல வெயிட்டான கேரக்டர். வழக்கம்போல பெயரளவுக்கு வந்து போகும் ஹீரோயினியாக வருகிறார் சம்ஸ்கிருதி. சமுத்திரகனி, இவரது கதாபாத்திரம் கம்பீரத்தின் உச்சமாக அமைந்திருப்பதுடன், கதைக்கு தேவையான கேரக்டர்களை மட்டும் தேர்வு செய்து தெளிவான திரைக்கதையோடு காட்டில் பயணம் செய்துள்ளார் இயக்குனர். மொத்தத்தில் இந்த காட்டில் பசுமை தாராளம் இருக்கின்றது.

## சினிமா கிசு கிசு



- நொய்டா பகுதியில் இலியானா செருப்புக் கடை திறந்துள்ளார். அங்குள்ள வணிக வளாகத்தில் 1200 சதுர அடியில் இந்த கடை அமைந்துள்ளது.
- "என்னை அறிந்தால்" படத்தின் இசை வெளியீட்டு விழாவிற்காக அடிக்கப்பட்ட அஜீத் கட் அவுட்டுகளுக்கு பீர் அபிஷேகம் செய்துள்ளனர் ரசிகர்கள்.
- நடிகராக தமிழில் களமிறங்குகிறார் பாடகர் விஜய் யேசுதாஸ். ஏற்கனவே, மலையாளத்தில் ஒரு படத்தில் நடித்திருக்கும் விஜய், இப்பொழுது நட்புக்காக தமிழில் நடிகராகியிருக்கிறார்.
- சாந்தி தியேட்டர் வணிக வளாகமாகிறது. இந்த வளாகத்தில் நான்கு சிறு திரை அரங்குகளும் கட்டப்படுகின்றன. விரைவில் இதற்கான பணிகள் தொடங்க உள்ளது.
- "வானவில் வாழ்கை" மொத்தம் 17 பாடல்கள் அமைந்துள்ள இப்படத்தை, இசையமைத்து, இயக்குனராக அறிமுகமாகிறார் ஜேம்ஸ் வசந்தன். இப்படத்தில் வரும் அனைத்து பாடல்களையும் படத்தில் நடித்தவர்களே பாடுகிறார்கள்.
- த்ரிஷாவுடன் காதல் கொண்டு கலந்துருகி பல இடங்களுக்கும் பறந்து திரிந்த தெலுங்கு நடிகர் ராணா, இடையிலேயே தன் காதலை முறித்துக் கொண்டு தனிமைக்கு தாவியதாக கூறப்பட்டது. த்ரிஷா தரப்பில் விசாரித்தால், ராணா பலே கில்லாடி என்றும் பெண்கள் விடயத்தில் "ரொம்ப பாசக்கார பயபுள்ளை""னும் சொல்லியுள்ளார்.
- வல்லவன் அவர்கள் இசையமைக்கும் மொக்க படத்தில் லவ் பண்ணுங்க, லவ் பண்ணுங்க என்ற துள்ளல் பாடலை மா.கா.பா. ஆனந்த் முதன் முறையாக பாடியுள்ளாராம்.
- இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடைபெற்ற 2014-ம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் 1994-ம் ஆண்டு உலக அழகிப் பட்டத்தைச் சுவீகரித்திருந்த பிரபல இந்திய நடிகை ஐஸ்வர்யா ராய் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதுவரை உலக அழகிப் பட்டம் சுவீகரித்த அழகிகளிடையே ஐஸ்வர்யா ராயே வெற்றிகரமாக இருந்து வருகின்றார் என்பது கூறப்பட்டுள்ளது.
- ஜெயம்ரவியின் படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக இணைந்துகொண்ட அஞ்சலிக்கு புதுப்படங்கள் கைமேல் கிடைக்கத் தொடங்கியுள்ளன.
- விசாரணை படம் மூலம் மீண்டும் இயக்குனர் பணியை தொடர்ந்திருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பை இன்னும் 3 நாட்களில் முடிக்க [illegible] முடிவு செய்துள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் - 31

# குடியை கெடுக்கும் குடி



(வி.என்.சந்திரகாந்தி)

ஆதிகாலம் தொட்டே குடிக்கென்று ஒரு வரலாறு உண்டு. அந்த அளவுக்கு குடி மனிதனை ஆட்டிப் படைத்துக் கொண்டே இருக்கின்றது. சோமபானம் முதல் 'விஸ்கி', 'பிறண்டி', 'ஸ்ரெளட்' என்று நானாவித பானங்கள் உயர்குடி மக்களை கவர்வதாக உள்ளன. நீங்கள் ஒரு மதுபான விற்பனை நிலையத்திற்கு போனீர்களேயானால் வகைவகையான பெட்டிகளில் மதுபான போத்தல்கள் கண்ணாடி 'ஷோக்கேஸ்களில்' அழகழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இப்போ குளிர்பானங்கள் போன்று 'பியர்', 'ஸ்ரெளட்' ஆகியனவும் 'ரின்'களில் அடைக்கப்பட்டு இலகுவில் எடுத்துச்செல்லும் வகையில் விற்பனைக்கு வந்துள்ளது.

இனி 'ரெஸ்ரோரண்ட்' மற்றும் 'ஹோட்டல்கள்' மதுபானங்களால் நிரம்பியிருக்கின்றன. உயர்குடிமக்கள் விரும்பிய விரும்பியபடி விதம்விதமான மதுபானங்களை அங்கு கொள்வனவு செய்ய முடிவதுடன் அவற்றை வட்ட வட்ட மேசைகளில் பரப்பி நண்பர்களுடன் கூட அமர்ந்து வேண்டிய நேரம் எடுத்து இரசித்து பருகமுடியும்.

மேலும் 'பியர்', 'ஸ்ரெளட்' ஆகியவற்றை தவிர, உயர் ரக குடிவகைகள் இப்போ பல்லாயிரக்கணக்கான ரூபாய்களால் விலை அதிகரித்துள்ளன. அவற்றை பணம் கொடுத்து பருகிவிட்டு 'சிக்கன்' பிரியாணியையும் சாப்பிட்டுவிட்டு ஒரு அறை போட்டு தங்க 'ஏசி' வசதி உட்பட வெறுமனே 12000 ரூபா அளவில் தான் செலவாகும். குளிர்நாடுகளில் வாழும் வெள்ளையர்களுக்கும், எமது நாட்டிற்கு வரும் சுற்றுலா பிரயாணிகளுக்கும் கோடிக்கணக்கான 'டொலர்களை' மாதாந்தம் வருமானமாக பெறும் வெளிநாட்டவருக்கும் வைரவியாபாரிகளுக்கும் எவை அவசியமோ அவை பற்றியே மேலே விஸ்தரிக்கப்பட்டது. அப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையை குடும்பத்துடன் இணைந்தே அனுபவிப்பவர்கள். வெளிநாடுகளில் அவர்களது ஆரோக்கியம் காப்புறுதி மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் எமது நாட்டில் நிலைமை வேறு. இது உஷ்ண பிரதேசம். எமது வருமானமும் மிகவும் அற்பமானது. எமது சமூகம், குடும்பம் பொறுப்பு என்று வாழ்வது. மனைவி, பிள்ளைகள் எங்களில் தங்கி இருப்பர். எமது அற்ப வருமானத்தில் அவர்களது உணவு, உடை, படிப்பு, தங்குமிடவசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கு உண்டு. நோய்நொடி என்று வந்து விட்டால் அதற்கான செலவு வேறு. சாமத்தியவீடு, திருமணம், புதுமனை அமைத்தல், விழாக்கள் என்று எமது மனைவி, பிள்ளைகள் எம்மிடமிருந்து பல சேவைகளை எதிர்பார்த்திருப்பர். இனி பேரக்குழந்தைகள் பிறந்தால் அரவணைத்து பாதுகாக்க வேண்டும். பிள்ளைகளையும், மருமக்களையும் பேணவேண்டும். அவர்களுக்கு பக்கதுணையாக இருக்க வேண்டும். இப்போதெல்லாம் ஆண், பெண் இருபாலாரும் தொழில் பார்க்கிறார்கள். அவர்கள் கடமைக்கு செல்லும் நேரங்களில் நாம் பேரக்குழந்தைகளை பாடசாலைகளுக்கும், தனியார் வகுப்புக்களுக்கும் அழைத்துச்செல்லல் போன்ற கடமைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டு எம்மவர் பலர் குடிக்கு அடிமையாக இருப்பதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளை வார்த்தைகளில் அடக்கமுடியாது. Addiction என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் உண்டு. அது துர்பழக்கத்தைக் குறிக்கும். Addicted to liquor என்று சொன்னால் மதுவுக்கு அடிமையானமையை குறிக்கும். அந்த நிலைமைக்கு வந்து விட்டால் அவரை அந்த பழக்கத்தில் இருந்து மீட்பது மிகவும் கஸ்டம்.

எம் நாட்டில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் செய்த நல்ல காரியம் பொது இடங்களில், வீதி ஓரங்களில் குடிப்பதை (சிகரட் உட்பட) தடைசெய்ததுடன் யாராவது குடித்துவிட்டு அவ்வாறான இடங்களில் நடமாடினால் அவரை கைது செய்து சிறையில் அடைப்பது. குடி குடியைக்கெடுப்பது மட்டுமன்றி ஏனைய பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதை உணர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் நாட்டில் அரசாங்கத்தின் அனுமதியுடன் சாராய தவறணைகள் அனைத்து இடங்களிலும் நடாத்தப்படுகின்றது. அதற்கு காரணம் குடிகாரர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கம் அல்ல. சாராய தவறணைகளால் அரசாங்கத்திற்கு பெரும் தொகை வருமானம் கிடைக்கின்றது.

அடுத்து கிராமங்கள் தோறும் வரி செலுத்தும் கள்ளுக்கொட்டில்கள் அமைந்துள்ளன. பனங்கள்ளு, தென்னங்கள்ளு இரண்டும் இங்கு குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இப்போ தேங்காயின் விலையேற்றத்தால் தென்னங்கள்ளு கிடைப்பது அரிதாக உள்ளது. பணங்கள்ளு ஒரு சீசனுக்கே கிடைக்கின்றது.

தவிர, சட்ட விரோத வடிசாராயம் தயாரிக்கப்படுகின்றது. அது குறைந்த விலைக்கு கிடைக்கின்றது. எங்கேயும், எப்போதும் பெற்றுக்கொள்ளலாம். இனி குடிகாரர்கள் யார் யாருக்கு கெடுதல் செய்கிறார்கள் என்று பார்ப்போம். குடிகாரர் முதலில் கெடுதல் செய்வது தமக்கே. பிரதானமாக குடி அவர்களுடைய சட்டைப்பையை காலி செய்கின்றது. அவர்களுடைய ஆரோக்கியத்திற்கு குந்தகம் ஏற்படுத்துகின்றது. நோய்களை உண்டு பண்ணுகின்றது.


முக்கியமாக 'அல்சர்' ஏற்பட வழிவகுக்கின்றது. ஈரல், இதயம், நுரையீரல் போன்ற உள்ளுறுப்புகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு சிகிச்சையை பயனற்றதாக்குகின்றது. இரத்த அழுத்தம் சலரோகம் உள்ளவர்களுக்கு குடிப்பழக்கம் இருந்தால் அவற்றை எவ்வகை மருந்தாலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது.

மேலும் தெருவோரம் வீழ்தல், விபத்துக்களுக்கு முகம் கொடுத்தல், சண்டை சச்சரவுகளுக்கு உட்படுதல், சமூகத்தில் அவமானப்படல் போன்றவற்றை குடிப்பவர்கள் சந்தித்தேயாகவேண்டும். மரணமும் விரைவில் சம்பவிக்கும்.

அடுத்ததாக பாதிப்புக்குள்ளாபவர் மனைவி! ஒரு குடிகாரனின் மனைவிபற்றி எண்ணும் போது கண்ணீர் விட்டு அழவும் தோன்றும்! மனைவியை சந்தேகப்படல், அடித்தல், பிள்ளைகளுக்கு முன்னால் சித்திரைவதைப்படுத்தல், அவளது நகைகளையும் ஏனைய வளங்களையும் குடிக்காக பறித்தல், சமூகத்தில் தலை காட்ட முடியாதபடி செய்தல், பிள்ளைகள் மேலும் பேரப்பிள்ளைகள் மேலும் பாசம் காட்டுவதை தடுத்தல், வீட்டை விட்டு துரத்துதல், பலவகை நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கல், கொலை செய்யுமளவுக்கு செல்லுதல்.

இன்னும் கூறப்போனால் ஒரு குடிகார தந்தைக்கு பிள்ளைகளாக பிறந்தவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரியவர்களாவர். முதலில் குடும்பத்தில் அவர்களது நிம்மதி கெடும். தந்தைமேல் வெறுப்பும் தாய்மேல் பரிதாபமும் ஏற்படும். நித்திரை குலையும். படிப்பு பாதிக்கப்படும். சீருடை உட்பட பாடசாலை நூல்கள், காகிதாதி ஆகியனவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். உதவிக்காக அன்னியர்களிடம் கையேந்த வேண்டிய கட்டத்திற்கு உட்படுவர். சரியான உணவும் மருத்துவ வசதியும் கிட்டாமல் அல்லலுறுவர்.

அடுத்து அயலவர்! குடிகாரன் தினசரி குடித்துவிட்டு வருவதும் குடும்பத்தினருடன் சத்தம் போட்டு சண்டையிடுவதும் அயலவர்களின் நிம்மதிக்கு விரோதமாக அமையும். ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால் பேசி தீர்க்க முடியாதாகையால் அடிபாட்டுக்கும் உள்ளாக நிர்ப்பந்திக்கப்படுவர். இன்று இணைய தளத்தை திறந்தால் வல்லுறவு, கொலை, வீதி விபத்துக்கள் எல்லாவற்றுக்குமே காரணமாய் இருப்பவர்கள் குடிகாரரே!




குடிக்கு அடிமையானவர்களால் நிச்சயம் குடியை விட முடியாதுதான். ஆனால் வைராக்கியத்தால் எதனையும் சாதிக்க முடியும். 'நான் இனிமேல் எனது மனைவியுடன் சேர்ந்து தான் குடிப்பேன்; இல்லாவிட்டால் குடிக்க மாட்டேன்' என்று முடிவெடுங்கள். எல்லாமே சரியாகிவிடும்!

---

# சாதாரணமானவனின் மனது

## ஒரு மனிதன்... ஒரு வாழ்வு... அவன் மனசாட்சி...

### சஞ்சயன் செல்வமாணிக்கம்

எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எங்கோ கேட்ட குரல்? எங்கு என்று நினைவுக்கு வரவில்லை. தனது கணணி இயங்க மறுக்கிறது உடனே வர முடியுமா என்றார். மாலை வருவதாகச் சொல்லி விலாசம் வாங்கிய போதுதான் அவரை நினைவு வந்தது. வயதானவர், சுகயீனமானவர், தனிமையில் வசிப்பவர், புகைத்தலையே தனது தொழிலாகக் கொண்டவர், நான் இது வரை காணாத ஒழுங்கீனமான, அழுக்கான வீட்டின் உரிமையாளர் என்று தான் நினைத்திருந்தேன் அவரைப் பற்றி இன்று அவரைச் சந்திக்கும் வரை.

மாலை 7 மணியிருக்கும், இலையுதிர்க்கால இருட்டும், மழையும், காற்றும் தங்களின் சுயத்தை வெளியே காட்டிக் கொண்டிருந்தன. நிலக்கீழ் ரயில் நிலையத்தில் இருந்து அவர் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். தொலைபேசியில் அழைத்தவரின் வீட்டு ஜன்னலில் தட்டினேன். கதவினூடாக எட்டிப் பார்த்தபடியே "என்ன வேண்டும்?" என்றார் முகத்தை கடுமையாக வைத்தபடியே.

"கணணி திருத்த" என்று இழுத்தேன். கண்ணைச் சுருக்கி பலமாய் யோசித்தார். பின்பு "அவனில்லையே நீ" என்றார். "இல்லை, நான் தான் அவன். நான் தான் முன்பும் உங்கள் கணணி திருத்தியவன் என்றேன். சந்தேகத்துடன் உள்ளே அனுமதித்தார். உள்ளே போய் அவரின் அருகில் அமர்ந்து கொண்டேன். வீடு எப்பவும் போலவே கிடந்தது. அவரோ தொலைக்காட்சிப் பெட்டியில் "(T)டங்கோ" நடனத்தில் மூழ்கிப் போயிருந்தார்.

செருமினேன்.. அவர் கண்டு கொள்ளவில்லை. ம்.. ம் என்று கனைத்தேன்.. அதற்கும் எவ்வித கவனத்தையும் அவர் காட்டவில்லை. இருமினேன் இப்பவும் அவர் கண்டு கொள்ளவில்லை.

திரையில் வெள்ளைத் துடையழகிகள் சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்தார்கள். திடீர் என இசையின் தாளம் மாறியது. "இது ஐரோப்பிய நாடோடிகளின் இசையாக்கும்" என்று என்னைப் பார்த்துச் சொன்னார். என்னை அழைத்த காரணத்தை சொல்ல முடியுமா என்று அவரின் வெள்ளைத் துடையழகிகள் மீதான கவனத்தை கெடுக்காமல் மெதுவாயக் கேட்டேன். உன்னை நான் எப்போ அழைத்தேன்? என்றார். வடிவேலுவின் "ஆஹா" என் காதுக்குள் கேட்டது. அவரோ மீண்டும் நடனத்தில் ஆழ்ந்து போயிருந்தார்.

நீங்கள் என்னை கணணி திருத்த அழைத்தீர்கள் என்றேன். என்னைப் பார்த்தபடியே பலமாய் சிந்தித்தார். சில நிமிடங்களின் பின் நான் கூறியதை நம்பாதவர் போல் "அப்படியா"? என்ற போது எனக்கு இன்றைய நாள் நல்லதில்லை என்று உள் மனது சொல்லிக் கொண்டிருந்தது.

சில நிமிடங்களின் பின் ஆம் ஆம் எனது கணணி வேலை செய்யவில்லை அது தான் அழைத்தேன் என்றும், இது தான் அந்தக் கணணி என்றும் ஒரு புதிய கணணியைக் காட்டினார். நான் கணணியைத் இயக்குவதற்காக அதைத் திறந்த போது என்னை இடைமறித்து தான் கணணியை என்னைப் போல் திறந்து பின்பு தானியங்கிக் கருவியால் இயக்கியதாகவும் கூறினார். தானியங்கியா? கணணிக்கா என்று கேட்டேன். மேசையில் இருந்த தொலைக்காட்ச்சிப் பெட்டியின் தானியங்கியை எடுத்துக் காட்டினார். எனக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. மனக்கண்ணில் "ஒரு மனிசனுக்கு எத்தின கண்டம்டா" என்று வடிவேலு கூறும் டயலாக் கேட்டது"

அய்யா! அது உங்கள் தொலைக்காட்சிப் பெட்டியின் தானியக்கி. கணணியினுடையதல்ல என்றேன். மிகவும் நிதானமாக "அப்படியா" என்றார். கணணியை எவ்வாறு இயக்குவது என்று மிகவும் நிதானமாக விளக்கிக் கூறினேன். படம் கீறி விளக்கங்கள் எழுதிக் கொடுத்தேன். சரி நீங்களே இனி கணணியை இயக்குங்கள் என்றதும் அவர் மீண்டும் தொலைக் காட்சிப் பெட்டியின் தானியக்கிக் கருவியை எடுத்த போது என் பொறுமையை சிரமப்படுத்தி வரவழைக்க வேண்டியதாயிற்று.

அவருக்கு படங்கள் மூலம் விளக்கிய அவணத்தைக் காட்டினேன். அதை பார்த்த பின்பும் அவருக்கு புரியவில்லை. அவர் ஏதோ அந்த தொலைக்காட்சிப் பெட்டியின் தானியக்கிக் கருவியை விடுவதாயில்லை. நாளை மாலை தனது கணணியை எடுத்துப் போக வேண்டும் எதை எதை எடுத்தப் போவது என்றார். மின்சார இணைப்பு, கணணி கொண்டு சென்றால் காணும் என்றேன். மின்சார இணைப்பை இப்போதே கழட்டி வை என்று கட்டளையிட்டார். அப்படியே செய்தேன்.

சற்று நேரம் அமைதியாய் கடந்து போனது. பின்பு ஏன் மின்சார இணைப்பை கழட்டினாய்? நான் எப்படி கணணியை இயக்குவது என்றார் என்னைப் பார்த்து. எனது பொறுமை எல்லையைத் தாண்டிக் கொண்டிருந்தாலும் அவரின் நிலமை புரிந்ததால் அமைதியாக நீங்கள் தான் களட்டி வைக்கச் சொன்னதாகச் சொன்னேன். அதை அவர் நம்புவதாக இல்லை. நீ பொய் சொல்கிறாய் என்று சினந்தார். எனது சினமும் எல்லையை நெருங்குவதை உணர்ந்தாலும் அடக்கிக் கொண்டேன்.

மீண்டும் மின்சார இணைப்பை பொருத்தி வைத்தேன். "திருப்தி" என்று தலையாட்டினார். அதன் பின் தனது கணணி இயங்கவில்லை அதை இயக்கித் தர முடியுமா என்று ஆரம்பத்தில் கூறிய பிரச்சனையையே மீண்டும் கூறினார். அய்யோ! என்று கத்த வேண்டும் போலிருந்தது எனக்கு. மெதுவாய் மீண்டும் அரம்பத்தில் இருந்து விளக்கிக் கூறினேன். அவரின் கண்கள் என்னை நோக்கியிருந்தாலும் மனது எங்கோ சஞ்சரித்திருந்தது. இடையிடையே என்னை இடைமறித்து ஐரோப்பிய நாடோடிகளின் இசை பற்றி ஏதேதோ கூறினார். இசையைப் பற்றி எதுவுமறியாத ஞானசூன்யம் நான். எனக்கு அவர் கூறிய எதுவுமே புரியவில்லை. மரியாதைக்காக புரிந்தது என்று தலையாட்டிக் கொண்டிருந்தேன். நான் புறப்படுவதற்காக எனது உடைகளை அணிந்து கொண்டு தொப்பியை போட்டுக் கொண்டதன் பின்பும் அவர் என்னைக் கவனிப்பதாய் இல்லை.

"அய்யா! நான் புறப்படுகிறேன்" என்றேன். எங்கே போகிறாய்? என்றார் தொலைக்காட்சிப் பெட்டியில் இருந்து கண்களை அகற்றாமலே. எனது வீட்டுக்குத் தான் என்றேன். சரி என்பது போல தலையாட்டினார். எனக்கு நீங்கள் பணம் தர வேண்டும் என்றேன். ஏன் என்றார்? கணணி திருத்தித் தந்தேன், அதற்குரிய பணம் என்றேன். அவரோ அதை சட்டைசெய்யாமலே.... நான் கணணி திருத்துபவனுக்காக காத்திருக்கிறேன் என்ற படியே தொலைக்காட்சிப் பெட்டியின் தானியக்கிக் கருவியால் கணணியை இயக்க முயற்சிக்கத் தொடங்கினார்.

எனக்கேதோ கணணி அவரை தூஷணத்தால் திட்டுவது போல இருந்தது. வெளியே வந்தேன் குளிர் காற்று முகத்தில் அடித்தது. வீடு வந்து கதவை திறக்க முற்பட்ட போது வீட்டுத் திறப்பை நான் எங்கோ மறந்துவிட்டு வந்திருப்பது புரிந்தது.

**இதுவும் நன்மைக்கே...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைபேசி செய்யும் நன்மை – தீமைகள்

...நாட்டு நடப்பு...

உலகம் முழுவதும் கையடக்க அலைபேசிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே செல்கின்றது உண்மையில் எமது நாளாந்த நடடிக்கைகளுக்கு அது மிகவும் அத்தியவசியமானதே சமூகத்தில் சகல மட்டத்தினரும் உபயோகிக்க கூடிய வகையில் சந்தையில் எந்த விலைக்கும் அதை கொள்வனவு செய்யலாம்.

சாதாரண தரத்தினர் கொள்வனவு செய்யும் கையடக்க அலைபேசிகளில் பிரயோசனங்கள் குறைவாக இருந்தாலும் முக்கிய தேவையான தகவல்கள் பரிமாற்றங்களில் எந்தவித குறைபாடும் இல்லை.

நமது நாட்டில் கையடக்க அலைபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் மிக சொற்ப தொகையினரே அவற்றை உபயோகித்து வந்தனர். ஆனால் இன்று எவருடைய கரங்களிலும் அவற்றை காணக்கூடியதாகவுள்ளன. நேரத்தை மிச்சப்படுத்துவதே அவற்றிலிருந்து பெறப்படும் மிக முக்கிய பிரயோசனம்.

அநாவசிய போக்குவரத்தைக் கூட அவை ஊடாக குறைத்துக் கொள்ள எமக்கு வாய்ப்புண்டு. இருந்த இடத்திலே இருந்துகொண்டு சகலவற்றையும் அறிந்து கொள்ளக்கூடிய வசதிகள் உண்டு. இன்று எமது பாடசாலை சிறார்கள் கூட கையடக்க அலைபேசிகளை உபயோகித்து வருகின்றனர்.

அத்தொலைத் தொடர்பு சாதனத்தால் நன்மைகளைப் போன்று தீமைகளும் உண்டு என்பதனை பல இலத்திரனிய, அச்சு ஊடகங்கள் வெளிக்கொணர்வு செய்துள்ளன. சில பெற்றோர் அவைகளால் எங்கே தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடுமோ எனும் அச்சத்தில் அவைகளை பிள்ளைகள் உபயோகிக்க அனுமதிப்பதே இல்லை. அதனால் பிள்ளைகள் தமது பெற்றோருடன் மனக்கசப்புக்களை ஏற்படுத்தி கொண்ட சம்பவங்கள் பல. இருப்பினும் தூர இடங்களுக்குச் செல்லும் பிள்ளைகளின் பாதுகாப்பை கருதி பிள்ளைகள் விரும்பியோ, விரும்பாமலோ அவர்களுக்கு அலைபேசிகளை பெற்றுக் கொடுக்கின்றனர் சிலர். கையடக்க அலைபேசிகள் பிள்ளைகளின் கையில் இருந்தால், பெற்றோருக்கு தெரியாமல் ஒன்றையும் புரிய முடியாத நிலையும் இருப்பதால், அவற்றை உபயோகிக்க சிலர் முன்வருவதில்லை.

சுகந்தி கபொ.த (சாதாரணம்) வகுப்பு மாணவி. அவளுடைய சக மாணவர்களின் கரங்களில் அலைபேசிகள் இருந்தாலும் அவளிடம் அது இல்லாதது அவளுக்கு பெரும் கவலையை அளித்தது. அவளுக்கு வயது பதினைந்து. குடும்ப பொருளாதாரக் கஷ்டத்தின் நிமித்தம் அவளின் தாயாரான தாரணி சவுதி சென்றிருந்தாள்.

தாரணியின் கணவர் ஆரம்ப காலத்தில் சுகதேகியாக காணப்பட்டாலும் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் அவரது இடதுகால் துண்டிக்கப்பட்டது. அதனால் அவரால் எந்தவொரு தொழிலுக்கும் செல்ல முடியாத நிலையின் காரணமாகவே தாரணி பணிப்பெண்ணாக சவுதி சென்றாள்.

சுகந்தி அவர்களுக்கு ஒரே மகள். அவளை எப்படியும் கற்பிக்க வேண்டும் என்பதே சுகந்தியின் பெற்றோரினது அவா.



சுகந்தியை பொறுத்தவரையில் அங்கு அவளுக்கு எந்தவித குறைகளும் இருக்கவில்லை. தகப்பனாருக்கு சற்று போக்குவரத்து செய்ய முடியாமலிருந்தாலும் அவளின் மாமனார் தகப்பனாருக்கு என்றும் உதவியாக இருந்து வந்தார்.

சுகந்தியின் மாமாவுக்கு வயது 45. அவர் இன்னமும் திருமணம் செய்யவில்லை. அதைப்பற்றி அவர் யோசிக்கவே இல்லை தனது தங்கையின் கணவர் அங்கவீனராக இருப்பதால் அந்த குடும்பத்தை கவனிப்பதே அவரின் முக்கிய வேலை.

சுகந்தியின் மாமனார் அவள் மீது மிகவும் பாசமாக இருந்தார். அவளுக்கு தேவையானவற்றை அவ்வப்போது வேண்டிக் கொடுத்தும் வந்தார். ஆனால் ஒரே ஒரு விடயத்தில் அவரும் மிக கண்டிப்புடன் இருந்தார். அதாவது சுகந்தியின் பெற்றோர் அவளின் கல்வி நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவே அவளுக்கு இதுவரை ஓர் அலைபேசியை வேண்டிக் கொடுக்கவில்லை. அவரும் அதே நிலைப்பாட்டிலே இருந்து வந்தார்.

தனது தகப்பனிடமும் மாமனாரிடமும் அவ்வப்போது கையடக்க அலைபேசி தொடர்பாக அவள் நினைவூட்டுவதில் என்றுமே தவறுவதே இல்லை. இருப்பினும் அவர்கள் இருவரும் தங்களது நிலைப்பாட்டிலிருந்து சற்றேனும் விலகிக் கொள்ளவில்லை. அவ்வாறே சுகந்தியின் தாயாரான தாரணி கூட சவுதியிலிருந்து சுகந்திக்கு தேவையானவைகளை அங்கிருந்து வருபவர்களின் கைகளில் அனுப்பி வைத்தாலு் அலைபேசி வேண்டிக் கொடுக்கும் விடயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தாள்.

அதுவும் சுகந்தி ஒரு பள்ளி மாணவி அலைபேசி தொடர்பினால் அவளின் கல்வி நடவடிக்கைகள் மாத்திரமல்ல மற்றும் தேவையற்ற பிரச்சினைகள், வயதுக் கோளாறினால் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவை நேரக்கூடாதென்பதே சகலரினதும் நோக்கம். மேலும் அவளின் தாயார் கூட அவளருகில் இல்லை எங்கே ஏதம் தவறு நடந்து விடுமோ என அவர்கள் அடிக்கடி அஞ்சுவது நியாயமே.

ஆசைகள் யாரைத்தான் விட்டு வைத்தது? சுகந்தி அமைதியாக இருந்தாலும் அவளின் சிநேகிதிகள் சும்மா இருப்பார்களா? அலைபேசி தொடர்பில் அவளுக்கு நாளாந்தம் ஆசையை ஏற்படுத்த அவர்கள் தவறவில்லை. அதனால் சுகந்தி தனது பெற்றோர்களோடு தேவையற்ற பிரச்சினைகளை. நாளாந்தம் உருவாக்கிக் கொண்டே வந்தாள்.

வெளிநாட்டிலிருக்கும் அவளின் தாயார் வீட்டிலுள்ள அலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளும் வேளையில் கூட தனக்கு கையடக்க அலைபேசி வேண்டுமென்றே அடம்பிடிப்பாள். அவசரத் தேவைக்கு வீட்டில் ஓர் அலைபேசி இருக்கும் போது கையடக்க அலைபேசி எதற்கு? என அவளின் பெற்றோர் அவளுக்கு அறிவுரை வழங்கினாலும் அவள் அவர்களின் பேச்சை கேட்க ஆயத்தமில்லாமல் இருப்பதற்கு காரணம் பள்ளி சினேகிதிகளின் தொல்லையே

இன்றைய பிள்ளைகளுக்கு தமது பெற்றோர் உறவினர் ஆகியோர்களின் பேச்சுக்களை விட தமது நண்பர்களின் பேச்சே வேதவாக்காக உள்ளது. அதனால் சுகந்தி இன்னமும் பொறுமையை கடைப்பிடிக்க ஆயத்தமில்லாதவளாக இருந்தாள். துணிந்தவனுக்கு தூக்கு மேடை பஞ்சு மெத்தை என்று வீரபாண்டிய கட்டபொம்மனே அன்று கூறிவைத்துவிட்டார் அதனால் ஏன் தயக்கப்படுவான்? அவள் எடுத்த பீதியற்ற தீர்க்கமான முடிவு அவளின் அந்த அழகிய கரங்களுக்கு இழகான அலைபேசியை பெற்றுக் கொடுத்தது.

அந்த துணிகரச் செயலுக்கு ஆலொசனை வழங்கியவர்களும், அந்த வேலையை வெற்றிகரமாகவும், சக்கிதமாகவும் முடித்து வைத்தவர்களும் அவளின் பள்ளி சினேகிதிகளே. கடந்த வருடம் அவள் வயதிற்கு வந்திருந்த வேளையில் அவளின் தாயார் தனது அன்புப் பரிசாக அழகான ஒரு சோடி தங்கத் தோடுகளை சவுதியிலிருந்து அனுப்பி இருந்தாள். அந்த வீட்டில் அது சற்று பெறுமதி வாய்ந்த பொருள்களில் ஒன்றாகும்.

தனது மகளுக்காக தாரணி அதை வேண்டி மகளின் பூப்பு நீராட்டு விழா அன்றே சதியிலிருந்து தனது நண்பி ஒருவர் மூலம் அனுப்பி இருந்தாள். விழா முடிவடைந்து பாடசாலைக்கு செல்லும் வேளையில் தகப்பனார் அதை வேண்டி மிக கவனமாக அலுமாரியில் பூட்டி வைத்திருந்தார். அதுமாத்திரமல்ல அவள் பாடசாலைக்கு செல்லவும், வேறு இடங்களுக்கு செல்லவும் பிளாஸ்ரிக் தோடுகளை வேண்டிக் கொடுத்திருந்தார். இன்று தங்கத்தை பார்க்கிலும் வேறு மூலங்களினால் தயாரிக்கப்பட்டவைகளுக்கே மவுசு. ஏனென்றால் அவைதான் அன்றைய பெஷன்.

எப்படியோ தகப்பனுக்கு தெரியாமல் அத்ததங்க தோடுகளை விற்று ரூ10000 பெறுமதியான கையடக்க அலைபேசி யொன்றை சினேகிதிகளின் அறிவுரையின் பேரில் வேண்டிக் கொண்டாள் சுகந்தி. நகைக் கடைக்காரனோ சுகந்தியின் அவசரத் தேவையை அன்று தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள தவறவில்லை.

மேலும் அங்குள்ள அயலவர்கள் கூட சுகந்தி அடிக்கடி அந்த கையடக்க அலைபேசியை உபயோகித்து வருவதை அவதானித்து வந்தனர் அவளின் தாயார் சவுதியிலிருந்து அனுப்பி இருக்கலாம் என யூகித்தாலும் அது தொடர்பில் அவளின் தகப்பனாரிடம் விசாரிக்க தவறவில்லை.

அவள் தன்னை ஏமாற்றிவிட்டாள் என அவர் மிகவும் மனமுடைந்தார். தாயார் அவ்விதமொன்றை அனுப்பியிருந்தால் நிச்சயம் அவருக்கு தெரியப்படுத்தி இருந்திருப்பாள். சுகந்தி முழப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைத்து வருகிறாள் என்பதை மிக தெளிவுபடுத்திக் கொண்டார் தகப்பனார்.

சுகந்தியின் நல்ல எதிர்காலத்திற்காக தானும் தன் மனைவியும், அவளின் மாமனாரும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவளின் திருட்டுத்தனமான அச்செயல் அவரை நோய்வாய்ப் படுத்தியது. சுகந்தி தான் புதிதாக ஒரு அலைபேசியை வேண்டியமை சம்பந்தமாகவோ, அதற்கு தான் எப்படி பணம் பெற்றமை சம்பந்தமாகவோ எதையும் தகப்பனாரிடம் வெளிப்படுத்தவே இல்லை. இருப்பினும் எப்படியோ அவர் அறிந்து கொண்டாலும் அவரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

மேலும் தன் மகளின் அச்செயல் தொடர்பாக தன் மனைவியிடமும் எதுவும் கூறவில்லை. அவர் தன் மகளுடன் பெரிதாக கதைத்துக் கொள்வதில்லை, என்பதிலிருந்தே சுகந்தி தனது திருட்டை தகப்பனார் அறிந்து கொண்டார் என்பதை புரிந்து கொண்டாள்

அவளின் குற்ற உணர்ச்சி அவளை நிதமும் வாட்டியது. அவளால் நாளாந்த தனது கடமைகளில் மாத்திரமல்ல படிப்பிலும் கவனம் செலுத்த முடியவில்லை. இருப்பினும் தன் தாயாருக்கு இவ்விடயம் தெரியாமலிருப்பது சற்று ஆறதலைத் தந்தது. அவளின் மாமனார் கூட முகம் கொடுத்து கதைக்க முன்வரவில்லை. ஆசையாக வாங்கிய ஒரு பொருளை மனச்சந்தோசத்துடன் பாவிக்க முடியாத ஒரு நிலைமை அவளை நாளுக்கு நாள் வாட்டியது.

சுகந்தியின் வீட்டுக்கு முன்னாலுள்ள தொடரூந்து வீதியால் அடிக்கடி பல தொடரூந்துகள் பயணிப்பது வழமை. ஒருநாள் நடுநிசி நேரத்தில் தபால் தொடரூந்து ஒன்று திடீரென அவ்விடத்தில் நின்றுவிட்டது ஏன் அ்விதம் நின்றது என தெரியாமல் பலர் பலவாறு பேசிக்கொண்டனர்.

காட்டு யானைகள் அங்கு குறுக்கறுக்கின்றன என்று அங்கு கூடிய ஊரார் பேசிக்கொண்டனர். இல்ல.... இல்ல... யாரோ ஒரு பெண் கோச்சிக்கு முன்னால் பாய்ந்திட்டா இப்படியே அங்கு வதந்திகள் பரவினாலும் உண்மை யாருக்கும் பிடிபடவில்லை.

சுகந்தியின் தகப்பனார் நடுநிசியில் ஊரெ திரண்எருந்ததைக் கண்டு அவரும் வீட்டுக்கு வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து மாமனாரும் வந்தார். இருவரும் சற்று பின்னால் திரும்பி சுகந்தியின் கட்டிலைப் பார்த்தனர். அங்கு அவளிருக்கவில்லை.

ஐயொ எனது பிள்ளை என கதறிக் கொண்டு அங்கு சென்றனர். அங்கே ஒரு பெண் தூக்கி வீசப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். சனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவ்விருவரும் அந்த சடலத்தை மிக அண்மையில் கதறி அழுதபடி பார்த்த பொழுதுதான், இருவருக்கும் மூச்சே வந்தது. இறந்தது ஓர் பிச்சைக்காரி.

குசினிக்குள் இருந்து வெளியே வந்த சுகந்தி, அப்பா, மாமா என அழைத்தாள். அனைவரதும் பதட்டங்கள் நீங்கி மீண்டும் அவர்களிடையே சந்தோசம் உருவாகியது

**– பாலையூற்றான் –**




## நேரடியாக சொர்க்கம் தான்



மரணம் அடைந்த ஒருவரின் உடலை எரித்தவுடன் அதன் சாம்பலை புனித நதிகளிலோ அல்லது கடலிலோ கலத்தல் இறந்து போன ஆத்மா சாந்தியடையும் என்றொரு நம்பிக்கையிலாகும். ஆனால் முதல்முதலாக இறந்துபோனவரின் சாம்பலை விண்ணில் பரவ ஒரு நிறுவனம் முன்வந்துள்ளது. ராட்சத பலூன் மூலம் விண்ணில் ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு சென்றவுடன் அதில் வைக்கப்பட்டுள்ள சாம்பல் விண்ணில் பரவும்படி இந்த நிறுவனம் செய்கிறது. இதற்கென ஒரு குறிப்பிட்ட தொகை வசூல் செய்கிறது. இறந்துபோன உறவினர் இதனால் நேராக சொர்க்கத்திற்கு சென்றுவிடுவார் என்பது ஒரு நம்பிக்கை.

## கணவனுக்காக 1 வயது மகள் விற்பனை

சீனாவில் ஒரு தம்பதியினருக்கு மூன்று மகள்கள் உள்ளனர். கட்டிட தொழிலாளியான ஜுவோ கடந்த 11ம் திகதி தான் பணியில் ஈடுபட்டிருக்கும் வேளையில், எதிர்பாராதவிதமாக கட்டிடத்திலிருந்து கால் தவறி கீழே விழுந்துள்ளார். இதனையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு முதுகில் உடனடியாக செய்யவேண்டிய அறுவை சிகிச்சைக்கு தேவையான பணம் நீகுவாங்கிடம் இல்லாததால், கணவரின் மருத்துவச் செலவிற்காக தனது ஒரு வயது மகளை விற்க முடிவு செய்துள்ளார்.



## முதல் 200வருக்கு இலவசம்

சீனாவில் உள்ள பிரபல ஜவுளி நிறுவனம் தங்கள் கடைக்கு ஜவுளி எடுக்க வரும் முதல் 200 வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்த உடையை இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரே ஒரு கண்டிஷன். அவ்வாறு வரும் வாடிக்கையாளர்கள் உள்ளாடை மட்டுமே அணிந்து வரவேண்டும். மேலும் ஒரு கண்டிஷனாக 25வயதுக்கு உட்பட்டவருக்கு மட்டுமே இந்த சலுகை. இந்த சலுகையை கேள்விப்பட்டதும் வாலிபர்களும் இளம்பெண்களும் உள்ளாடைகளை மட்டும் அணிந்து கொண்டு இந்த ஜவுளி நிறுவனத்திற்கு கூட்டம் கூட்டமாக வரத்தொடங்கினர்.

## நல்ல தண்டனை

சீனாவில் உள்ள இளம்பெண் ஒருவர் தனது கணவரும், தங்கையும் காரில் நிர்வாணமாக இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து இருவரையும் நிர்வாணமாகவே நடுரோட்டில் காரில் இருந்து இறக்கிவிட்டுவிட்டு காரை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். இதனால் இருவரும் நிர்வாணமாக நடுரோட்டில் செய்வதறியாது திகைத்து நின்றதால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## காப்பாற்றப்பட்ட சிறுமி

சீனாவில் Little Wei Yaoyao என்ற 4 வயது சிறுமி வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த போது அருகில் இருந்த சுவரின் மீது ஏறியபோது இரண்டு சுவர்களுக்கு இடையேயுள்ள 7.8இன்ச் இடைவெளியில் திடீரென எதிர்பாராமல் விழுந்துவிட்டது.

பின்னர் விரைந்து வந்த மீட்புப்படையினர் உடனடியாக பக்கத்து வீட்டுக்காரரின் அனுமதியை பெற்று குழந்தை சிக்கியிருக்கும் இடத்திற்கு நேராக சுவற்றில் துளை போட்டு குழந்தையை எவ்வித ஆபத்துமின்றி மீட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணிப் பொதுவேட்பாளர் மைத்திரிபாலவால் அறநெறிச் சமூகத்தை கட்டியெழுப்ப முடியுமா?



ஏறத்தாழ 36 வரையான அரசியற் கட்சிகள் மற்றும் குழுக்கள் திங்களன்று சிறிலங்காவின் எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர். சிறிசேன நாட்டில் நிலவும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஜனநாயக உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையை வாக்களர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டே தற்போது கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

"ஜனநாயகம் மற்றும் மக்களுடன் நட்பைப் பாராட்டும் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான மக்களின் பொதுவான நிகழ்ச்சி நிரல்" என்பதை அடிப்படையாகக் கொண்ட எதிரணியானது, அனைத்துலக நாணய நிதியத்தால் இனங்காணப்பட்ட அதிபர் மகிந்த ராஜபக்சவின் இரக்கமற்ற கடும்போக்கான பொருளாதார அளவீடுகளைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தும். அதேவேளையில், சிறிலங்காவின் எதிரணியானது அமெரிக்காவுடனும் சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் ஆசியாவுக்கான செயற்பாடுகளுடனும் இணைந்து பணியாற்றும்.

வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசிக் கட்சி மற்றும் 2010ல் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் ராஜபக்சவுக்கு எதிராகப் போட்டியிட்ட எதிரணியின் பொதுவேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி உட்பட பல கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணி உறுப்பினரும் முன்னாள் அதிபருமான சந்திரிகா குமாரதுங்க எதிரணியை ஒன்றுபடுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்ததுடன் மைத்திரிபால சிறிசேனவுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்.

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் சந்திரிகா குமாரதுங்கவால் முன்னெடுக்கப்பட்ட அரசியற் சதித்திட்டத்தின் விளைவாக அதுவரை காலமும் சிறிலங்கா அரசாங்கத்தின் சுகாதார அமைச்சராகச் செயற்பட்ட சிறிசேன நவம்பர் 21 அன்று சில அமைச்சர்களுடனும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அரசாங்கத்தை விட்டு வெளியேறி ராஜபக்சவுக்கு எதிராக அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.

ராஜபக்சவின் சீனாவுடனான நெருக்கமான உறவை எதிர்த்து நிற்கும் அமெரிக்காவுக்கு சிறிலங்காவின் அரசியலில் இவ்வாறான ஒரு மாற்றம் இடம்பெறவுள்ளது என்பது நன்கு தெரியும். இந்நிலையில் சிறிலங்காவைப் புதியதோர் அதிபர் ஆட்சிசெய்ய வேண்டும் என்பதை அமெரிக்காவும் விரும்புவதால் இந்த அரசியற் சதித்திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

சிறிலங்காவில் வாழும் தொழிலாளர்கள் மற்றும் ஏழை மக்கள் மத்தியில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்டுள்ள கோபத்தைப் பயன்படுத்தி, 'நாட்டில் சீர்குலைந்துள்ள சட்ட ஆட்சி', 'ஜனநாயக உரிமை மீறல்கள்', 'முன்னெப்போதும் இல்லாதவாறு தற்போது விரிவடைந்துள்ள சமூக ஏற்றத்தாழ்வுகள்', 'பல்வேறு இன மற்றும் மத சமூகங்களுக்கிடையில் நிலவும் பேதங்கள் மற்றும் நாட்டில் அதிகரித்துள்ள அமைதியின்மை மற்றும் அவநம்பிக்கை' போன்ற பல்வேறு விடயங்களை முடிவுக்குக் கொண்டுவருவதே தமது நோக்கமாகும் என எதிரணி தனது புரிந்துணர்வு உடன்படிக்கையின் போது பிரகடனப்படுத்தியுள்ளது.

பரந்தளவு அதிகாரங்களை வழங்கும் நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழிப்பதுடன், அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தையும் ராஜபக்ச மூன்றாவது தடவையாகவும் அதிபராகப் பதவியேற்பதற்கு அனுமதிக்கும் 18வது திருத்தச் சட்டம் ஒழிக்கப்படும் என எதிரணி வாக்குறுதி வழங்கியுள்ளது. இதற்கு முன்னர் சிறிலங்காவை ஆட்சி செய்யும் அதிபர் இரண்டு தடவைகள் மட்டுமே அதிபராகப் பதவி வகிக்கலாம் என வரையறுக்கப்பட்டிருந்தது.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் மேலும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக பொது மற்றும் தனியார் துறைப் பணியாளர்களின் கொடுப்பனவுகளை அதிகரித்தல், அனைத்துப் பொருளாதாரத் துறைகளையும் பலப்படுத்துதல், ஓரங்கட்டப்பட்ட மற்றும் ஏழை மக்களுக்கான குறிப்பாக பெண்கள், சிறார்கள், வயது முதிர்ந்தோர், ஓய்வுபெற்றோர், மாற்றுவலுவுள்ளோர் போன்றவர்களுக்கான விளைத்திறனான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்கி அதன் மூலம் நலன்புரி நாடொன்றை மீளக்கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு வாக்குறுதிகள் சிறிலங்காவின் எதிரணியால் கூட்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கமானது நாகரீகமான அறநெறி சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதுடன், குறிப்பாக எப்போதுமில்லாதவாறு கடன் சுமையால் தத்தளிக்கும் இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எதிரணியின் கூட்டுப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் போலியானவை. சந்திரிகா குமாரதுங்க மற்றும் ராஜபக்ச அரசாங்கங்களின் கீழ் கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக சிறிசேன அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். இவர் இந்த அரசாங்கங்களால் தொழிலாளர்களின் சமூக உரிமைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட தாக்குதல்களுக்கும் குற்றங்களுக்கும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வக்கிரமான இனவாதப் போருக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் இதேபோன்று தொழிலாளர் சமூகத்திற்கு எதிராக பல்வேறு மீறல்களைப் புரிந்துள்ளது. ஐ.தே.க 1970களின் பிற்பகுதியில் சந்தை-சார்புக் கட்டமைப்பு நிகழ்ச்சி நிரலை அறிமுகப்படுத்தியதுடன், தமிழர் இனவாதத்திற்கு எதிராகவும் தொழிலாளர் வர்க்கத்தைப் பிரிப்பதற்குமான உள்நாட்டுப் போரை ஆரம்பித்தது. ராஜபக்ச அரசாங்கத்தை விட தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக மற்றும் சமூக உரிமைகள் மீது எதிரணியே மிகவும் மோசமான ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மேற்கொள்ளும்.

'நலன்புரி அரசை மீளவும் கட்டியெழுப்புவேன்' என சிறிசேன வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் இவர் தனது பொருளாதாரக் கோட்பாடுகள் தொடர்பாக எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை. 'நாங்கள் அரசாங்கத்தை அமைக்கும் போது திறந்த பொருளாதாரக் கோட்பாட்டைப் பின்பற்றுவோம்' என நவம்பர் 29 அன்று ஐ.தே.க தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் சிறிசேன உறுதியளித்தார்.

சிறிசேனவின் இந்த அறிவிப்பானது இவர் அதிபராகப் பதவியேற்றால் தொடர்ந்தும் பாரிய வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கும் அதேவேளையில் சிறிலங்கா வாழ் தொழிலாளர் வர்க்கம் மற்றும் ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேலும் மோசமாகும் என்பதற்கான உத்தரவாதமாகவே இது நோக்கப்படுகிறது. நாட்டின் நலிவடைந்த பொருளாதாரத்தை அனைத்துலகப் பொருளாதாரம் மேலும் நலிவடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை சிறிலங்காவின் ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இவ்வாறான நிகழ்ச்சி நிரல் பின்பற்றப்படுகிறது.

ராஜபக்ச அரசாங்கத்திற்கும் எதிரணிக்கும் இடையில் உடன்பாடு எட்டப்படாத ஒன்றாக வெளியுறவுக் கோட்பாடு காணப்படுகின்ற போதிலும் இது தொடர்பாக சிறிலங்காவின் எதிரணியால் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

2006ல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ராஜபக்சவால் பாரியளவில் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்திற்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்கினாலும் கூட, போரின் போது சிறிலங்கா அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு பொறுப்பளிக்க வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்தும் சிறிலங்கா மீது அழுத்தம் கொடுத்து வருகிறது. இதன்மூலம் சிறிலங்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்த அமெரிக்கா விரும்புகிறது.

சீனாவுடன் சிறிலங்கா நெருங்கிய நட்பைப் பேணுவதானது பொருளாதார நிலை ஏற்படவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடு-களுக்கு சிறிலங்கா தனது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தடை விதிக்கப்படலாம் என எதிரணிக்குத் தாவிய ஆளங்கட்சி உறுப்பினர்கள் அச்சப்படுகின்றனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் சிறிலங்காவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் அமெரிக்காவின் ஆதரவுடன் சிறிலங்காவுக்கு எதிராக இவ்வாண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போன்றன தொடர்பாக சிறிசேனவிடம் பத்திரிகையாளர்கள் வினவியபோது, கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் தனது அரசாங்கம் நிறைவேற்றும் என சிறிசேன வாக்குறுதி அளித்துள்ளார். சிறிலங்கா இராணுவத்தின் போர்க் குற்றங்களை மூடிமறைக்கவும், அனைத்துலக விமர்சனங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே ராஜபக்ச கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கினார்.

தான் இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவேன் எனக் கூறியதன் மூலம், நாட்டிலுள்ள தமிழ்த் தலைவர்களுக்கான கோரிக்கை போன்றவற்றுடன் கூடிய அமெரிக்காவை நோக்கிய வெளியுறவுக் கோட்பாட்டையே சிறிசேன உருவாக்க விரும்புகிறார் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளுடன் அரசியல் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கான 'அரசியற் தீர்வு' எட்டப்பட வேண்டும் என கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளையில், அண்மையில் ராஜபக்சவின் கூட்டணியிலிருந்து விலகிக் கொண்ட, சிங்கள-பௌத்த தீவிரவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் சிறிசேன பிறிதொரு புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளார். சிறிலங்காவின் அரசியல் யாப்பில் பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும், சுயாட்சி அரசாங்க முறைமையை எதிர்ப்பதாகவும் சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். அதாவது தமிழ்த் தலைவர்களுடன் எவ்வித விட்டுக்கொடுப்புக்களையும் வழங்குவதில் சிறிசேன ஆர்வங்கொள்ளவில்லை என்பதையே இது சுட்டிநிற்கிறது. ஜாதிக ஹெல போன்ற தீவிரவாத சிங்கள-பௌத்த கட்சியுடன் கூட்டுச்சேர்வதன் மூலம், பல்வேறு இன மற்றும் மதங்களுக்கிடையில் சிறிலங்காவில் தற்போது தீவிரமாகியுள்ள வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கம் சிறிசேனவுக்கு இல்லை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு 'அனைத்துக் கட்சி அரசாங்கம்' ஆட்சி செய்யும் என எதிரணியின் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ராஜபக்சவின் கூட்டணியிலுள்ள கட்சிகளும் அனைத்துக் கட்சி என்பதற்குள் உள்ளடங்கும். அனைத்துக் கட்சி ஆட்சி என்பது சிறிலங்காவின் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என்பதையே சுட்டிநிற்கிறது. தொழிலாளர் வர்க்கம் மற்றும் இளையோர் மீதான புதிய கடும்போக்கான பொருளாதார சுமையானது நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சமூகக் குழப்பங்கள் ஏற்பட வழிவகுக்கும் என்கின்ற அச்சம் ஆளும் தரப்பிற்குள் நிலவுகிறது. 'தேசிய ஒற்றுமைக்கான அரசாங்கம்' என்பது தொழிலாளர் வர்க்கத்திலிருந்து எழும் எந்தவொரு எதிர்ப்புக்களையும் அடக்குவதற்கேற்ப கொழும்பு அரசியல் முறைமையை மாற்றியமைத்தல் எனப் பொருள்படும்.

**-கே.ரத்னாயக்க -**

தமிழில் நித்தியபாரதி – புதினப்பலகை. நெற்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு கூட்டல் விருத்தியின் n ஆம் உறுப்பு $7n - 2$ எனின், பொது வித்தியாசத்தையும், n+1 ஆம் உறுப்பையும் காண்க.

02. சாய்சதுரம் ஒன்றின் மூலைவிட்ட நீளங்கள் 8cm, 6cm ஆகும். அதன் சுற்றளவைக் காண்க.

03. தீர்க்க. $2x = 5 - 3x$

04. பொது மடங்குகளில் சிறியதைக் காண்க. 8x, 12xy, 3y

05. 3 இற்கும் 19 இற்கும் இடையே மூன்று கூட்டல் இடைகளைக் காண்க.

06. தொடைகள் A, B என்பவற்றில் $n(A) = 12$, $n(B) = 9$, $n(AUB) = 15$ எனின், $n(AnB)$ ஐக் காண்க.

07. குறித்த ஒரு தொகைப் பணமானது லலித், கமல் என்போரிடையே 2 : 3 என்றவாறும் லலித், பண்டார என்போரிடையே 1 : 2 என்றவாறும் பங்கிடப்பட்ட போது கமல் ரூபா 1200 ஐப் பெற்றுக் கொண்டான்.

அ. லலித், கமல், பண்டார என்போரிடையே தொகையாது பங்கிடப்பட்ட சேர்த்தி விகிதத்தைக் காண்க.

ஆ. பங்கிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு ?

08. $y = 2x - 1$ என்னும் நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0,3) எனும் புள்ளியினூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது ?

09. 1, 2, 2, 3, 4, 4 என இலக்கங்கள் இடப்பட்ட ஒழுங்கான சதுரமுகித் தாயக்கட்டை ஒன்றும் 1, 2, 3, 4 என இலக்கங்கள் இடப்பட்ட ஒழுங்கான நான்முகித் தாயக்கட்டை ஒன்றும் ஒருமித்து உருட்டப்படுகின்றன.

அ. இதற்கான மாதிரி வெளியை தெக்காட்டின் தளம் ஒன்றின் மூலம் காட்டுக.

ஆ. பின்வருவனவற்றின் நிகழ்தகவுகளைக் கணிக்க.

1. இரண்டிலும் இரட்டை எண் கிடைத்தல்
2. இரண்டிலும் ஒரே இலக்கம் கிடைத்தல்
3. இலக்கங்களின் கூட்டுத்தொகை 5 இலும் அதிகமாக இருத்தல்.

10. $x^2 - 6x$ என்பதை நிறைவர்க்கமாக்குவதற்கு கூட்ட வேண்டிய உறுப்பை எழுதுக.

11. ஒரே அடியிலான இரு எண்களும் அவற்றின் கூட்டுத்தொகையும் இங்கு காட்டப்பட்டுள்ளன இவ்வெண்களின் அடி யாது? $12_x + 12_x = 30_x$

12. வியாபாரி ஒருவர் 500 முட்டைகளை வாங்கினார். அதில் பழுதடைந்த முட்டைகளினதும் உடைந்த முட்டைகளினதும் நிகழ்தகவுகள் முறையே 0.02, 0.05 உம் ஆகும்.

அ. எத்தனை முட்டைகள் பழுதடைந்தவையாக உள்ளன?

ஆ. எத்தனை முட்டைகள் நல்லவையாக உள்ளன?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. $0.5moldm^{-3}$ செறிவுடைய NaOH இன் 600ml கரைசலின் செறிவை $0.03moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?

1. 200ml 2. 300ml 3. 400ml 4. 600ml

02. இலங்கையை உலுக்கிய டெங்கு நோக்காவியான நுளம்பு மனிதனுக்கு எந்த நேரம் அதிகளவில் பாதிக்கின்றது?

1. காலை 4.30 முதல் 10.30 வரையும், மாலை 4.00 முதல் 7.00 மணி வரையும்
2. காலை 6.30 முதல் 10.00 வரையும், மாலை 3.30 முதல் 6.30 மணி வரையும்
3. காலை 5.30 முதல் 9.30 வரையும், மாலை 4.00 முதல் 8.00 மணி வரையும்
4. காலை 7.30 முதல் 9.30 வரையும், மாலை 5.00 முதல் 8.00 மணி வரையும்

03. நைதரசன் வாயுவின் உபயோகம் அல்லாதது எது?

1. ஐதரசீன் தயாரிப்பில் பயன்படுகிறது.
2. வானூர்திகளின் டயரை நிரப்ப பயன்படுகிறது
3. எண்ணெய் சேமிப்பு தாங்கிகளில் ஒட்சிசனை அகற்றப் பயன்படுகிறது
4. பொலிவைனல் குளோரைட்டு தயாரிப்பில் பயன்படுகிறது.

04. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?

1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்.
2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்.
3. மின்பகுப்பிற்கு மிகச் சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்.
4. மின்முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்.

05. தேசிய சுண்ணாம்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக் கல்லில் அடங்கும் பொருள் எது?

1. கல்சியம் ஒட்சைட்டு 2. கல்சியம் காபனேற்று
3. கல்சியம் பொசுபேற்று 4. கல்சியம் சல்பேற்று

06. ஓடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?

1. அன்னாசி 2. சதைக்கரைச்சான் 3. வல்லாரை 4. வெங்காயம்

07. யூரியா $[CO(NH_2)_2]$ இலுள்ள காபனின் சதவீதத்தை சரியாகக் குறிப்பது எது? $(C = 12, O = 16, N = 14, H = 1)$

1. 26.6% 2. 20% 3. 30% 4. 23.3%

08. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?

1. கம்பமேலணி 2. கனமேலணி
3. படைகொண்ட மேலணி 4. பிசிர் மேலணி

09. துலக்கப்பட்ட சீமெந்துத் தரையில் உள்ள ஓர் அலுமாரியை 500N கிடை விசையினால் மட்டுமட்டாகத் தள்ள முடியும். அலுமாரி கரடுமுரடான ஒரு தரையில் வைக்கப்பட்டு அதனைத் தள்ளுவதற்கு 500N கிடை விசை பிரயோகிக்கப்பட்டால் அதன் மீது தாக்கும் உராய்வு விசையானது

1. 500N க்குக் கூடியது 2. 500N க்குச் சமனானதாகும்
3. 500N க்குக் குறைவானதாகும்
4. தரவுக்கமைய தீர்மானிக்கமுடியாது

## பாடம் : வரலாறு

01. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த இடமான சித்தலபப்பத காணப்பட்ட பிரதேசம்

1. ருகுணு பிரதேசம்
2. இரஜரட்டை பிரதேசம்
3. தம்மன்னா பிரதேசம்
4. நாகதீப பிரதேசம்

02. அசோக பேரரசினை ஏற்படுத்தி அசோக சக்கரவர்த்தி இந்திய சமூகத்தவர்களுக்கு அசோக பேரரசின் சிறப்பினை எடுத்துக்காட்டிட மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய சமர் செய்த இடம்?

1. மகதம் 2. அவந்தி 3. கலிங்க
4. காஷ்மீர்

03. கோட்டை இராசதானி மன்னன் 6ம் பராக்கிரமபாகு மன்னனின் வளர்ப்பு மகனான சப்மல்குமாரனை அழைத்தது?

1. கனககூரிய 2. குமார இளவரச
3. செம்பகப்பெருமாள்
4. வெண்டு அறிட்டகி பெருமாள்

04. வானொலி, தொலைபேசி, மின்குமிழ் ஆகிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட விஞ்ஞானிகளை முறையே காட்டும் விடைத்தொகுதி

1. மார்க்கோணி, கிரகம்பெல், ஹம்பிறிடேவி
2. அலெக்ஸாண்டர் கிரகம்பெல், மார்க்கோணி, தோமஸ் அல்வா எடிசன்
3. மார்க்கோணி, கிரகம்பெல், தோமஸ் அல்வா எடிசன்
4. ஹம்பிறிடேவி, மார்க்கோணி, அலெக்ஸாண்டர் கிரகம்பெல்

05. இங்கிலாந்தில் தோன்றிய கைத்தொழில் புரட்சி ஐரோப்பியாவில் மட்டுமின்றி உலகில் பல நாடுகளுக்கு பரவி கைத்தொழில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது

1. இங்கிலாந்தில் கைத் தொழில் புரட்சி ஏற்படுத்திய மூன்று துறைகளும் எவை?

2. பின்வரும் கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புக்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.
(தொலைக்காட்சி, தொலைநோக்கி, தார்வீதி அமைக்கும் முறை, தொலைபன்னி, வானொலி, பாதுகாப்பு விளக்கு, தந்திச்சேவை. புகைபோக்கிக்கப்பல்)

1. ஜோன் லொகி பெயார்ட்
2. ஜோன் மெக்கடம்
3. கிரஹம் பெல்
4. மார்க்கோணி

3. இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்படுத்துவதில் பங்களித்த காரணிகள் இரண்டை தருக?

4. கைத்தொழிற் புரட்சியில் ஏற்பட்ட நன்மை, தீமைகள் மூன்றை காரணிகள் ஊடாக விளக்குக.

06. கலிங்க மாகனின் படையெடுப்பின் பின் இராசதனி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார,சமூக நடவடிக்கையும் மாற்றம் அடைந்தன

(i) 1. இந்தியாவின் அதிவீர ராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்
2. பாண்டி மன்னனுடன் நட்புக் கொண்டு தந்த தாதுவை மீட்டு வந்த மன்னன்

மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.

ஆசிரியர் அகிலன்

## Grammar

Ex 01 :-

**Put the verb into the most suitable form. present perfect or past simple.**

1. A : Look! Somebody .................... (spill) coffee on the carpet.
   B : Well, it ............................ (not/ be) me. I ............... (not/ do) it.

2. A : Ben ............................ (break) his leg.
   B : Really? How ......................... (that/ happen)?
   A: He .......................... (fall) off a ladder.

3. A : Your hair looks nice. .................... (you/ have) a haircut?
   B : Yes.
   A : Who ...................... (cut) it? ........................ (you/ go) to the hairdresser?
   B : No, a friend of mine ...................... (do) it for me.

Ex 02 :-

**Write sentences about yourself using the ideas in brackets**

1. (Something you haven't done today) ..................
2. (Something you didn't do yesterday) ..................
3. (Something you did yesterday evening) ..................
4. (Something you haven't done recently) ..................
5. (Something you've done a lot recently) ..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப்பணி கௌரவிப்பு



திருகோணமலை மாவட்டத்தில் ஆன்மீக சிந்தனையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வரும் கொட்டியாபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் அ.குகராஜா அவர்களின் சமயப்பணியை கௌரவித்து வெருகலம்பதி சித்திரவேலாயுத ஆலயத்தில் பரிபாலன சபையினரால் கடந்த வெள்ளக்கிழமை ஆலய முன்றலில் "வெருகலம்பதி இசைப்புலவர்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆலயத்தின் முதன்மை கங்கானம் சி. ஜெயபாலன் அவர்களால் குகராஜா கௌரவிக்கப் படுவதையும், ஆலயத்தின் பரிபாலசபையினர் கலந்து கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

மூதூர் நிரூபர்



# புலமைப்பரிசிலில் சித்தியடைந்தோருக்கு செலான் வங்கி கௌரவிப்பு

- அருணன் -





இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 பலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி தகைமை பெற்றமாணவர்களை பாராட்டும் நிகழ்வு செலான் வங்கி திருகோணமலை கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த வாரம் 13.12.2014 சனிக்கிழமை மத்திய வீதியில் உள்ள கிளை அலுவலகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. கிளை முகாமையாளர் திரு. எதிரக் தேவகுமார் கிருபைராஜா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.



ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி 36 மாணவர்களுக்கும், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியை சேர்ந்த ஒரு மாணவனுக்கும் புனித மரியாள் கல்லூரியை சேர்ந்த 3 மாணவிகளுக்கும், நாலந்த மகா வித்தியாலயம் 1 மாணவனுக்கும் இதன்போது பாராட்டு கிடைக்கப்பெற்றார்கள். மாணவர்கள் ஒவ்வொருவருக்கும சான்றிதழ்கள். உண்டியல், பேனை, தொப்பி என்பன வழங்கப்பட்டன.

மாவட்ட மட்டத்தில் முதல் இடம் பெற்ற ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி.யுவைசிகா உதயராஜனுக்கு துவிச்சக்கர வண்டி ஒன்று பரிசாக வழங்கி வைக்கப்பட்டது. இதற்கான அடையாளமாக திறவுகோல் வழங்கி வைக்கப்பட்டது.

# "அரசவிழா"



30ஆவது கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது இதன் போது திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கில் மூத்த எழுத்தாளரும், சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குருவுமான சிவஸ்ரீ அ. அரசரெத்தினம் மற்றும் நாடறிந்த நாட்டுக்கூத்து கலைஞரும் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபருமான த.சிதம்பரப்பிள்ளை ஆகிய இருவரும் கலாபூஷண விருது பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கலை நிகழ்ச்சி அஸிம் பாலர் பாடசாலை



திருகோணமலை ரொட்டவெவ அஸ்மி பாலர் பாடசாலையின் கலைவிழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் ரொட்டவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

அனுராதபுர மாவட்ட எல்லைக்கிராமமான ரொட்டவெவ கிராமத்தில் முன் பள்ளி பாலர் பாடசாலை அமைக்கப்பட்டும் அதனை ஆரம்பித்து வைக்க முடியாத நிலையில் என்னிடம் கல்வி பயின்ற மாணவனான அப்துல்சலாம் முகம்மது யாசீம் வீடு வீடாகச் சென்று மாணவர்களை ஒன்றிணைத்து அப்பாடசாலையை ஆரம்பித்து வைத்து தற்போது சிறந்த முறையில் நடாத்தப்பட்டு வருவது தமக்கு மன சந்தோசத்தை ஏற்படுத்துவதாக முன்னாள் அதிபர் ஒ.ஏ.ரஹீம் தனது உரையில் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் மொறவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி தம்மிக விஜயசிங்க சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளான அணில் சுவர்ணவீர கே.ஜி.முத்துபண்டா ரொட்டவெவ மஸ்ஜிதுல் ஹுதா ஜும்மா பள்ளி வாசல் பேஷ் இமாம் நசார்தீன் மற்றும் ஹொரவ்பொத்தான முஸ்லிம் மஹா வித்தியாலயத்தின் அதிபர் இசாக் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிராம மக்களும் கலந்து சிறப்பித்தனர்







செய்தி : அ.யசீம்

# ஆசிரியர்களின் திடீர் இடமாற்றமும் குழந்தைச் செல்வங்களின் உளப்பாதிப்பும்

## மக்கள் முரசு

இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பதுறை மிகவும் அதிவேகமாக வளர்ந்து வரும் காலமாக மாறிவருவதை நாம் காண்கின்றோம். எமது வருங்கால சந்ததிகளின் வளர்ப்பில் நாம் அனைவருமே மிகவும் கண்டிப்பான கவனிப்புடன் செயற்பட வேண்டிய காலகட்டம் இது. இம்மாணவர்களின் ஆரம்ப கல்வி தொடக்கம் 5ம் ஆண்டு வரையில் பெற்றோர், வெளிகல்வி நிலையங்களிலும், சமூக பொது நிகழ்வுகளிலும் சிறுவர் பாடசாலைகளிலும் பாடசாலையிலும் இவர்களுக்கான மனித இயல்வலு மேம்பாட்டிற்கான அடிக்கற்களை நாட்டுவதற்கான இடத்தெரிவுகளாக கருதுகின்றனர் எனலாம். எமது நாடு முழுமையான சமூக சமய விழுமியங்களால் பின்னிப்பிணைந்துள்ளமை கண்கூடு.

சில வேளைகளில் வீட்டில் நாம் சிறார்களை கூர்ந்து கவனித்தால் அவர்களது கேள்விகள் மிகவும் ஆச்சரியம் மிக்கதாகவே காணப்படுகின்றது. எனது மகள் தனது பாடசாலை பற்றி கூறுகையில் அப்பா! இப்ப புதிதாக வந்திருந்த ஆசிரியரை பிடிக்கவில்லை அல்லது பிடித்திருக்கிறது என கூறுவதை கேட்டிருக்கின்றேன். குழந்தை உள்ளம் கொண்டவர்களே குழந்தைகளுக்கு தேவைப் படுகிறார்கள்.

மாணவச் செல்வங்கள் கருவறையில் இருக்கும் போதே உணர்வுகளுக்கு இசைவாக்கம் அடைகின்றனர். பிறப்பிற்கு பின் தாயின் தொப்புள் கொடி துண்டிக்கப்பட்டாலும், பிள்ளை அருகே நான் இல்லை என்பதை தாய் உணருமுன், தன்னருகே தாய் இல்லை என்பதை அழுகையால் உணர்த்துகின்றது.

ஆகவே இச் செல்வங்களை தொப்பிள்கொடி உறவு தொட்டு சிறுபராய கல்வியினை (புலமைபரிசில்) கடக்கும் வரை அவர்களிடையே பிரிவு ரீதியான உணர்வுகள் அவர்கள் மனதினை பாதித்துவிட காரணமாகாது காக்க வேண்டும். கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு திடீர் இடமாற்றங்கள் ஏற்படாமலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் குறைந்தது மாற்றமாகும் ஆசிரியர் புதிதாக சேரும் ஆசிரியருடன் இணைந்து ஒரு மாத காலமாவது பாடசாலையில் இணைந்திருந்து, சிறார்களின் எதிர்பார்ப்புகள், அவர்களின் தனித் திறமைகள் என்பன பற்றி கலந்துரையாடுதலினால் புதியவர் எனும் புதிய அணுகுமுறை விலகும். இதனால் சிறார்களுக்கும் ஆசியருக்குமிடையில் சிறப்பான தொடர்பாடலால் வளமான அடைவுகளையும், பெறுபேறுகளையும் பெற முடியும் என்பது எனது கருத்தாகும்.


அத்துடன் வீட்டில், கல்வி நிலையங்களில், பாடசாலைகளில் என மூவிடத்திலும் கற்பிக்கப்படும் யுக்திகள் வேறுபடுகின்றமையால் இவற்றை ஒன்றென பகுத்தறிதல் கடினமாகையால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். அதிசிறந்த திறமையுள்ளவர்கள் மிக விரைவாக புரிந்து கொள்கின்றனர். ஆனால் அனைத்து குழந்தைகளாலும் புரிதல் சற்று கடினமாகுவதால் அவர்கள் நினைத்த பெறுபேற்றை அடைதல் சிரமமாகின்றது.

மேலும் சிறுவர்கள் வீட்டில் தாய், தந்தை இருவரதும் சில சிறப்பியல்புகளில் கட்டுண்டவர்களாக காணப்படுவதால் இவ்வாறான புரிதல்களை அதிகம் ஆசிரியர்களிடம் எதிர்பார்ப்பார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்கு [illegible] இடம்பெற்றால் அவர்களின் [illegible] பாதிக்கப்படும். இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் எம் குழந்தைகள் கூறும் சில கதைகள் அவர்கள் வயதுகளில் இருந்து பார்ப்போமேயானால் நாம் சுமக்கும் பாரங்களை விட பன்மடங்கு சுகமான சுமைகளை தாங்கி நிற்கின்றனர். அவர்கள் பெற்றோருடன் இருக்கும் காலத்தைவிட ஆசிரியர்களுடன் இருக்கும் காலமே அதிகம். ஆகவே பெற்றோருக்கு தம் குழந்தைகள் மீது உள்ள அதே கரிசனை அக்கறை ஆசிரியர்களுக்கும் இருத்தல் அவசியமாகின்றது. எதிர்கால சந்ததியினரான இவர்களை வளப்படுத்தி மதிநுட்பமானவர்களாக மாற்ற வேண்டிய பொறுப்பு அனைவருடனும் ஆசிரியர்களுக்கும் உண்டு.

வளரும் பயிர் செல்வங்களுக்கு சிறப்பான மனவளத்துடனான அன்பெனும் பசளையிட்டு, உறுதியான உரமேற்றி அவர்களது சிறந்த சிந்தனைகளை அறிவெனும் சிற்றுளி கொண்டு செதுக்கும் எதிர்கால சிற்பிகளுக்கு கைகொடுத்து மேலும் எம் நாட்டை வளமிக்க நாடாக





- மலைநேயன் -

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 11

01. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும். முதலெழுத்து பூனையில் உண்டு யானையில் இல்லை. இரண்டாம் எழுத்து பட்டத்தில் உள்ளது படத்தில் இல்லை. மூன்றாவது எழுத்து வீட்டில் உண்டு வீதியில் இல்லை.

.......................................................................

02. வானத்தில் அதிகமாகக் காணப்படுவது?
1. சிற்றுயிர்கள் 2. பறவைகள் 3. வெளவால்கள்

பின்வரும் பாடலை வாசித்து 03, 04ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்

தாமரை மலர் பூத்துச் சிரிக்கும்
இலைமேல் நீர் முத்துக்கள் போன்று பளபளக்கும்
காற்றில் நீரலைகள் மோதும்
உள்ளத்தை ஈர்க்கும் குளத்தின் அழகு

03. பாடலில் எதனை முத்துக்கள் எனக் கூறப்பட்டுள்ளது?
1. தாமரைப்பூ 2. நீரலை 3. இலை மேலுள்ள நீர்

04. பாடலிற்கு ஏற்ப இக்குளம் அழகாகத் தோன்றுவதன் காரணம்?
1. தாமரைப்பூ பூத்துள்ளமையும் நீரலைகளின் மோதலும்
2. தாமரைப் பூக்கள் பூத்துள்ளமையும் அழகான மீன்கள் காணப்பட்டமையும்
3. சுத்தமான நீல நிற நீர் இருப்பதும் தாமரைப் பூக்கள் மலர்ந்துள்ளமையும்

05. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் ...................... வது உடம்புக்கு நல்லது
1. உலவு 2. உளவு 3. உழவு

06. ஒருவர் தன்னைப் பற்றி தானே எழுதும் சரிதை
1. சுயசரிதை 2. சுபசரிதை 3. சுயசறிதை

07. உழுந்து, உளுந்து இரண்டையும் கூறக்கூடிய ஒரு பொதுவான சொல்
1. ஒரு நோய் 2. ஒரு தானியம் 3. ஒரு வேலை

08. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
1. குருவிச்சை 2. அரசு 3. இறுங்கு

09. "சீராய்த் தைக்கும் ஊசி" என்பதை உமது மொழிநடையில் எழுதுக
.......................................................................

10. பின்வரும் மரபுத் தொடர் குறிக்கும் கருத்தை எழுதுக
தாளம் போடல் ..................................................

11. நிலமேற்றண்டில் உணவு சேமிக்கும் தாவரம் எது?
1. கரும்பு 2. இஞ்சி 3. முள்ளங்கி 4. மரவள்ளி

12. எத்தாவரத்தின் மொட்டைப் பயன்படுத்தி உணவைச் சுவையூட்டுகிறார்கள்?
1. கறுவா 2. கராம்பு 3. ஏலம் 4. சாதிக்காய்

13. பிற்பகல் 2.16 மணிக்குப் புறப்பட இருந்த பேரூந்து 50 நிமிடங்கள் தாமதித்தே புறப்பட்டது எனின், பேரூந்து புறப்பட்ட நேரம் நியம நேரத்தில்

.......................................................................

14. ஒரு பெட்டியில் 8 புத்தகங்கள் வைக்கலாம் எனில், 842 புத்தகங்களை வைக்கத் தேவையான பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

.......................................................................

15. 2மீற்றர் துணியின் விலை ரூபா 120 எனில், 3மீ 75செமீ துணியின் விலை எவ்வளவு?

.......................................................................

16. வீட்டில் இயற்கையாகவே காணப்படும் பிராணி
1. கோழி 2. பாம்பு 3. பல்லி

17. தியானத்தின் இறுதிப் படிமுறை
1. பிரார்த்தனை 2. மலர்வு 3. மனஉறுதி

18. காலாவதியான பொருட்களை
1. மலிவான விலையில் விற்கலாம்
2. விற்பனையாளர் பயன்படுத்தலாம்
3. உடனடியாக அழிக்க வேண்டும்

19. முகம் பார்க்கும் கண்ணாடி முன் நின்று கொண்ட ஒருவர் தனது உருவத்தை பார்த்து கூறிய பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றை தெரிவு செய்க.
1. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தம்பியின் அப்பாவின் அண்ணா ஆவார்.
2. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தங்கையின் தாயின் மகனார்
3. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது சகோதரனின் தாயின் சகோதரி ஆவார்.

20. எப்பொழுதும் பிரியாது இணைந்திருக்கும் இரு நண்பர்களை விளக்குவதற்குப் பொருத்தமான உவமை எது?
1. பாலும் தேனும் போல 2. ஓடும் புளியம்பழமும் போல
3. நகமும் சதையும் போல

## சிறுவர் முரசு



## கண்டிப்பு குட்டிக்கதை



ஒரு சிறுவன் தன்னுடன் பள்ளியில் ஒன்றாகப் படிக்கும் நண்பர்களில் ஒருவனுடைய பாடப் புத்தகத்தைத் திருடிவிட்டான். அதை வீட்டிற்குக் கொண்டு

வந்து தன் அம்மாவிடம் கொடுத்தான். அவனுடைய திருட்டுச் செயலை தாயும் கண்டிக்கவில்லை.அதற்கு மாறாக மேலும் உற்சாகமூட்டினாள். கண்டிக்கப்படாத சிறுவன் மறுமுறை ஒரு கடிகாரத்தை திருடிக்கொண்டு வந்து தன் அம்மாவிடம்


கொடுத்தபோதும் அவள் தன் மகனைக் கண்டிக்காமல் தொடர்ந்து உற்சாக மூட்டினாள். அதன் பின்பு அச்சிறுவன் பெரிய அளவில் திருடத்தொடங்கினான்.

வீடுகளில் தைரியமாகப் புகுந்து கொள்ளையடிக்கவும் ஆரம்பித்தான். ஒருநாள் அவன் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு அரசனால் தண்டிக்கப்பட்டு கொலைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டான்.

அந்த இடத்தில் கூடியிருந்த பொது மக்களில் அவனுடைய தாயும் இருந்தாள். மகனின் தண்டனையைக் குறித்துத் துயரம் தாங்காமல் அடித்துக் கொண்டு புலம்பினாள். அப்போது மகன் "என் அம்மாவிடம் நான் காதோடு காதாக ஒரு வி'யம் பேச வேண்டும்" என்று காவல்காரர்களிடம் கேட்டுக் கொண்டான். தாயாரும் தன் மகனின் அருகில் நெருங்கினாள்.

அப்போது மகன் "அம்மா அன்றொரு நாள் முதன்முதலாக நான் பள்ளியில் இருந்து பாடப்புத்தகத்தை திருடிக்கொண்டு வந்து உன்னிடம் கொடுத்த போது அப்போதே நீ என்னை அடித்துக் கண்டித்திருந்தால் நான் இவ்வளவு மோசமான நிலைமைக்கு ஆளாயிருக்க மாட்டேன். இம்மாதிரி ஒரு திருடனாக சாகும் நிலையும் ஏற்பட்டிருக்காது" என்று கண்ணீருடன் கூறினான். தாயும் காலம் கடந்து உணர்ந்தாள்.

**- - அன்புடன் கட்டாயம் கண்டிப்பும் இருத்தல் வேண்டும் - -**



செல்வி.ம.மிருக்ஷனா, திருகோணமலை



து.ஹர்சினி திருகோணமலை



எப.லக்ஷாயினி அல்ஸ்தோட்டம்

### சிந்திக்க .. ..

எதை செய்கிறாய்
என்பதை அறிந்து செய்:
செய்வதை விரும்பிச் செய்:
செய்தை நம்பிக்கையொடு செய்:
வெற்றி நிச்சயம் . . .

### நல்ல பிள்ளை!

காலையிலே எழும்புவேன்,
கடள்தனை வணங்குவேன்!
மாலையில் விளையாடுவேன்,
மறந்து போக மாட்டேனே!

தாய் எனக்குக் கோயிலாம்,
தந்தை சொல்லே மந்திரம்!
நோய் பிடித்திடாமலே
நூறு வரையும் வாழுவேன்!

பாடசாலை செல்லுவேன்,
பகலும் இரவும் படிப்பனே!
நாடகமும் நடித்து நான்,
நல்ல பிள்ளை ஆகுவேன்!

அமுதம் போன்ற தமிழுடன்,
ஆங்கிலமும் பயிலுவேன்!
நமது அயல் மொழியையும்,
நான் படித்து மகிழ்வனே!

**தாமரைத்தீவான்**
**(ஈச்சந்தீவு. கிண்ணியா)**

### பொது அறிவு - 01

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

01. அமெரிக்காவில் மிகவும் வறுமையான நாடு எது?
ஹெத்தி நாடு
02. எவை, எப்போது, யாரால், எங்கே செய்யப்படும் என வரையறுக்கும் முகாமைப்பணி யாது?
திட்டமிடல்
03. கம்பனி ஒன்று கலைக்கப்படும் போது முதலில் முக்கியத்துவம் பெறுபவர்கள் யார்?
முன்னுரிமைப் பங்குதாரர்கள்
04. உலகில் வில்வித்தை போட்டியில் மகளிர் தனிநபர் வரிசையில் முதலாம் இடம் பிடித்த பெண் யார்? தீபிகா குமாரி
05. சர்வதேச சேமிப்பு தினம் எப்போது?
ஒக்டோபர் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைகள் இல்லை....

தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக, சிரேஷ்ட விரிவுரையாளர், என்.நாகேந்திரகுமார் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார். கருத்துக்களத்தையும் அவரே நெறிப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

மூதூர் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி தறீக் "மத தலைவர்களது பொறுப்புகள்" எனும் தலைப்பிலும், மலைமுரசின் ஆசிரியர் ஞானேஸ்வரன் "கல்வியியலாளர்களது பொறுப்புகள்" எனும் தலைப்பிலும் மனித உரிமை அமைப்பின் பணிப்பாளர் சிரோமன் ரங்கன "சிவில் சமூகங்களது நடவடிக்கைகளும், பொறுப்புகளும்" எனும் தலைப்பிலும் கருத்துரைகளை வழங்கினர்.

அத்தோடு சட்டத்தரணி திருமதி எஸ்.லக்ஷ்மிசிறி "நீதிமன்றத்தினதும் சட்ட அலுவலகர்களதும் பொறுப்புகள்" எனும் தலைப்பிலும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி எஸ்.பிரமிளா "அரச அலுவலகர்களது பொறுப்புகள்" எனும் தலைப்பிலும் தரம் தகன் பாடசாலை அதிபர் சிசிர செனாரத்தன "அரசியல்வாதிகளது பொறுப்புக்கள்" எனும் தலைப்பிலும் மணற்சேனை நலன்புரி நிலையத்தின் செயலாளர்நாகேஸ்வரன் "பொதுமக்களது பொறுப்புகள்" எனும் தலைப்பிலும் தமது கருத்துரைகளை வழங்கினர்.

அதனையடுத்து மக்கள் பிரதிநிதிகளின் குரல்களாக மனித உரிமைக் காப்பு மற்றும் மேம்பாட்டகத்தின் இயக்குனர் வண. பிதா யோகேஸ்வரன் அவர்களும், கடத்தப்பட்டுக் காணாமற்போனோர் சங்கத்தில் தலைவி ஆஷா அவர்களும் மற்றும் பலரும் தமது கருத்துக்களை வழங்கினர்.

பெரும்பாலோரின் கருத்துக்கள் மனித உரிமைகள் இலங்கையில் மறுக்கப்படுவதைத் துல்லியமாக எடுத்துக்காட்டியிருந்தன.

இவற்றின் தொகுப்பாகவே மக்களின் குரலாகவும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தாலே மீளிணக்கமும் சகவாழ்வும் சாத்தியமாகும் என்ற செய்தியை மனித உரிமை ஆணைக்குழு ஊடாக இலங்கை அரசிற்குத் தெரிவிக்கும் படி மக்களால் கோரப்பட்டுள்ளது.

## தேர்தல் கால....

நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் மிக முக்கிய வரலாற்றுச் சான்றுகளில் ஒன்று கருமலையூற்று பள்ளிவாயல். சுமார் 400வருட பழைமை வாய்ந்த இப்பள்ளிவாயலை படையினர் தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்ததால் அப்பகுதிக்குச் செல்ல யாரும் அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் அப்பள்ளியின் கட்டடம் படையினரால் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டது. அப்பகுதி மீனவர்கள் தந்த தகவலையடுத்து உடனடியாக இதனை மக்கள் மயப்படுத்தும் வேலையை ஊடகங்கள் மூலம் நான் மேற்கொண்டேன். நான் எதிர்க்கட்சி என்ற வகையில் பொய்ப் பிரசாரம் மேற்கொள்வதாக அப்போது கூறப்பட்டது.

எனினும், உண்மையை யாரும் மறைக்க முடியாது என்ற அடிப்படையில் அது வெளிப்பட்டு விட்டது. இச்சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண சபையில் இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரனையொன்றின் அடிப்படையில், சகல மாகாண சபை உறுப்பினர்களையும் ஒரு மாத காலத்துக்குள் அப்பகுதிக்கு அழைத்துச் சென்று நேரில் காட்டுவதாக முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் எங்களுக்கு வாக்குறுதி அளித்தார். ஆனால் அது நடக்கவேயில்லை என்றார் அவர்.

## வடக்குகிழக்கை .....

கேட்பது எந்தவகையில் நியாயம்? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடு என்ன? என்றும் அவர் வினவினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## கிழக்கு வம்சாவழி....

நேரடியாக நெஞ்சில் பட்டதை அடுத்து இதயத்துடிப்பு நின்ற நிலையில் நோத்விக் பார்க் என்ற வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்ட போதும் மாணவனின் உயிர் பிரிவடைந்துள்ளது.

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இம் மாணவனின் பெற்றோர் இங்கிருந்து இலண்டனுக்குப் புலம்பெயர்ந்து வாழந்து வருகின்றனர்என்பது குறிப்பிடத்தக்கது.

## பேபி 81....

எனத் தெரிவித்துள்ளார்.

"பேபி -81" என அறியப்பட்ட இக்குழந்தை தற்போது 10 வயதினைக் கடந்த நிலையில் பள்ளிக்குச் செல்லும் சாதாரண மாணவனாகப் பயணிக்கின்றார்.

சுனாமி தாக்கிய பொழுது பிறந்து 61 நாட்களே ஆன அபிலாஸ் அலைகளில் சுருட்டியெறிப்பட்டு உயிருடன் திரும்பி வந்தும் 51 நாட்கள் யாருடைய குழந்தை என்ற போரில் ஈடுபடுத்தப்பட்டவர் என்பதால் உலகப் புகழ் பெற்றார்.

சுனாமியால் குழந்தைகளை இழந்த பத்துப் பெற்றோர்கள் அபிலாஸைத் தமது குழந்தையென உரிமை பாராட்டியதே இப்போருக்குக் காரணமாயமைந்தது. டிஎன்ஏ பரிசோதனையின் பின்னர் தற்போது கிழக்கில் குருக்கள் மடத்தில் பெற்றோருடன் வசித்துவரும் அபிலாஸ் கல்முனை வைத்தியசாலையில் எண்பத்தியொறாவது நபராக அனுமாதிக்கப்பட்டதால் பேபி 81 எனச் செல்லப் பெயரிடப்பட்டிருந்தார்.

அவரது பெற்றோர்கள் தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகய் யாவும் காற்றில் பறக்க விடப்பட்டன எனத் தெரிவித்துள்ளனர்.

அபிலாஸ் தொடர்பான செய்தி உலகத்தின் காதுகளுக்கு எட்டியதுடன் அவரது பெற்றோருக்கு வழங்கப்பட்ட பல உறுதி மொழிகளே அடுத்த ஆறு மாதத்திற்குள் காற்றில் பறக்க விடப்பட்டன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(நன்றி - அன்ரனி டேவிட் -டிபிஏ)

## காட்டிக்கொடுப்பே....

மேலும், செசனியா, லிபியா, தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்தும் சிஐஏயின் இந்த இரகசிய அறிக்கையில் உதாரணம் காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கிளர்ச்சியை முறியடிக்க, இலங்கை அரசாங்கம், புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் அவருக்கு நம்பிக்கையானவர்களைக் கொலை செய்வதற்கு 1983ம் ஆண்டு தொடக்கம், 2009 மே வரையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்த இரகசிய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை மோசமான அதேவேளை, மிகவும் புத்திசாதுரியமான, இனத் தேசியவாத அமைப்பாக இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கருமலையூற்று....

நடைபெற்ற இந்த ஜும்மா தொழுகையில் கருமலையூற்று ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகளான அதன் தலைவர் எம்.எச்.அப்துல் கரீம், உபதலைவர் ஏ.ஏ.எம்.றமீஸ், செயலாளர் எம்.ஐ.சுபைர், திருகோணமலை பட்டினமும்சூழலும் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.பீர், கிண்ணியா நகரசபை தலைவர் வைத்தியர் எம்.ஹில்மி, சுமையா அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் எம்.ரீ.மஹ்மூத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஜும்மா பிரசங்கத்தை நிகழ்த்திய கிண்ணியா ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் ஏ.எம்.ஹிதாயதுல்லாஹ், "இந்தப் பள்ளிவாசலில் தொடர்ந்து தொழுகை இடம்பெறுவதற்கும் பள்ளிவாசலை சிறப்பான முறையில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்வதற்கும் கருமலையூற்று பள்ளிவாசலைச் சூழ வாழ்ந்து இப்பொழுது வேறிடங்களில் வெளியேற்றப்பட்டிருக்கும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். இதற்காகாக சகலரும் பேதங்களை மறந்து முயற்சிக்க வேண்டும்" என்றார்.

## கும்புறுப்பிட்டி...

அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அப்பகுதி மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து 2014.09.29 இடம் பெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இவ்விடயம் சம்பந்தமாக கிழக்குமாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் வினவியபோது குறித்த சின்னக்கரச்சி பகுதியில் அமையவிருக்கும் தனியார் உப்பளத்திற்கான வேலைத்திட்டம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக ஆளுனரால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் இணைத் தலைவர், பொருளாதார பிரதிஅமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் தெரிவித்தனர்.

எனினும் தற்போது மீண்டும் அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 140 எக்கர் அளவிற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கும் பகுதியில், அப்பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் வறுமையான மக்கள் மீன், நண்டு, இறால் பிடித்து ஜீவனோபாயம் நடாத்தி வருகிறார்கள். இந்தநிலையில் இவ் உப்பளத்திற்கான அனுமதி அப் பகுதிமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்பதோடு, சின்னக்கரச்சி பகுதிக்கு அண்மையில் அமைந்து இருக்கும் பெரியகரச்சியில்தான் ரைகம் (Raigam) தனியார் உப்பளம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் உப்பளம் அமைக்கப்பட்டபின் அர்களும் சிறிய கரச்சிபகுதியில் ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகிறார்கள். ஏழ்மையான எமது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் இவ்வுப்பளத்தை மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இத்தகைய மக்களின் எதிர்ப்பின் மத்தியில் கடந்த 14.12.2014 (ஞாயிற்றுக் கிழமை) மீண்டும் அவ் உப்பளத்தின் வேலைகளை மேற்கொள்வதற்காக சில பணியாளர்கள் குறித்த இடத்திற்கு வந்ததை அடுத்து அங்கு பெரிய குழப்பநிலை ஏற்பட்டுள்ளது பின்னர் அதனைத் தொடர்ந்து கிழக்குமாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அவர்களும் மலைமுரசின் பத்திரிகையாளரும் குறித்த இடத்திற்கு சென்று அங்குள்ள மக்களுடனும், காவல்துறை அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளனர். அதனை அடுத்து இப்பிரச்சினையை தற்போது ஒரு முடிவுக்குக் கொண்டு வருதல் மிகச் சிரமமானது எனவே ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை இப்பிரச்சினையை ஆறப்போடுவது குறித்தும், எந்த ஒரு பிரச்சினையையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் அது வரை அவ் உப்பளத்திற்கு பணியாளர்கள் எவரும் வருகை தரக் கூடாது என்றும் இரு தரப்பினராலும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்குறித்த பிரச்சினைக்கு தேர்தலின் பின்னர் ஒரு சிறந்த முடிவு எடுக்கப்படும் என ஜனார்த்தனன் அப்பிரதேச மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

முதற்கட்ட இரகசியத் தகவல்கள் கிடைத்ததையடுத்து. புலிகளின் தலைவர் பிரபாகரனையும், முக்கிய தலைவர்களையும் கொல்வதற்கு, இலங்கை அரசாங்கம் தனது விமானப்படை மூலம், பதுங்குகுழிகளை அழிக்கும் குண்டுகளைப் பயன்படுத்தி, 2007 நவம்பரிலும், 2008 ஜனவரியிலும் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2007 நவம்பர் 2ம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் ஏனைய தலைவர்களும் துல்லியமான இலங்கை இராணுவக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டதற்கு காட்டக்கொடுப்பெ காரணம் எனக் சொல்லப்பட்டுள்ளது

## வாக்குரிமையில்லை....

எதுவும் செய்து தரப்படவில்லை என்றும் வாக்குரிமை வழங்கப்படவில்லையென்றும் பிரதேச செயலகம் மாவட்ட செயலகம் என்பவற்றில் தமது பதிவுகள் எதனையும் பெற முடியாதுள்ளதாகவும் இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரும் முகமாகவே தாம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 80க்கும் மேற்பட்டோர் கைக் குழந்தைகளுடன் கலந்துகொண்டனர். ஜனாதிபதியை சந்திக்கும் வரை தாம் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பிரதான காவல் நிலையத்திற்கு முன்பான வீதியிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவி ஆசை

## அண்ணன் எப்ப சாவான்:
## திண்ணை எப்ப காலியாகும்



கடந்தவாற தொடர்ச்சி .. ..

**அபூபக்கர்(ச) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர்கள்:**

உமர்(வ) அவர்களும் மக்காவைச் சேர்ந்தவர்கள். இவ்வாறே உஸ்மான்(வ), அலி(வ), ஹஸன்(வ), முஆவியா(வ), ஸைத்(வ) எனத் தொடராக வந்த அத்தனை கலீபாக்களும் மக்காவைச் சேர்ந்தவர்களாவர். மதீனாவைச் சேர்ந்த எவரும் கலீபாவாக வந்ததே இல்லை.

இந்தளவுக்குப் பதவியை விட்டுக் கொடுத்த அந்தத் தூய சமூகத்தைத்தான் அண்ணன் எப்ப சாவான்? திண்ணை எப்ப காலியாகும் என்ற மாதிரி பதவிக்காகக் காத்துக் கொண்டிருந்த சமூகமாக அன்ஸாரித் தோழர்களைக் கயவர் கூட்டம் சித்தரிக்கின்றது. இதையும் குர்ஆன், ஸுன்னா பேசும் ஒரு கூட்டம் ஏற்றுக் கொள்கின்றது என்பதுதான் ஆச்சரியமாக உள்ளது.

நபி(ச) அவர்களின் மரணத்தின் பின்னர் 'ஸகீபா பனூ ஸாஇதா'வில் நடந்தது பற்றி ஸஹீஹ் புஹாரியில் இப்படி வருகின்றது.

'அப்போது, அபூ பக்கர்(வ) அல்லாஹ் வைப் புகழ்ந்து அவனைப் போன்றிவிட்டு, 'முஹம்மத்(ச) அவர்களை வணங்கிக் கொண்டிருந்தவர், முஹம்மத்(ச) அவர்கள் இறந்து விட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளட்டும். அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருந்தவர்' அல்லாஹ் (என்றும்) உயிர் வாழ்பவன் அவன் இறக்கமாட்டான் என்பதைப் புரிந்து கொள்ளட்டும்' என்று கூறினார்கள். மேலும், 'நபியே! நீங்களும் இறப்பவர் தாம் அவர்களும் இறப்பவர்களே' என்னும் (திருக்குர்ஆன் 39:30 ஆம்) இறை வசனத்தையும், 'முஹம்மது ஓர் இறைத் தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன்னரும் கூட பல இறைத்தூதர்கள் (வந்து) சென்றிருக்கிறார்கள். எனவே, அவர் இறந்துவிட்டாலோ, (போரில்) கொல்லப்பட்டு விட்டாலோ நீங்கள் உங்கள் கால் சுவடுகளின் வழியே (பழைய மதத்திற்கே) திரும்பிச் சென்று விடுவீர்களா? (நினைவிருக்கட்டும்:) எவன் அவ்வாறு திரும்பிச் செல்கிறானோ அவனால் அல்லாஹ்விற்கு எத்தகைய தீங்கும் செய்துவிட முடியாது. நன்றி செலுத்தி வாழ்பவர்களுக்கு அல்லாஹ் அதற்குரிய பிரதி பலனை மிக விரைவில் வழங்குவான்' என்னும் (திருக்குர்ஆன் 03:144-ம்) இறை வசனத்தையும் ஓதினார்கள். உடனே மக்கள் (துக்கத்தால் தொண்டையடைக்க) விம்மியழுதார்கள்.

தொடரும் .. ..




# கிறிஸ்மஸ் ஸ்பெஷல்



## கத்தரிக்காய் மாசிக்கறி

**தேவையான பொருட்கள்**



ாம், சிறிதாக வெட்டிய வெங்காயம் - 3மே.க, சிறிதாக வெட்டிய ).க, சிறிதாக வெட்டிய உள்ளி - 1தே.க, சிறிதாக வெட்டிய கடலை 50கிராம், மாசிக் கருவாட்டுத் தூள் - 3மே.க, வெந்தயம் ;, பெருஞ்சீரகம் - 1தே.க, பெருங்காயம் - 1குண்டுமணியளவு, பழப்புளி - அளவாக, தடிப்பான தேய்காய்ப்பால் - 1 தம்ளர், மஞ்சள்த்தூள் - 1 தே.க, உப்பு - அளவிற்கு, தேங்காயெண்ணெய் - அரை போத்தல், கறி மிளகாய்த்தூள் - 1மே.க

**செய்முறை**

கத்தரிக்காயை ஓரளவு தடிப்புள்ள சிறு துண்டுகளாக வெட்டிக் கழுவி மஞ்சள்த் தூள் சேர்த்துக் குழைத்து கொதிக்கும் எண்ணெயிலிட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுத்துக் கொள்க. கடலையை ஊறவைத்து அவித்தெடுத்து வேறாக வைக்கவும். பழப்புளியை 5 மே.க தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும். தாச்சியில் இரண்டு மேசைக்கரண்டி எண்ணெயைக் காயவைத்துக் காய்ந்த பின் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், உள்ளி, கறிவேப்பிலை என்பவற்றையிட்டு வதங்க விட்டு அரைப்பதமாக வதங்கியவுடன் வெந்தயம், வெந்தயம், பெருஞ்சீரகம் என்பவற்றையும் இட்டு வதங்கவிடவும். பின்பு அதனுள் அளவான உப்பு, மிளகாய்த்தூள், பழப்புளிக் கரைசல், பால் என்பவற்றை விட்டு பெருங்காயத்தை அப்பாத்திரத்தின் மூடியில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அரைத்து அம்மூடியால் மூடி அவியவிடவும். தூள் அவிந்து வாசனை வரும் போது, பொரித்த கத்தரிக்காய் மற்றும் கடலை, மாசிக் கருவாட்டுத் தூள் என்பனவற்றையிட்டு கறி நீர் வற்றிச் சுண்டித் திரளும் போது இறக்கிக் கொள்ளவும்.



## குங்குமப்பூவினால் பொலிவு

குங்குமப்பூ சிறிது விலை அதிகம் என்றாலும், அது தரும் பலன்கள் பல என்றே கூறலாம். குங்குமப்பூவை உரசி ஒரு டேபிள் ஸ்பூன் தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊற விடவும். குங்குமப்பூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணைய் கலந்து நன்றாக குழைக்கவும். இந்த கலவையை தினமும் பூசி வர உதடுகள் செவ்வாழை நிறம் மாறுவது மட்டுமின்றி, உதடுகளின் வறட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். மேலும் முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் மறைந்து விடும்.

இந்த கலவையை நகங்கள் மீது பூசி வர நகங்களும் இயல்பான நிறம் பெறும். நக சுத்தி வந்து அழுகிப் போன நகங்கள், உடைந்து போன நகங்கள் போன்றவற்றை குங்குமப்பூ- வெண்ணைய் கலவையானது சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும்.

**பளபளப்பான சருமத்தை பெறுவதற்கு**



குங்குமப்பூவை பொடியாக்கி வைத்துக் தினமும் ஒரு சிட்டிகை அளவு எடுத்துக் கொள்ளவும்.

பிறகு அதில் சில சொட்டுக்கள் பால் விட்டு கலந்து குழைத்துக் கொள்ளவும்.

இந்தக் கலவையை முகத்தில் பூசி வர, முகத்தில் படர்ந்துள்ள கருமை நிறம் குறைவதை கண் கூடாகக் காணலாம்.




## மார்பகப் புற்றுநோயினால் ஏற்படும் அழிவைக் குறைக்க...



உடல் எடையினைக் குறைப்பதன் மூலம் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மரணமடைவதற்கான ஆபத்தை குறைக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஒரு தசாப்த காலமாக 2400 பெண்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் அடிப்படையிலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது எடையில் 5 பவுண்ட்களை குறைப்பதன் மூலம் மரணத்திலிருந்து தப்பிப்பதற்கான வாய்ப்பு 70 சதவீதம் வரை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## முள்ளங்கிக் கீரையின் அம்சங்கள்

முள்ளங்கி மண்ணுக்கு அடியில் தோன்றும் கிழங்கு ஆகும். அதன் மேல்பாகத்தில் வளரும் கீரையே முள்ளங்கிக் கீரை என்று அழைக்கப்படுகிறது. இக்கீரைக்கு மருத்துவக் குணங்கள் உண்டு என்றாலும் அடிக்கடி சேர்த்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் இக்கீரை வயிற்றில் புழுக்களை உண்டாக்கும். பித்தத்தையும் அதிகரிக்கும். வாய்வுத் தொல்லையை உண்டாக்கும். இருப்பினும் வெள்ளையால் வரும் நீர் அடைப்பிற்கு முள்ளங்கியைப் போலவே இக்கீரையும் பயன்படுகிறது. இக்கீரையின் தளிர்களைப் பறித்து, சோற்று உப்புடன் சேர்த்து தினமும் காலையும் மாலையும் உண்டு வந்தால் வெள்ளையால் உண்டாகும் நீர் அடைப்பு விலகும். இக்கீரை கல்லீரலில் உண்டாகும் பல கோளாறுகளைக் குணப்படுத்தும்

அதுபோல் இருதயத்திற்கும் பலம் சேர்க்கும். இதயப் படபடப்பு, இதய பலவீனம் உடையவர்கள் அவ்வப்போது இக்கீரையை உணவில் சேர்த்துக் கொண்டால் பலன் கிட்டும்.

## மருத்துவத் தாவரங்கள்



இஞ்சி - பித்தத்தை போக்கும்
வல்லாரை - ஞாபகசக்தியை அதிகரிக்கும்
முசுமுசுப்பை துளசி - சளிக்கு உகந்தது
கீழ்நெல்லி - மஞ்சள் காமாலைக்கு உகந்தது
தூதுவளை - மார்புச் சளிக்கு உகந்தது
ஆமணக்கு - மலச்சிக்கலை நீக்கும்
ஆடாதோடை சாறு - இருமலை நீக்கும்
சோற்றுக் கற்றாளை - தோல் நோயை போக்கும்
அறுகம் புல் சாறு - மாதவிடாயை குணப்படுத்தும்

திருமதி.ரீட்டா
வரோதயநகர்

## எந்நேரமும் சோம்பலாக இருக்கின்றதா??

ஒருவர் எப்போதும் சோம்பலாக இருப்பதற்கு போதிய தூக்கமின்மையே காரணமாக அதிகளவானர்கள் கருதுகின்றனர். ஆனால் அதனையும் தாண்டில் பல்வேறு விடயங்கள் காரணமாக அமைகின்றன.

**அவற்றுள் சில பின்வருமாறு,**



- போதியளவு நீர் அருந்தாமை
- சோம்பலான நேரங்களில் உடற்பயிற்சிகளை கைவிடுதல்
- போதியளவு இரும்புச் சத்தினை உள்ளெடுக்காமை
- காலை உணவை தவிர்த்தல்
- தரம் குறைந்த உணவுகளை உள்ளெடுத்தல்
- பிரச்சினைகளால் மனதளவில் பாதிப்பு
- அலுவலகங்களில் உண்டாகும் பிரச்சனைகள்
- விடுமுறை காலங்களிலும் வேலை செய்தல்
- தூக்கத்திற்கு செல்ல முன்பு அல்கஹால் உள்ளெடுத்தல்
- படுக்கையில் மின்னஞ்சல்களை பார்வையிடல்
- காபைன் கொண்ட உணவுகளை உள்ளெடுத்தல்

போன்றவற்றினாலும் இயல்புநிலை பாதிக்கப்பட்டு சோம்பல் நிலை உண்டாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம் :** எதிர்ப்பாளரால் வருகிற தொந்தரவு பலமிழக்கும். உடல்நலம்ஆரோக்கியம் பெறும்.

**ரிஷபம் :** பணியாளர்கள், வேலையில் அக்கறையுடன் ஈடுபடுவது, நற்பெயர் பாதுகாக்க உதவும்.

**மிதுனம் :** சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். அதிர்ஷ்டவசமாக எதிர்ப்பு விலகி, வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்பு வரும்..

**கடகம் :** உறவினர், நண்பர் வீட்டு விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிம்மம் :** தாய்வழி உறவினர்களின் வருகை, வீட்டில் குதூகலம் ஏற்படுத்தும்.

**கன்னி :** கெடுபிடியான அணுகுமுறை உள்ளவரிடம் பணக்கடன் பெறக்கூடாது.

**துலாம் :** வாழ்வில் முன்னேற்றம் பெற, கிடைக்கிற வாய்ப்பை பயன்படுத்துவீர்கள்.

**விருச்சிகம் :** பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை தவறாமல் பின்பற்றவும்.

**தனுசு :** தொழில், வியாபாரத்தில் போட்டியை எதிர்கொள்ள பொறுமையும், புதிய யுக்திகளும் மட்டுமே உதவும்.

**மகரம் :** இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெற்று, பணவரவை அதிகரிக்கும்.

**கும்பம் :** வெளியூர் பயணத்தில், புதியவர்களிடம் அளவுடன் பேசுவது நல்லது. சிலர், புதிய வாகனம் வாங்க நல்யோகம் உண்டு.

**மீனம் :** தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பூர்வ சொத்தில் பணவரவு கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## சம்பியனானது கலைப்பீட அணி



யாழ்ப்பாண பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டியில் கலைப்பீடம் 307 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. இந்த விளையாட்டு போட்டி கடந்த சனிக்கிழமை (13.12.2014) யாழ். பல்கலைக்கழகத்தில், ஆரம்பமாகியதுடன் ஞாயிற்றுக்கிழமை (14.12.2014) இறுதி சுற்றுக்கள் இடம்பெற்றன. கலைப்பீடம், விஞ்ஞானபீடம், முகாமைத்துவ வணிகபீடம் மற்றும் மருத்துவபீடம் ஆகிய பீடங்களை சேர்ந்த மாணவர்கள் இந்த போட்டியில் பங்குபற்றினார்கள்.



கலைப்பீட மாணவர்களின் ஆதிக்கம் நிலைபெற்றாலும், கடந்த வருட சம்பியனான முகாமைத்துவ வணிகபீடம் கடும் சவாலை ஆரம்பம் முதல் மைதானத்தில் வெளிப்படுத்தியது. எனினும் இறுதியில் 307 புள்ளிகளை பெற்று கலைப்பீடம் சம்பியனாகியதுடன், இரண்டாமிடத்தை 273 புள்ளிகள் பெற்று முகாமைத்துவ வணிக பீடமும், மூன்றாமிடத்தை 134 புள்ளிகள் பெற்ற விஞ்ஞான பீடமும் பெற்றுக்கொண்டன.

## கண்டி அணி வெற்றி



முதற்தரக் கழகங்களுக்கிடையே இடம் பெற்று வரும் டயலொக் கிண்ணத்துக்கான றகர் லீக் போட்டித் தொடரில் மற்றுமொரு போட்டியில் கண்டி அணி வெற்றி பெற்றது. சீ.ஆர். என்ட். எப்.சி. அணிக்கும் கண்டி அணிக்குமிடையில் கண்டி நித்தவலை றகர் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (14.12.2014) மாலை இடம்பெற்ற இப்போட்டியில் கண்டி அணி 19 - 13 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிக விறு விறுப்பாக நடைபெற்றதுடன் போட்டி ஆரம்பித்து பத்தாவது நிமிடத்தில் இலங்கை றகர் அணியின் முன்னாள் தலைவரான பாசில் மரீஜா கண்டி அணிக்காகப் பெற்றுக் கொடுத்த ட்ரை மூலம் கண்டி அணி புள்ளிகள் பெற ஆரம்பித்தது.

வெளிநாட்டு வீரரான குயின்டன் மேலதிக புள்ளியைப் பெற்றுக் கொடுக்க இடைவேளை ஆகும் போது கண்டி அணி 7 - 0 என்ற நிலையில் முன்னிலை வகித்தது.

## வர்ண இரவுகள் - 2014

வர்ண இரவுகளில் சாதனை வீர, வீராங்கனைகளுக்கான விருதுகளை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழங்கினார். இந்நிகழ்வுக்கு இலங்கை தேசிய வலைபந்தாட்ட அணியில் இடம்பிடித்த வீராங்கனை சிவலிங்கம் தர்சினியும் கலந்துகொண்டு வீரர்களை பாராட்டினார்.

தடகளம், மைதானம் மற்றும் அணிகளுடனான போட்டிகளில் தேசிய ரீதியில் திறமையை வெளிக்காட்டிய வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக விமானப்படையின் கூடைபந்தாட்ட அணியில் இடம்பெற்ற யாழ். இந்து கல்லூரி வீரன் வாகீசன், இலங்கை கால்பந்தாட்ட குழாமில் இடம்பிடித்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் செபமாலை ஞானரூபன் ஆகியோர் சுட்டிக்காட்டப்படவேண்டியவர்கள்.



இதனைவிட, தேசிய பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் தங்கள், வெள்ளி, வெண்கலம் மற்றும் வர்ண விருதுகள் பெற்று சாதனை படைத்த வீர, வீராங்கனைகள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.



## திருமணத்திற்கு முன்னரே ...



இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித் தலைவராக இருப்பவர் விராட் கோஹ்லி. இவரும் பிரபல இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவும் திருமணத்திற்கு முன்னே சேர்ந்து வாழப் போவதாக பிரபல ஆங்கில பத்திரிக்கை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது. அனுஷ்காவும், கோஹ்லியும் பிரபலமாக இருப்பதால் இருவருக்கும் நேரம் கிடைப்பதில்லை. அதனால் இருவரும் தங்களுக்கு கிடைக்கும் நேரத்தை ஒன்றாக செலவிட அனுஷ்கா தனது அடுக்கு மாடி குடியிருப்பின் பக்கத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தியுள்ளார்.

## ஜெயவர்த்தன ஓய்வு

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ளதால் இலங்கை மண்ணில் அவர் பங்கேற்ற கடைசி ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. கடந்த ஆகஸ்ட் மாதம் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து மஹேல ஓய்வு பெற்றிருந்தார். இந்த நிலையில் அவர் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டி முடிந்ததும் ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற முடிவெடுத்துள்ளார்.



## சதம் அடித்தேனா! நானா??



பிரிஸ்பன் டெஸ்ட் முதல் நாள் ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய முரளி விஜய் 144 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் 99 ஓட்டங்களில் முரளி விஜய் பதற்றமடைந்து ஆட்டமிழந்தார். அதனால் இந்த முறை ஓட்டங்கள் பலகையை பார்க்காமல் விளையாடினார். இதனால் அவருக்கு சதம் எடுத்தது கூட தெரியாமல் போய்விட்டது.

இது பற்றி அவர் கூறுகையில் கடந்த முறை நான் 99 ஓட்டங்கள் என்று அறிந்திருந்தேன். ஆனால் சதம் எடுக்கவில்லை. இந்த முறை என் ஓட்டங்கள் ஏ்ன்னவென்றே தெரியாது. ஆனால் சதம் கிடைத்தது. நான் அணியின் ஓட்டங்கள் மற்றும் எனது ஆட்டத்தில் மட்டும் குறியாக இருந்தேன். அஜிங்கிய ரஹானே எதிர்முனையில் இருந்தார். அவர் தான் நான் சதம் எடுத்து விட்டேன் என்று கூறினார் என்று சென்னார்.

## மீண்டுமொரு சவால்

### மொடல் அழகி

உலகக்கிண்ண கால்பந்து தொடரின் போது நட்சத்திர வீரர் மெஸ்ஸிக்கு சவால் விட்ட அர்ஜென்டினாவின் மொடல் அழகி மீண்டும் வித்தியாசமான முயற்சியில் இறங்கினார். 2014ம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கால்பந்து தொடர் பிரேசிலில் நடந்தது. அப்போது அர்ஜென்டினாவின் மொடல் அழகி பியோரெல்லா காஸ்டிலோ, இபானெமா கடற்கரையில் தனது 'சூப்ரீ ஸ்டைலிங்' திறமையை காட்டி அசத்தினார். மேலும் தன் திறமையால் 800 ஆண்களை அந்த கடற்கரையில் வீழ்த்தினார். தவிர, பார்சிலோனா அணியின் சூப்பர் ஸ்டாராக இருக்கும் மெஸ்ஸியையும் வீழ்த்துவேன் என சவால் விட்டார். தற்போது வித்தியாசமான முயற்சியாக பெரிய சூஹீல்ஸ் அணிந்து தரையில் படுத்தும், நின்று கொண்டும் பந்தை காலால் சுழற்றி சுழற்றி அடித்து கோல் கம்பத்திற்குள் தள்ளுகிறார்.



## 7வதிலும் இல வெற்றி

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையில், கொழும்பு - ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற்ற 7ஆவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 87 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களைக் குவித்தது.

## கன்னியில் சாதனை

இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர் ஹஸில்வூட் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் மிகவும் அபாரமாக பந்துவீசி, 68 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட் கைப்பற்றினார். தனது முதல் டெஸ்டிலேயே 5 விக்கெட் கைப்பற்றிய 143 ஆவது பந்துவீச்சாளராக ஹஸில்வூட் தனது பெயரை பதிவு செய்துள்ளார். அவர் புஜாரா, விராட் கோலி, ரஹானே, டோனி, அஸ்வின் ஆகிய முக்கிய விக்கெட்டுகளை கைப் பற்றினார்.



## படகு போட்டி நடக்கவிருக்கும் கடலில் பக்டீரியா


பிரேசிலில், ரியோ டி ஜெனிரோ 2016 ஒலிம்பிக் போட்டிகளின் போது படகு ஓட்ட போட்டிகள் நடக்கவிருக்கும் கடற்பகுதியில் மருந்துகளுக்கு கட்டுப்படாத பக்டீரியா இருப்பதாக அந்த நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பொதுவாக மருத்துவமனைக் கழிவுகளில் காணப்படும் இந்த சூப்பர் பக்டீரியாக் கிருமி, சிறுநீரக மற்றும் வயிற்றுப் போக்கு நோய்களை உண்டாக்குவதாகும். குவானபாரா குடாவில் கலக்கும் ஆறு ஒன்றில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரியில் இருந்து இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## குக்கை நீக்க வேண்டும்

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி 7 போட்டி கொண்ட ஒருநாள் தொடரை 2-5 என்ற கணக்கில் இழந்தது. இதனால் இங்கிலாந்து அணித் தலைவர் அலிஸ்டர் குக் மீது விமர்சனம் எழுந்து உள்ளது. இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் குசைன் கருத்துத் தெரிவிக்கையில், உலகக் கிண்ணத்திற்கு முன்பு ஒருநாள் போட்டி அணித் தலைவர் பதவியில் இருந்து அலிஸ்டர் குக்கை மாற்ற வேண்டும். அவர் டெஸ்ட் போட்டிக்கு ஏற்றவராக தான் இருக்கிறார் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்குகிழக்கை இணைக்க மாட்டோம் - பீரிஸ் உறுதி

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில்லை என்பதும் நீதிமன்றத்தினால் பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்குமாகாணங்களை மீண்டும் இணைப்பதில்லை என்பதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' தலைமையிலான அரசாங்கத்தின் தெளிவான கொள்கையாகும். ஆனால் இந்த விடயங்களில் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடு என்ன என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

ஆனால் இந்த விடயங்களில் எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடு என்ன என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றுக்கு இணங்கியுள்ளார். அந்த உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் என்ன? அதில் எட்டப்பட்ட உடன்பாடுகள் என்னவென்று நாட்டுக்கு கூறவேண்டும். இந்த விடயங்களை நாட்டு மக்களுக்கு கூறாமல் வாக்குகளை 17

# கருமலையூற்றில் முதல் தொழுகை



திருகோணமலை மாவட்டத்தின் கருமலையூற்று ஜும்மா பள்ளிவாசலில் ஐந்து வருடங்களின் பின்னர் இன்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை நடைபெற்றது.

கடந்த ஐந்து வருடங்களாக அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த இந்தப் பள்ளிவாசல் அதன் நிர்வாகத்தினரிடம், படையினரால் 08.12.2014 அன்று ஒப்படைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே இந்தப் பள்ளிவாசலில் தொழுகை நடைபெற்றது.

பிரதேச முஸ்லிம்களும் அயல் கிராம முஸ்லிம்களுமாக 300 பேருக்கும் மேற்பட்டோர் இந்தத் தொழுகையில் கலந்துகொண்டனர்.

கிண்ணியா ஜம்மிய்யத்துல் உலமா சபையின் தலைவர் ஏ.எம்.ஹிதாயதுல்லாஹ் தலைமையில் 17

# தேர்தல் கால விளையாட்டே பள்ளிவாசல் திறப்பு

கருமலையூற்று பள்ளிவாயல் மீண்டும் திறக்கப்பட்டமையானது தேர்தல் கால மாயாஜாலம் எனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வெற்றி பெற்றால் தற்போது திறந்து விடப்பட்டுள்ள கருமலையூற்று பள்ளிவாயல் மீண்டும் படையினரின் கட்டுப்பாட்டில் வந்து விடும் எனவும் கிழக்கு மாகாணசபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியா, காக்காமுனையில் றபாய்தீன் தலைமையில் திங்கட்கிழமை மாலை(15) 17

# காட்டிக்கொடுப்பே தமிழ்ச்செல்வனின் மரணத்திற்குக் காரணம்

**- விக்கிலீக்ஸ் -**

விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் ஏனைய தலைவர்களும் துல்லியமான இலங்கை இராணுவக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டதற்கு, பிரபாகரனின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் தரையில் இருந்து வழங்கிய தகவல்களே காரணம் என்று சிஜஏ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளின் போது, உயர் பெறுமான இலக்குகளை படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பான, அமெரிக்க புலனாய்வு அமைப்பின் இரகசிய அறிக்கை ஒன்றை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

2009ம் ஆண்டு ஜுலை மாதம் 7ம் நாள் இடப்பட்டுள்ள 21 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை, அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பான சிஜஏயின், நாடுகடந்த விவகாரங்களுக்கான பிரிவினால் 'கிளர்ச்சி முறியடிப்பில் மிகச்சிறந்த நடைமுறைகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில்,(2001- ஜுன் 2009), அல்ஜீரியாவில் (1954-1962), கொலம்பியாவில் (2002-ஜுன் 2009), ஈராக்கில் (2004- ஜுன் 2009), இஸ்ரேலில் (1972 தொடக்கம்1990களின் நடுப்பகுதி, 1990களின் நடுப்பகுதி தொடக்கம், 2009 ஜுன் வரை), பெருவில் (1980-1999), வடஅயர்லாந்தில் (1969-1998) மற்றும் இலங்கையில் (1983 – மே 2009) கிளர்ச்சி முறியடிப்பில், உயர்பெறுமான இலக்குகள் குறிவைக்கப்பட்ட விதம் குறித்து இதில் விபரிக்கப்பட்டுள்ளது. 17

# வாக்குரிமையில்லை மக்கள் போராட்டம்

ஜனாதிபதியை சந்திக்காமல் செல்ல மாட்டோம் என மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் வாழ்கின்ற சில பெரும்பான்மையின மக்கள் மட்டக்களப்பு நகரில் 19ம் தகித ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புளுக்குனாவை பகுதி மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தேர்தல் பிரசாரத்திற்காக மட்டக்களப்புக்கு வருகைதரவிருக்கும் நிலையில் தேர்தல் பிரசாரகூட்டம் நடைபெறவிருக்கும் பகுதிக்கு அருகிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுவருகின்றது.

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் குறித்த பகுதியில் தாம் மீள் குடியேற்றம் செய்யப்பட்டபோதும் தமக்கு அடிப்படை வசதிகள் 17

# சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு


நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இரண்டு கட்டங்களாக இந்த பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே புஷ்பகுமார தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் முதல்கட்ட பணிகள் நாடு முழுவதிலும் உள்ள 83 பாடசாலைகளில் இம்மாதம் 28 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிடுகின்றார்.

இரண்டாம் கட்ட மதிப்பீட்டு பணிகளை ஜனவரி 20 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை 13 பாடசாலைகளில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு பணிகளில் 32 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறுகின்றார்.

# ஆஞ்சனேய ஜெயந்தி விழா



உவர்மலை கீழ் (லோவர்) வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ விஷ்வரூப ஆஞ்சநேயர் ஆலய வருடாந்த ஜெயந்தி விழா கடந்த 12.12.2014 அன்று பூமாலை பூசையுடன் ஆரம்பமாகியுள்ளது. (20.12.2014) சனிக்கிழமை அன்று ராமநாம பூசை இடம்பெற்று தொடர்ந்து ஞாயிற்றுக் கிழமை செந்தூரக் காப்பு பூசை இடம்பெறவுள்ளது. அத்துடன் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் ஜெயந்தி விழா இடம்பெறும். தீர்த்தத் திருவிழாவுக்கு காலை 7.00 மணிக்கு திருவருள் கூடியுள்ளது. அன்று எம்பெருமான் ஆலய வெளி வீதி வலம் வந்து ஆலய சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும். மேலும் இறுதியாக 23.12.2014 அன்று வெண்ணைக் காப்பு அலங்காரத்துடன் பூங்காவனமும் தெப்பத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. "ஜெய் ஜெய் ஸ்ரீராம்" எனக் கூறும் அடியார்களுக்கு சற்றும் யோசிக்காமல் அனைத்து பலன்களையும் தந்து ஆபத்தில் உதவும் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியை மன நம்பிக்கையுடன் ஆராதனை செய்தாலே போதும் அனைத்தும் கிடைக்கும். அவரை வழிபட்டு அவரது பூஜையில் கலந்து கொண்டு நற்பலன்களை பெற்றேகுமாறு அடியார்களை ஆலய நிர்வாகத்தினரும், ஏற்பாட்டாளர்களும். அன்புடன் அழைக்கின்றனர்

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (குனி) நிறுவனத்தால் 159A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 20.12.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org